தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 139 • 22.04.2018










## வில்லாதிவில்லன் ஸ்டோன் கோல்ட்



# திலீபன் நினைவுத்தூபி அரசியல்

## பதுங்கிப்பாய்ந்த சுரேஷ் வவுனியா நகரசபையில் நடந்தது என்ன?



## வடக்கு முதலமைச்சர் பட்டியலில் சுமந்திரனும் இருக்கிறாரா?




# கலரடிச்சுக்கோ... உன்னை நீயே கண்டுபிடிச்சுக்கோ!



படங்களுக்கு கலர் செய்யும்போது, எந்த கலர் உங்களுக்குப் பிடிக்குமோ அதை அதிகம் பயன்படுத்துவீர்கள். அப்படி நீங்கள் அதிகம் விரும்பும் கலரைவைத்து உங்களின் குணாதிசயத்தைப் பற்றிச் சொல்லமுடியும் என்கிறார்கள்.

இந்தப் படத்துக்கு நீங்கள் அதிகம் பயன்படுத்திய கலர் எதுவோ, அதை வைத்து உங்களைப் பற்றிய கணிப்பை சொல்கிறோம்.

- **கறுப்பு:** வாழ்க்கை எப்போதும் உங்கள் கைக்குள் இருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள்.
- **சாம்பல்:** நீங்கள் எப்போதும் அமைதியை நிலைநாட்ட முயல்வீர்கள்
- **சிவப்பு:** செயலில் கவனம் செலுத்தித் துணிச்சலான முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.
- **ஊதா:** மனித நேயத்துக்கும் மனித உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பீர்கள்.
- **இளஞ்சிவப்பு:** உங்களை உங்களுக்காகவே ஏற்றுக் கொள்ளும் மனிதர்களை விரும்புவீர்கள்.
- **மஞ்சள்:** எப்போதும் உங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்த நினைப்பீர்கள்.
- **பழுப்பு:** நிம்மதியும் மகிழ்ச்சியும் மட்டுமே நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்.
- **ஓரேஞ்ச்:** சமூகத்தில் எளிதாக ஒன்றிணைந்து பழகுவீர்கள்.
- **நீலம்:** உங்களுக்குள் இருக்கும் ஓர் அமைதியைத் தேடுவீர்கள்.
- **பச்சை:** மரியாதை மிகவும் முக்கியம் என நினைப்பீர்கள்.




TOPAZ Mall (Pvt) Ltd.
NO 1 TOPAZ
TOPAZ
No.01 Shop in Jaffna

திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை கூடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

மிஸ் குட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் குட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்



We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643

TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933

Email : topazagn@gmail.com

coustomer is king





பூங்கனிச்சோலை

க.ஆனந்தராசா
88, இராமநாதபுரம் வட்டகச்சி

உங்களுக்கு தேவையான அனைத்து பயன்தரும் மரக்கன்று வகைகளை பெற்றுக் கொள்ள கிளிநொச்சியில் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.


பூங்கனிச்சோலை பொதுச்சந்தை கிளிநொச்சி



# விரட்டி அடிக்கும் சூரியனிடம் இருந்து தப்பிப்பது எப்படி?


## ஒரு கலகல போட்டோ கலக்ஷன்!

ஏப்ரல், மே மாதங்களில் எங்களுக்கு பிடிக்காத பேர். இதுவரைக்கும் எத்தனையோ வருஷம் மழைக் காலத்துல மழை வராம இருந்திருக்கு, குளிர் காலத்துல குளிர் அடிக்காம இருந்திருக்கு. ஆனா, இந்த வெயில் காலத்துல மட்டும் வெயில் அடிக்காம இருந்து நாம பார்த்திருக்கோமா? இல்லவே இல்ல. சூரியனுக்கு நம்ம மேல அம்புட்டு பாசமா... இல்ல காடுகள எல்லாம் அழிச்சுட்டதுனால நம்ம மேல அம்புட்டு கோபமான்னு தெரியல. கடந்த நாலஞ்சு வருஷமா நம்மள வறுத்து எடுக்கிறாரு. சரி! என்ன செய்ய முடியும்... பண்ண பாவத்துக்கு தண்டனைய அனுபவிச்சு தானே ஆகணும். ஆனாலும்..., சூரியனோட வெயில் தாக்கத்துல இருந்து தப்பிக்க சில வழிகள் இருக்குன்னு.. நம்ம பயலுக கண்டுப்பிடிச்சு வெச்சிருக்காங்க. ஒருவகையில இது உதவும்னாலும் கூட... இத நீங்க ட்ரை பண்ணிங்கனா.. அடுத்த வருஷ கட்டுரையில.. உங்க படமும் கூட இடம் பெறலாம். அதெல்லாம் நமக்கெதுக்கு கொஞ்ச நேரம் ரசிக்கவும், சிரிக்கவும்... கேலியான கோடைக்கால புகைப்படங்கள்....



என்ன சுகம்...

என்ன சுகம்.. ஆஹா என்ன சுகம்னு திறந்த மேனியா அமுலு குட்டி ஜாலியா வோஸ் பேசின்ல தூங்குறாங்க. அப்பா ஏசி வாங்கி தரலயாம். அதான் அம்மா இங்க படுக்க வெச்சுட்டு போயிட்டாங்க.




கோழியாரே

என்ன தான் இருந்தாலும் உமக்கு மூளை கொஞ்சம் கம்மி தான் கோழியே. சூரியன் அங்க சுட்டேரிச்சுட்டு இருக்காரு. உனக்கு முக்கியம் செருப்பு இல்ல, குடை. இப்படியே வெளியே போனா... சூரியனே உண்ண வறுத்து தின்னுடுவாறு. பார்த்து சூதானமா இருந்துக்க கோழியாரே!



வெயில் காயிராங்கலாம்...

பொதுவாக குளிர் அதிகமாக இருக்கும் போது, நாலஞ்சு விறகு கட்டை எல்லாம் எடுத்து கொளுத்திப் போட்டு குளிர் காய்வோம் அல்லவா. அத அப்படியே ரிவர்ஸ் பண்ணி, வெயில் கொளுத்தும் போதும், ஐஸ் கட்டிய ரோட்டுல போட்டு வெயில் காயிராங்கலாம். புத்திசாலிங்க நம்ம பசங்க.




அடடே!

அறிவா இருக்க பொண்ணுங்க எல்லாம் அழகா இருக்க மாட்டாங்க, அழகா இருக்க பொண்ணுக எல்லாம் அறிவா இருக்க மாட்டாங்கன்னு ஹிப்பாப் தமிழா இசை அமைச்ச பாட்டு பொய் ஆயிடுச்சு பாருங்களேன். இந்த பொண்ணு அழகாவும் இருக்கு, வெயில் கிட்ட இருந்து தப்பிச்சு எப்படி குளுகுளுன்னு இருக்கணும்கிற அறிவும் இருக்கு. சபாஷ்!



அட்ரா சக்க!

நம்ம ஆளுங்க அறிவு இருக்கே அத அடிச்சுக்கவே முடியாது. காருக்குள்ள, பஸ்குள்ள, ஏன் லொரிக்குள்ள கூட ஃபான் வெச்சு பார்த்திருப்பீங்க. பைக்குல பார்த்திருக்கீங்களா? இதோ பாருங்க. அண்ணன் ஒரு அறிவு பெட்டகம். இன்னொன்னு கவனிச்சீங்களா? அண்ணன் தலைக்கு மேல மட்டும் இல்ல, தன்னோட ஹாண்டில் பார் மேலையும் இன்னொரு ஃபான் வெச்சிருக்காரு.




தட் ஆசம் மொமன்ட்!

வெளிய நாள் முழுக்க சுத்திட்டு வந்து வீட்டுக்குள்ள புகுந்ததும் இப்படி யாராச்சும் தண்ணி டியூப் எடுத்து தண்ணிய பீச்சி அடிச்சாங்கன்னா.. அதானுங்க சொர்க்கம். வேற என்ன வேணும். சில சமயம் நீங்க இந்த காட்சி பார்த்திருக்கலாம். வாட்டர் பாக்கெட் வாங்கி குடிக்கிறாங்களோ இல்லையோ... மூஞ்சியில, கழுத்துல தண்ணிய பீச்சி அடிச்சுப்பாங்க. வெயில் அம்புட்டு ரணகளமா இருக்கு.



உருகுதே...

அடிக்கிற வெயில ஐஸ் க்ரீம் உருகுனா அதுல ஒரு நியாயம் இருக்கு. சாலையே உருகுனா அதுல என்ன சூரியனாரே நியாயம் இருக்கு. கொஞ்சம் இறக்கம் காட்டுன்னு உன்கிட்ட கேட்கவும் முடியாது. என்ன தான் உன்கிட்ட சொல்ற.. பேசாம கொஞ்சம் ஏற்றம் காட்டுன்னு சொல்லலாம்னு பார்த்தா.. அத நீ தப்ப புரிஞ்சுக்கிட்டு சூட்ட ஏத்திட்டா ஆத்தி எங்க கதி அதோ கதி தான். ஏதாவது பார்த்து பண்ணும் ப்ளீஸ்.



சிங்கிள்?

நீங்க சிங்கிளா பாஸ்ன்னு இவர பார்த்து யாராச்சும் கேள்வி கேட்கலாம். சாரி பாஸ். கமிட்டடாவே இருந்தாலுமே கூட ஏப்ரல் மேயிலே ஐஸ் கட்டிய தான் கட்டிப்புடிச்சு தூங்க முடியும். அந்த பக்கமா திரும்பி கட்டி பிடிச்சா எட்டி மிதிப்பாங்க. எல்லாம் அவன் செயல்.



செம்ம ஐடியா..

ஃபிரிட்ஜ் இருக்க ஒவ்வொருவரும் இந்த ஐடியாவ ட்ரை பண்ணலாம். ஆனா, என்ன அம்மா, பொண்டாட்டி கையில செமத்தியா அடிவாங்க வேண்டிய விபரீதம் ஏற்படலாம். இதவிட ஒரு நல்ல ஐடியாவும் இருக்கு பேசாமா யாரும் இல்லாத நேரமா பார்த்து வீட்டுல இருக்கு தொட்டி இல்ல, தண்ணி டிரம் குள்ள தஞ்சம் புகுந்திரலாம்.



ஏயார் கூலர் எதுக்கு?

ஐஸ் வாட்டரும், டேபிள் ஃபேனும் இருக்கும் போது ஏர் கூலர் எதுக்கு. இது போதுமே எனக்கு... இது போதுமேன்னு சந்தோசமா ஆபீஸ்ல உட்கார்ந்து வேலை பண்ணிட்டு இருக்காது தம்பி. ஆனா, இவரு வெளிய மட்டும் கூல் பண்ற மாதிரி தெரியலையே? புரியலையா.. தம்பி மொனிட்டர்ல என்ன பார்த்துட்டு இருக்கான்னு கொஞ்சம் உத்து பாருங்க...



ச்சோ ஸ்வீட்..


பார்வைகளுக்கு ஆறு அறிவு இல்லன்னு யாருங்க சொன்னா.. பாருங்க கொளுத்துற வெயில்ல எம்புட்டு சமத்தா... சரியா மரத்தோட நிழல் விழுகுற இடத்துல வரிசையா உட்கார்ந்துட்டு இருக்கு பாருங்க. ஒரு பக்கம் படம் அழகா இருந்தாலும், நாம அதுகளுக்கான இடங்கள மரங்கள, காடுகள அழித்து எடுத்துக்கிட்டோம்ங்கிற சோகமான உண்மையும் இதுல வெளிப்படுது.



எந்த கடையில வாங்குன தம்பி?

இப்படி ஒரு தொப்பி கிடைச்சிட்டா போதுமே.. சூரியன் செஞ் சூரி அடிச்சாலும் அசராம நிக்கலாம். ஆனா, இந்த தொப்பி எங்க கிடைக்கும்ன்னு தான் தெரியல... தம்பி வேற எந்த ஊரு கார பயல்ன்னு தெரியல... சரி இருக்கவே இருக்கு கூகிள்ல தேடி பார்ப்போம்... இல்லாங்காட்டி மூங்கில் பாய் நெய்யிற அண்ணன்கிட்ட கேட்டா உடனே செஞ்சு கொடுத்திட போறாரு.

# இதை நாங்கள் நம்ப வேணுமாம்!



இது கொஞ்சம் வில்லங்கமான பக்கம்

புதிதாக பதவியேற்ற சாவகச்சேரி நகரசபை, முக்கியமான நடவடிக்கையொன்று எடுத்ததென செய்தியொன்று வெளியாகியிருந்தது. சாவகச்சேரி நகரத்தில் இருந்த இறைச்சி கொல்கலன் ஒன்றை சீல் வைத்திருக்கிறார்களாம். அதுவும் எப்படி சீல் வைத்தார்கள் தெரியுமா? அதிரடியாக வைத்தார்களாம்!

முறையற்ற விதத்தில் இயங்கிய கொல்கலன் ஒன்றை சீல் வைத்தாலே பாராட்டத்தான் வேண்டும். அதிலும், அதிரடியாக சீல் வைத்தால்... பயங்கரமாக பாராட்ட வேண்டாமா? பாராட்டி விடலாம்.

ஆனால் இந்த விசயம் இத்துடன் முடிவதில்லை. இன்னொரு விதமாக பார்த்தால், இப்படி சீல் வைத்து விட்டு இந்த விசயத்தை கடந்து செல்வது கூட ஒரு மோசடி நடவடிக்கைதான். மீண்டும் சொல்கிறோம் இந்த விசயத்தை சீல் வைத்துடன் முடித்தால் மட்டுமே, அது மோசடி நடவடிக்கை. மோசடி நடவடிக்கையாக இல்லாமல், வெளிப்படையான உண்மையான நிர்வாகமாக இருந்தால் அவர்கள் செய்வதற்கு இன்னும் அதிக விசயங்கள் உள்ளன.

முதலாவது விசயம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், நகரில் அந்த கொல்கலன் இருந்துள்ளது. அது சட்டவிரோத கொல்களன் என்பது சரிதான். எப்போது சட்டவிரோத கொல்கலனாகியது?

சாவகச்சேரி நகரசபையின் கடந்த நிர்வாகத்தின் அனுமதி பெறாமல் எப்படி அது இயங்கியது? அந்த இடத்தில் முறையற்ற அனுமதியுடன் மதில் கட்டப்பட்டு, கொல்கலன் இயங்கியது. நகரின் மத்தியில், வெளிப்படையாக, சட்டவிரோத கொல்கலன் எப்படி இயங்க முடிந்தது? இந்த கேள்விக்கான விடையை முதலில் கண்டறிய வேண்டும்.

இரண்டாவது அந்த கொல்கலனை சீல் வைக்க சென்றபோது, இறைச்சியாக்குவதற்காக அங்கு நிறைய மாடுகள் கட்டிவைக்கப்பட்டுள்ளன. அவற்றின் எண்ணிக்கை சரியாக தெரியவில்லை. எனினும், அங்கு சென்ற நகரசபை உறுப்பினர்கள் சிலரின் தகவல்படி சுமார் 30 40 வரையான மாடுகள் அங்கு நின்றிருக்கின்றன. அந்த மாடுகளிற்கு என்ன நடந்தது?

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள கடைகளிற்கு மாட்டிறைச்சி வழங்குவதற்கு இவ்வளவு மாடுகள் தேவையில்லை. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிற்கு இந்த கொல்கலனில் இருந்து மாட்டிறைச்சி சென்றதாக சந்தேகிக்கப்படுகிறது. அதனால்தான் பெருமளவு மாடுகள் அங்கு இறைச்சியாக்கப்பட்டன, இறைச்சியாக்க கட்டி வைக்கப்பட்டிருந்தன.

இங்கு இறைச்சியாக்கப்படும் மாடுகளை சுகாதார பரிசோதகர்கள் பரிசோதிக்கவில்லையா? அல்லது, இவ்வளவு பெருந்தொகையான மாடுகள் வெட்டப்படும்போது, சுகாதார பரிசோதகர்கள் அதை அனுமதித்தார்கள்? அப்படி அனுமதித்தார்கள் எனில், இவ்வளவு பெருந்தொகை மாடுகளை எதற்காக அனுமதித்தார்கள்? சாவகச்சேரி பகுதிக்கு மட்டும்தான் அங்கு மாடு வெட்டப்பட்டதென்றாலும், சட்டவிரோத கொல்கலன் ஒன்றில் சுகாதார பரிசோதர்கள் எப்படி தமது கடமையை செய்தார்கள்?

இதையெல்லாம் முழுமையாக விசாரிக்க வேண்டும். விசாரித்துவிட்டு, அந்த அறிக்கையை பெட்டிக்குள் வைத்து மூடாமல் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெறுமனே ஒரு கொல்கலனை சீல் வைத்தோம் என்ற செய்தியுடன் இப்படியான விவகாரங்களை கடந்து விடுவதன் பின்னாலும் பெரும் ஊழல் இருக்கவும் வாய்ப்புண்டு. எப்படி இந்த சட்டவிரோத செயல் நடந்தது?, இதன் பின்னால் இருந்த பொறுப்பான அதிகாரிகள் யார்?, மக்கள் பிரதிநிதிகள் யார்? என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த கொல்கலனை நடத்தியது முஸ்லிம் சமூகத்தைசேர்ந்தஒருவர். முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த ஒருவரின் வர்த்தக நடவடிக்கையை பிரதேசத்தில் இருந்து வெளியேற்றிவிட்டோம் என்ற திருப்தியை மட்டும் ஏற்படுத்த பிரதேச சமூக ஊடகவாசிகள் பலர் முயன்றனர். இந்த தவறான பார்வை, பிரச்சனையை திசைதிருப்புவதிலேயே முடியும். கொல்கலனை அகற்றிவிட்டோம் என்ற வெறும் திருப்தியை மட்டும் ஏற்படுத்துவது, இதன்பின்னால் யாராவது அதிகாரிகள் இருந்திருந்தால், அவர்களை காப்பாற்றும் முயற்சியாகவே அமையும்.

## வாராவாரம் வறுப்போம்



## கேள்வியும் பதிலும் நாமே

நிருபர்: எதிர்க்கட்சி தலைவரிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட வாய்ப்பிருக்கிறதா?

மாவை சேனாதிராசா: நாங்கள் பதவிகளிற்கு ஆசைப்பட்டவர்கள் அல்ல. எமது பதவிகளை தூக்கி எறிந்து விட்டு போராடவும் தயங்கப்போவதில்லையென்பதை ஆணித்தரமாக சொல்லிக்கொள்கிறோம்.

நிருபர்: தேசிய அரசாங்கத்திற்குள்ளும் நிறைய குழப்பமாகிவிட்டது. இடைக்கால அறிக்கையின் கதி என்னவாகும்? அரசியலமைப்பு உருவாக்கம் நடக்குமா?

மாவை சேனாதிராசா: தம்பிஞ் முக்கியமான கேள்வி கேட்டுள்ளீர். நாம் தந்தை செல்வா தலைமையில் ஆரம்பித்த போராட்டமே அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு. சிதைக்கப்பட்டு. சின்னாபின்னப்படுத்தப்பட்ட எமது இனத்தின் விடிவை பெற்றுக்கொள்ளவே. அந்த போராட்டம் இன்னும் ஓயவில்லை. தேவையென்றால் எமது பதவிகளை தூக்கி எறிந்துவிட்டும் போராட தயங்கமாட்டோம்.

நிருபர்: உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரிந்ததற்கு என்ன காரணம்?

மாவை சேனாதிராசா: அப்படி சொல்ல முடியாது. நாங்கள் அப்படி கருதவுமில்லை. நாங்கள் உரிமைக்காக போராடும் இனம். தமிழர்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தம்பி சித்தார்த்தன் இருக்கிறார். தம்பி செல்வம் இருக்கிறார். தம்பி டக்ளஸ் தேவானந்தாவும் தமிழர்தான். சகோதரி விஜயகலா இருக்கிறார். எல்லோரும் தமிழர் என்ற அடிப்படையில் எடுத்த வாக்குகளை கூட்டினால், தமிழர்களின் ஒற்றுமையை புரிந்துகொள்வீர்கள். மீண்டும் சொல்கிறேன், தமிழர்களிற்கு ஏதும் ஆபத்தென்றால் பதவிகளை தூக்கி எறிந்துவிட்டு போராட தயங்கவும் மாட்டோம்.

நிருபர்: ஒரு காலத்தில் ஈ.பி.டி.பியை கடுமையாக விமர்சித்துவிட்டு, திடீரென இப்பொழுது நெருக்கம் பாராட்டினால் மக்கள் எப்படி பார்ப்பார்கள்?

மாவை சேனாதிராசா: நான் ஒரு சமயத்திலும் ஈ.பி.டி.பியை கடுமையாக விமர்சிக்கவில்லை. விமர்சித்தவர்களைத்தான் நீங்கள் கேட்க வேண்டும்.

நிருபர்: நாரந்தனையில் தேர்தல் பிரசாரத்திற்கு சென்ற கூட்டமைப்பினர் மீது ஏன் தாக்குதல் நடந்தது? உங்களை ஏன் தாக்கினார்கள்?

மாவை சேனாதிராசா: நான் மீண்டும் சொல்கிறேன். தாக்குதல் நடந்த இடத்தில் டக்ளஸ் தேவானந்தாவை நான் கண்ணால் காண முடியவில்லை. அப்படியிருக்க எப்படி அவர் மீது குற்றம் சொல்லலாம்? நான் மீண்டும் சொல்கிறேன். இப்படியான தாக்குதல்களாலோ, இப்படியான கேள்விகளாலோ எமது உரிமை பயணத்தை நிறுத்த முடியாது. தந்தை செல்வா, தளபதி அமிர் வழியில் சம்பந்தன் அவர்கள் தலைமையில் நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்த பயணத்திற்கு அவசியமென்றால், எமது பதவிகளையும் தூக்கி எறிந்துவிட்டு போராட தயங்கமாட்டோம் என்பதை சிங்கள அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் கூறிவைக்க விரும்புகிறோம்.

நிருபர்: இப்பொழுது அடிக்கடி பதவியை துறந்து போராட தயார் என்கிறீர்கள், எம்.பி பதவியை துறந்துவிட்டு, முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கப் போகிறீர்கள் என்று கொள்ளலாமா?

மாவை சேனாதிராசா: சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைகளிற்கு எதிராக தந்தை செல்வா, தளபதி அமிர் வழியில் அறவழியில் உயிரையும் துச்சமான மதித்து தமிழினத்தின் விடியலிற்காக, ஆங்கிலேயர் எம் உரிமைகளை சிங்கள தலைவர்களிடம் கொடுத்துவிட்டு செல்ல, இழந்த உரிமையை மீட்க விடாமல் போராடி வரும் ஒரே கட்சி தமிழரசுக்கட்சிதான் என்பதை கூறிவைக்க விரும்புகிறேன். தம்பி பிரபாகரனும் சில அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டார். அதையெல்லாம் மனதிலிருத்தி, எமது மக்களின் அன்றாட, அரசியல் தேவைகளை தீர்க்க, சர்வதேச சமூகத்தின் உதவியுடன் ஐநா சபைவரை கடுமையான அழுத்தம் கொடுத்து வருகிறோம். ஐநாவில் இருக்ககூடிய மனிதஉரிமைகள் பேரவையில் உள்ள செயலாளர் அவர்கள் முப்பது ஒன்று தீர்மானத்தைஞ்.

(இப்பொழுதும் நிருபர் விழித்திருப்பார் என்றா நினைக்கிறீர்கள்?)



**ராஜிவ் காந்தி கொலை 28**
**புலிகள் சிக்கிய கதை**


# இந்திய புலனாய்வு அமைப்பை ஏமாற்றிய புலிகள்!



கே.ராகோத்தமன்

மொபைல்போன்கள் புழக்கத்துக்கு வராதகாலம்தான். ஆனாலும் தகவல் தொடர்பே இல்லை என்று சொல்லிவிட முடியாது?

பொலிஸ் வயர்லெஸ் என்ன ஆனது? போன் செய்து கேட்டிருக்கலாமே? சென்னையிலிருந்து ஆந்திர மாநிலக் காவல் துறையின் மூலம் தொடர்பு கொண்டிருந்தால் சொல்லியிருப்பார்களே, விமானக் கோளாறு பற்றியும், புறப்படுவதில் ஏற்பட்ட தாமதம் குறித்தும். நூற்றுக்கணக்கான பொலிசாரும் மாநில காவல்துறை அதிகாரிகள் பலரும் ஸ்ரீபெரும்புதூரில்தான் அன்று முழுதும் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.



சிவராசன் டைரியிலிருந்து...

ஒருவருக்காவது இந்தத் தாமதத்தின் காரணம் தெரியாது என்பதுதான் விஷயம்.

இதே இடத்தில் இன்னொன்றைக் குறிப்பிட வேண்டும். சம்பவம் நடந்த இடத்தில் அன்று மாலை சுமார் ஏழு மணி முதல் இரவு பத்தரை மணிவரைக்கும் சுற்றிக்கொண்டிருந்த சிவராசன் தன் பாக்கெட்டில் ஒரு சிறிய போட்டோ ஸ்டுடியோ கவர் வைத்திருந்திருக்கிறார்.

இது எங்களுக்குப் பின்னால் கிடைத்த ஓர் ஆதாரம். கொடுங்கையூர் ஜெயக்குமார் வீட்டில் இருக்கும்போது எடுத்த பாஸ்போர்ட் போட்டோக்கள் சில அந்த கவருக்குள் இருந்தன.

அந்த உள்ளங்கை அளவே இருந்த கவரின் பின்புறம் பொடி எழுத்தில் சில விவரங்கள் எழுதியிருப்பதை நாங்கள் பார்த்தோம். ராஜிவ் புறப்படும் நேரம் 4.30 சென்னையை அடையும் நேரம் 6 மணி என்று எழுதியிருந்தது.

அப்படி எழுதியிருந்ததை அடித்து விட்டு சிவராசன் தன் கையெழுத்தில் எழுதியிருந்தது புறப்படும் நேரம் 6 மணி!

காவல் துறைக்கு மட்டுமல்ல, சிவராசனுக்கும் அன்றைக்கு மொபைல் வசதி கிடையாதுதான். ஆனால் அவர்களது இண்டலிஜென்ஸ் செயல்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் வெட்கப்படாமல் என்ன செய்வது?

காவல் துறைக்குத் தெரியாத விஷயம், காங்கிரஸ்காரர்களுக்கும் தெரியாத விஷயம், சிவராசனுக்குத் தெரிந்திருக்கிறது!

சிவராசன் பதுங்கியிருந்த கொடுங்கையூர் ஜெயக்குமார் வீட்டின் சமையல் அறையில் புதைத்து வைத்த பொருள்களில் அவரது டைரியும் ஒன்று.

அந்த டைரியை வாசித்தபோது இன்னும் பல அதிர்ச்சி தரக்கூடிய விஷயங்கள் கிடைத்தன. ஸ்ரீபெரும்புதூரில் இருந்து சென்னைக்குச் செல்லும் பேருந்துகள், வெளியூர்களிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வழியே சென்னைக்குச் செல்லக்கூடிய பேருந்துகள், இரவு பதினொரு மணிக்குப் பிறகு என்னென்ன, அவற்றின் வழித்தட எண்கள், எந்த வண்டி எத்தனை மணி, எத்தனை நிமிடத்துக்கு ஸ்ரீபெரும்புதூரைக் கடக்கும் என்று வரிசையாக, சுத்தமாக எழுதி வைத்திருந்தார்!

வந்த காரியம் முடிந்த பிறகு தப்பிச் செல்வதற்கான வழிகள் வரை தீர்மானமாக யோசித்து, தகவல் திரட்டி, கையோடு வைத்திருந்திருக்கிறார்!

இந்த முன்னேற்பாடும் முன்னெச்சரிக்கையும் நமது காவல் துறைக்கும் உளவுத்துறைக்கும் அல்லவா இருந்திருக்க வேண்டும்?

ஏராளமான சிறு இரும்புக் குண்டுகள் அடைக்கப்பட்ட ஆர்.டி.எக்ஸை ஒரு பெண் இடுப்பில் கட்டிக்கொண்டு பொதுக்கூட்டத்துக்கு வந்திருக்கிறாள். பெரிதாக எந்த செக்யூரிடி சோதனையும்கூட வேண்டாம். கூட்டத்துக்கு வருகிறவர்களை சும்மா ஒரு மெட்டல் டிடெக்டர் வைத்து ஒரு தடவு தடவி அனுப்பியிருக்க முடியாதா?

அது அலறியிருக்குமே? காட்டிக் கொடுத்திருக்குமே? ஏன் செய்யத் தோன்றவில்லை?

சிவராசன் ஒரு துப்பாக்கி வைத்திருந்தாரே? அது மாட்டியிருக்குமல்லவா? அவர் ஒரு பத்திரிகையாளர் வேஷத்தில் வந்திருந்தார். தமிழகக் காவல் அதிகாரிகளுக்குத் தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களை அடையாளம் தெரியாதா? அத்தனை முக்கியமான தலைவர் கலந்துகொள்ளும் கூட்டத்தில் முன் வரிசையில் போய் இருக்கப்போகிறவர்களை ஒப்புக்காவது பரிசோதிக்க மாட்டார்களா?

குற்றம் சாட்டுவதல்ல என் நோக்கம்.

அனைத்து மட்டங்களிலும் பரவியிருக்கும் அலட்சியம் எப்படிப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன்.

கீழ்த்தளத்தில் அலட்சியம் என்றால், மேலிடங்களில் பூசி மழுப்பல் மற்றும் மூடி மறைத்தல்.

இதையும் பார்த்தேன். ஹரி பாபு எடுத்த அந்தப் பத்து புகைப்படங்கள்தாம் இந்த வழக்கின் ஒரே பெரிய சாட்சி என்பதையும் அதன் அடிப்படையில்தான் விசாரணையே ஆரம்பமானது என்பதை முதலிலேயே குறிப்பிட்டிருந்தேன். அந்தப் படங்கள் சி.பி.ஐ வசம் வருவதற்கு முன்னால் ஹிந்து பத்திரிகைக்குச் சென்றுவிட்ட மர்மத்தையும் சொல்லியிருந்தேன்.

அது எப்படிப் போனது? இது குறித்து என்ன விசாரணை நடந்தது? சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன தண்டனை தரப்பட்டது? ராஜிவ் காந்தி கொலை வழக்கின் பரபரப்பில் இந்த மிக முக்கியமான தவறு மறைக்கப் பட்டுவிட்டது வருத்தத்துக்குரிய விஷயம்.

(தொடரும்)

தீபம் லென்ஸ்


# பொறுப்பு தவறிய சமுர்த்தி வங்கி முகாமையாளர்


## மண்டூர் சமுர்த்தி வங்கி ஊழல்கள்

### தலை சுற்ற வைக்கும் ஊழல் தொடர் 04

மட்டக்களப்பில் இடம்பெற்ற பெரிய மோசடிகளான சமுர்த்தி மோசடிகளை அம்பலப்படுத்தும் தீபத்தின் முயற்சிக்கு இரண்டு விதமான பிரதிபலிப்புக்கள் கிடைத்து வருகின்றன. சாதாரண மக்கள், நியாயமான அரச அலுவலர்கள் எமது முயற்சியை வரவேற்று வருகிறார்கள். மக்களின் உதவித்திட்டங்களை மோசடி செய்தவர்கள் பாதுகாக்கப்படும் பொறிமுறையே நிலவுவதால், இப்படியான முயற்சிகளே ஓரளவிற்காவது மக்களிற்கான அரச உதவிகள் தடையின்றி கிடைக்க வழிசெய்வதுடன், அதிகாரபலத்தின் துணையுடன் தண்டனைகளிலிருந்து தப்பிப்பதை ஓரளவிற்காகவது தடுக்கும். எனவே மக்களினதும், நியாயமான அதிகாரிகளினதும் மனஓட்டத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

இதேசமயம் அதிகார பலத்தின் துணையுடன் மிரட்டல் உத்தியை பாவித்து தீபத்தின் இந்த புலனாய்வு தொடரை தடுத்து நிறுத்தவும் இன்னொரு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. வெளிப்படையாகவும், நூதன முறைகளிலும் மேற்கொள்ளப்படும் மிரட்டல்களை புறமொதுக்கி, தொடர்ந்தும் இந்த புலனாய்வு தொடர் வெளியாகுமென்பதை தெரிவித்து கொள்கிறோம்.





மட்டக்களப்பு சமுர்த்தி முறைகேட்டு புலனாய்வு தொடரில் இந்தவாரம் போரதீவுப்பற்று (வெல்லாவெளி) பிரதேசசெயலர் பிரிவில் உள்ள மண்டூர் சமுர்த்தி வங்கியில் இடம்பெற்ற ஊழல்களை வெளியிடுகிறோம். கணக்கு இல 25/2309 ஐ உடைய பயனாளியின் பெயரில் 2015. 02.27 அன்று விவசாய கடனாக 50,000 வழங்கப்பட்டு, அந்த கடன் திருப்பி செலுத்தாமல் இருக்கும்போதே, 2015.06.23 இன்று அதே பயனாளிக்கு திரியசவிய கடனாக 80,000/= விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த கடனை பயனாளி பெற்றுக் கொள்ளவில்லை. இந்த பயனாளியின் தேசிய அடையாள அட்டை 425943448V ஆகும். ஆனால் விடுவிக்கப்பட்ட திரியசவிய கடன் ஆள்சார் பேரேட்டில் தே.அ.அட்டை இலக்கம் 421632801V என போலியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பயனாளியின் பெயரில் 2015. 02.27 அன்று விடுவிக்கப்பட்ட 50,000/= பயிர்செய்கை கடனுக்கு எந்தவித ஒப்பந்தமும் பயனாளியுடன் செய்யப்படவில்லை. விடய எழுதுனர், உதவி முகாமையாளர் ஆகியோரின் கையொப்பமில்லாமல், முகாமையாளர் கையொப்பமிட்டுள்ளார்.

கணக்கு இல 68/2812 என்ற பயனாளியின் பங்கு வைப்பில் 3,000/= மீதியாக இருக்கும்போது, 30,000/= மட்டும் கடன்பெற தகுதியாகும். ஆனால் இவருக்கு 50,000/= 12.09.2014 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது. பயனாளி விண்ணப்பித்த தொகை 30,000/= .ஆனால் விடுவிக்கப்பட்டது 50,000/= என்பதை கவனிக்கவும்.

இந்த விவசாய கடன் 50,000/= ஐ 13.01.2015 அன்று வட்டி 2022/= உடன் திருப்பி செலுத்தியுள்ளார் பயனாளி. இதற்கான பதிவுகள் பயனாளியின் வைப்பு புத்தகம், கடன் ஆள்சார் பேரேடு என்பவற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால், 13.01.2015 திகதி பணவரவு புத்தகத்தில் பதிவுசெய்யப்படவில்லை. குறித்த பணம் 52,022/= சுமார் 10 மாதங்கள் வரையில் முகாமையாளரின் சொந்த தேவைக்கு பயன்படுத்தப்பட்டு, 30.10.2015 ம் திகதி நாளாந்த பணவ்ரவு புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பணம் விடுவித்த திகதியில் இருந்து, பணம் செலுத்திய தினம் வரை (12.09.2014 - 13.01.2015) வட்டி, தண்ட வட்டி உள்ளடங்களாக 9,305/= ஐ செலுத்த வேண்டியிருந்தும், 2,975/= மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. 6,330/= மோசடியாகமறைக்கப்பட்டு, வங்கியின் வருமானம் குறைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அனுமதியுடன் மட்டக்களப்பு மாவட்ட உள்ளக கணக்காய்வாளர்கள் நடத்திய கணக்காய்வில் இந்த வங்கியில் நடந்த மோசடிகளும் கண்டறியப்பட்டுள்ளன. இந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னும் சில விபரங்களையும் குறிப்பிடுகிறோம்.

இந்த வங்கியின் முகாமையாளராக கடமையாற்றியவர் வங்கி சுற்றுநிருப எல்லையை மீறி செயற்பட்டுள்ளார். அரச நிதி பிரமாணங்களை மீறியுள்ளார். வங்கி பயனாளிகளின் பெயரை தவறாக பாவித்து கடன் பெற்றுள்ளார். வங்கியின் எழுத்துமூல ஆவணங்களை தனது சொந்த தேவைக்கு ஏற்ப மாற்றியுள்ளார்.

வங்கிப் பணியாளர்களுக்கு கடமை பகிர்வுகள் கையளித்து, பொறுப்பு கூறும் நிலையிலுள்ள போதும், ஒப்படைக்கப்பட்ட கடமையை அவர்களுக்கு தெரியாது, தான் தனது தேவைக்கேற்ப பணியாளர்களுக்கு தெரியாது மறைத்து மேற்கொண்டுள்ளார். இப்படியாக பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.


---

மட்டக்களப்பு சமுர்த்தி முறைகேடுகள் தொடர்பான இந்த தொடரிற்கு அதிருப்தி தெரிவித்து, மட்டக்களப்பு சமுர்த்தி திணைக்களம்த்திலிருந்து தீபத்திற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றில், தவறான தகவல்களை வழங்கி தீபம் மக்களை திசைதிருப்ப முயற்சிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எந்த தகவல்கள் தவறானவை என்பதை குறிப்பிடவில்லை. வெறுமனே தவறான தகவல் என மொட்டையாக பொறுப்பான திணைக்களம் குறிப்பிட முடியுமா? தீபம் வெளிப்படுத்திய தகவல்களில் எது தவறானது? எது சோடிக்கப்பட்டது என்பதை குறிப்பிட்டிருக்க வேண்டியது திணைக்களத்தின் கடமை. தீபம் வெளியிட்ட அனைத்து விபரங்களிற்கும் ஆதாரங்களை வைத்துள்ளது என்பதை பொறுப்புடன் தெரிவித்து கொள்கிறது.

08.04.2018 இதழில் வே.பத்மசிறி தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்தோம். அந்த செய்திகள் பொய்யானவை என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் தன்னிடமுள்ளதாக அவரும் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அனுமதியுடன் மட்டக்களப்பு மாவட்ட உள்ளக கணக்காய்வாளர்கள் நடத்திய கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையிலேயே தீபம் தகவல்களை வெளியிட்டது, வெளியிட்டு வருகிறது என்பதை தெரிவித்து கொள்கிறது. 2015 இல் சமர்ப்பிக்கப்பட்ட இந்த உத்தியோகபூர்வ அறிக்கை தொடர்பான எந்தவொரு ஆட்சேபணையும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை யென்பதுடன், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னொரு விடயம் "இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அதிலிருந்து நழுவிச்செல்லும் நிலையில் உள்ளனர். அதனால் விசேட கணக்காய்வை உடனடியாக நடத்த வேண்டும்" என்பது.

– ஆசிரியர்



✒ நம்மாழ்வார்

# வடக்கு முதல்வர் வேட்பாளர் சுமந்திரன் லிஸ்றில் இல்லை!

## ஏன் தெரியுமா?

அடுத்த வடமாகாணசபை தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் யார்? விக்னேஸ்வரனை கழற்றிவிட்டால் அவர் என்ன செய்வார்? விக்னேஸ்வரன் எப்படியான கூட்டணி அமைப்பார்? யாருக்கு வெற்றி வாய்ப்பு? இப்படியான கேள்விகளுடன் அகில உலகமுமே உட்கார முடியாமல் அந்தரப்பட்டு கொண்டிருக்கிறது. (உலகம் எம்மை உற்று பார்க்கிறது என்றால், இந்த விசயத்தையும் உற்று பார்க்குமல்லவா.)

அந்தளவு கேள்விகள் போதாதென புதிதாக இப்பொழுது இன்னொரு புது பிரளயமும் கிளம்பியுள்ளது. முதலமைச்சர் வேட்பாளர் மாவை அல்ல, எம்.ஏ.சுமந்திரன்தான் என. ஏனென்றால் மாவை சேனாதிராசா பல விசயங்களிற்கு சரிப்பட்டு வரமாட்டார் என சம்பந்தன் நினைப்பதால், மாவை இந்த லிஸ்றில் எப்பொழுதும் இரண்டாவது ஹீரோ வாகத்தான் இருப்பார் என்ற அபிப்பிராயம் அதற்கு துணையாக் இருக்கிறது.

கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார்? விக்னேஸ்வரனா, மாவையா, சுமந்திரனா?

இந்த விசயத்தை பற்றி தீபத்தில் அடிக்கடி மேலோட்டமாக சில விசயங்களை குறிப்பிட்டிருக்கிறோம். அவற்றை தொடர்ந்து படித்து வந்த வர்களிற்கு இந்த குழப்பம் ஏற்பட்டிக் காது. எனினும், புதிய வாசகர்களிற்காக இப்பொழுது விபரமாக குறிப்பிடு கிறோம்.

அது எல்லாவற்றிற்கும் முதல், ஒரு விசயத்தை ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறோம். முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிப் பது மக்களோ, ஊடகங்களோ, கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்களோ அல்ல. அது இரா.சம்பந்தன் மட்டும்தான்!

கூட்டமைப்பே சேர்ந்து மொத்தமாக எதிர்த்தாலும் அவர் தனது முடிவை நோக்கி எல்லோரையும் வரவைப்பார். அதற்கு ஒரு உதாரணம் கடந்த பாராளுமன்ற தேர்தல் சமயம். சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர்தலில் வெற்றிபெறவில்லை. சுரேஷிற்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்க வேண்டுமென புளொட்,' ரெலோ தலைவர்கள் நேரில் சம்பந்தனை சந்தித்து வலியுறுத்தி கேட்டனர். சம்பந்தர் அசைந்து கொடுக்கவில்லை.

அது போல, அண்மையில்



வடமாகாணசபையில் முதல்வரிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை அவசரகதியில் கொண்டு வரப்பட்டது. விக்னேஸ்வரனை வீட்டுக்கு அனுப்பி விட்டுத்தான் கிளம்புவோம் என மார்ட்டின் வீதி அலுவலகத்தில் பாய் போட்டு படுத்திருந்த தமிழரசுக்கட்சிக் காரர்களை, "கிளம்புங்கஞ் போய், பிள்ளைகுட்டிகளை படிக்க வையுங்கள்" என கிளப்பி கலைத்தவர் சம்பந்தன்.

ஆகவே, முடிவு எடுக்கப்படும் இடம் இங்கல்ல, அங்குதான் இருக்கிறது.

ஆனால் இனில் இன்னொரு விசயத் தையும் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு விசயத்திலும் கூட்டமைப்பு ஒற்றுமையாக இருக்காததும் சம்பந்தரிற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. சுரேஷிற்கு தேசியப்பட்டியல் கேட்டு புளொட், ரெலோ போனபோது, தமிழரசு எதிர்ப்பக்கத்தில் நின்றது.

மார்ட்டின் வீதியில் தமிழரசுக் கட்சிக்காரர்கள் பாய்விரித்து படுத்தி ருக்க, புளொட், ரெலோ முதல்வ ருடனும் சம்பந்தருடனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதும் முதலமைச்சர் வேட்பாளர் விசயத்தில் கூட்டமைப் பிற்குள் ஒற்றுமை கிடையாது. அதைப் பற்றி இறுதியாக குறிப்பிடுகிறோம்.

'கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை தமிழரசுக் கட்சி தீர்மானித்தாலும், பச்சைக் கொடி காண்பிக்க வேண்டிய இடத்திலிருந்து இன்னும் காண்பிக் கப்படவில்லையென்பதே உண்மை. அப்படியானால், விக்னேஸ்வரனின் பெயரை இன்னும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் லிஸ்றில் சம்பந்தன் வைத்திருக்கிறார் என்பதுதான் அர்த்தம்.

ஆனால், விக்னேஸ்வரன் அந்த லிஸ்றில் இருந்து தானாக வெளியேறி விட்டார் என்பதே யதார்த்தம்!

தீபம் திரட்டிய தகவல்களின்படி தமிழரசுக்கட்சியின் சார்பில் இனி முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதில்லையென்ற முடிவிற்கு விக்னேஸ்வரன் வந்து விட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை தவிர்த்த புதியதொரு அணியில் களமிறங்குவதற்கான முதல்கட்ட வேலைகளையெல்லாம் முடித்து விட்டார். அது பற்றிய விரிவான தகவல் களை தீபம் விரைவில் வெளியிடும். இப்போதைய நிலைமைகளை கவனித் தால், கூட்டமைப்பு விரும்பி னாலும் விக்னேஸ்வரன் மீண்டும் கூட்டமைப்பில் களமிறங்க சாத்திய மில்லையென்றுதான் தெரிகிறது. ஆனால் அரசியலில் எதுவும் நடக்க லாம் என்பதையும் குறிப்பிட்டு வைக்கிறோம்.


விக்னேஸ்வரனின் பெயரை லிஸ்றில் இருந்து நீக்கினால், இப்பொழுது எஞ் சியிருப்பது மாவை சேனாதிராசா மற்றும் சுமந்திரன் ஆகியோரே. இதில் சுமந்திரனின் பெயரையும் இப்போ தைக்கு எடுத்து விடுங்கள். அதற்கு காரணத்தை சொல்கிறோம்.

மாவை சேனாதிராசா தன்னை அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க மனதளவில் பெரும்பாலும் தயாராகிவிட்டார். கட்சியின் உயர்மட்ட கூட்டங்கள் சிலவற்றில் சூசகமாகவும் அதை குறிப்பிட்டுள்ளார். மாவை தான் அடுத்த வேட்பாளர் என்ற அபிப்பிராயத்தை கட்சியும் வளர்த்து விட்டது. ஆகவே, இந்த பின்னணியில் மாவையின் எதிர்பார்ப்பை உடைக் கும் வேலையை சுமந்திரன் செய்ய வாய்ப்பில்லை. கட்சியின் மூத்தவர்

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

### ஈ.பி.ஆர்.எல்.எவ் அதிரடி... சுதாகரித்த கூட்டமைப்பு

# வவுனியா உள்ளூராட்சி சபைகளில் நடந்தது என்ன?





இன்போர்மர் இசக்கி

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அதிர்ச்சி வைத்தியமளித்து, வவுனியா உள்ளூராட்சிசபைகளில் தமிழர் விடுதலை கூட்டணி கைப் பற்றியுள்ளது. வடக்கின் மற்ற மாவட்டங்களை போல வவுனியா சபைகளையும் சுலபமாக கைப்பற்றிவிடலாமென நினைத்திருந்த கூட்டமைப்பின் தலைவர்களின் உச்சந்தலையில் இடியாக இறங்கியிருக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ் இறுதிநேரத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் தத தமிழரசக் கட்சிக்கிடையில் கடந்த சில வருடங்களாக பயங்கர மோதல் நடந்து வருகிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ ஒதுக்குவதில் குறியாக செயற்பட்டுவந்த தமிழரசுக்கட்சிக்கு திருப்பியடிக்க ஒரு சந்தர்ப்பமாவது கிடைக்காதா என காத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு வவுனியா உள்ளூராட்சிசபை தவிசாளர் தெரிவின் வடிவில் சந்தர்ப்பம் வாய்த்தது. திட்டமிட்டு அடித்துள்ளது.

வவுனியா நகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு 8, ஐக்கிய தேசியக்கட்சி 4, தமிழர் விடுதலை கூட்டணி, சுதந்திரக்கட்சி, தலா 3 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி, பொதுஜன பெரமுன, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலா 1 ஆசனத்தையும் பெற்றிருந்தன.

வவுனியா நகரசபை தலைவர் தெரிவிற்கு முன்னதாக கட்சிகளிற்குள் பேரம் பேசல் ஆரம்பித்திருந்தது. வவுனியாவில் தெளிவான பெரும்பான்மை இல்லாத நிலையில், தென்னிலங்கை கட்சிகள் கூட்டு வைத்தால் ஆட்சியை கைப்பற்றலாமென்ற நிலையேற்பட்டது. இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தவிர்க்க முடியாமல், தவி.கூட்டணியின் ஆதரவு தேவையாக இருந்தது.தமிழரசுக்கட்சியின் வவுனியா பிரமுகர் ப.சத்தியலிங்கம் மற்ற கட்சிகளுடன் இரகசிய பேச்சுக்களை ஆரம்பித்தார்.

தன்னிடம் பேச்சுக்கு வந்தவர்களிடம்,வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர் சிவசக்தி ஆனந்தன் ஆரம்பத்திலேயே தெரிவித்து விட்டார் நாம் நடுநிலைதான் வகிப்போம் என.

த.வி.கூ நடுநிலை வகித்தாலே த.தே.கூ ஆட்சியமைப்பதில் சிக்கல் ஏற்படலாம். இதனால் அவர்களை ஆதரிக்க வைக்க வேண்டும். இதையடுத்து வவுனியா சிவில் செயற்பாட்டாளர்களுடன் தமிழரசுக்கட்சி பேச்சு நடத்தி, அவர்களின் மூலம் த.வி.கூட்டணியுடன் பேச்சு நடத்த வைத்தனர். இதன்படி சிவசக்தி ஆனந்தனை சந்தித்த சிவில் செயற்பாட்டாளர்கள், வவுனியாவில் ஒரு தவிசாளர், உப தவிசாளர் பதவிகளை பெற ஏற்பாடு செய்வதாக தெரிவித்தனர். இதற்கு சிவசக்தி ஆனந்தன் தரப்பும் சம்மதம் தெரிவித்தது. இந்த பதவிகளை வழங்க தமிழரசுக்கட்சியும் தயாராக இருந்தது. வவுனியா வாடிவீட்டிலும் இதற்கான சந்திப்புக்கள் நடந்தன.

இதையடுத்து ப.சத்தியலிங்கம் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் பேசி, த.வி.கூவின் நிபந்தனையை தெரியப்படுத்தினார். கூட்டமைப்பிற்குள் நடந்த ஆசனப்பங்கீட்டில் சபைகள் கட்சிகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.இதனால் கட்சிகள் அனைத்தின் விட்டுக்கொடுப்புடன் இந்த சமரச முயற்சி நடக்க வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு நடந்தது.

இந்த சமயத்தில்தான் 14ம் திகதி சிவசக்தி ஆனந்தன் தரப்பிலிருந்து திடீரென ஒரு நிபந்தனை விதித்தார். "தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கலாம். ஆனால் சில சிக்கல்கள் உள்ளன. கூட்டமைப்பிற்குள்ளிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் உம் ஏமாற்றப்பட்டதுதான். எதையும் எழுத்துமூல உடன்பாடு வைக்காமல் நாம் இணக்கப்பாட்டிற்கு வரமாட்டோம். அதேசமயம் கூட்டமைப்பை பதிவுசெய்ய வேண்டும். இது எல்லாவற்றையும்பேச,கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் வாருங்கள். ஒன்றாக இருந்து பேசுவோம்" என.

இந்த நிபந்தனை கூட்டமைப்பின் தலைவர்களிற்கு அதிர்ச்சியாகவும், 'அசௌகரியமாகவும் இருந்தது. பலர் விரும்பவில்லை. என்றாலும், கூட்டமைப்பின் மூன்று தலைவர்களையும் வவுனியாவிற்கு அழைத்து, சிவசக்தி ஆனந்தனுடன் பேச்சு வார்த்தை நடத்த வைப்பதில் சத்தியலிங்கம் கடுமையான முயற்சியெடுத்துக் கொண்டிருந்தார்.

இதற்குள் சு.க மற்றும் ரிசாட் பதியுதீன் தரப்பிலிருந்து பெருந்தொகை பணம் பேரம் பேசப்பட்டது. இதுதான் த.தே.கூவிற்கு பெரிய சிக்கலாக இருந்த்து.

இந்த நிலையில்15ம் திகதி மாலையில் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரை தனித்தனியாக சந்தித்து பேசினார். இதன்போது த.வி.கூ தரப்பினர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகிக்க சம்மதித்துள்ளதாக கூட்டமைப்பிற்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால்,இதில் கவனிக்க வேண்டிய விசயம் இந்த பேச்சுக்கள் எதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நேரடியாக ஈ.பி.ஆர்.எல்.எவ் ஈடுபடவில்லை.

தமிழர் விடுதலை கூட்டணியால் சிக்கல் வராதென வவுனியா நகரசபை விவகாரத்தை கையாண்ட சத்தியலிங்கம் தரப்பினர் நிம்மதியாக அன்றைய நாளை முடித்தனர். ஆனால், கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியொன்றின் தலைவர்,இன்னொரு தலைவரிற்கு அன்றிரவு தொலைபேசி அழைப்பேற்படுத்தினார். அவர் சொன்ன தகவல் "கூட்டணியை நம்ப முடியாது. இப்படித்தான் மன்னாரிலும் கடைசிவரை பேச்சு நடத்தி, எம்மை நம்ப வைத்துவிட்டு, வாக்களிப்பில் காலைவாரி விட்டனர். அவதானமாக இருக்க வேண்டும்"!

மன்னாரில் என்ன நடந்தது? த.தே.கூவின் திட்டத்திற்கு மாறாக எப்படியான திட்டங்களை தமிழர் விடுதலை கூட்டணி எப்படியான நகர்வுகளை செய்தது என்ற தகவல்களையும் தருகிறோம்.

வவுனியா நகரசபை தவிசாளர் தெரிவிற்கு ஒரு வாரத்தின் முன்பாகத்தான் த.தே.கூ பேச்சுக்களை நடத்தியது. ஆனால் த.வி.கூ எப்பவோ முடித்து விட்டது. மன்னார் மாந்தை தவிசாளர் தெரிவில் எதிரொலித்ததும் அது தான்!

தமிழர் விடுதலை கூட்டணி, சுதந்திரக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பன ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையின் வவுனியாவில் செயற்பட்டன என்கிறார்கள். வவுனியாவில்தமிழர் விடுதலை கூட்டணியை ரிசாட் தரப்பு ஆதரிப்பதற்காகவே, மாந்தையில் அவர்களை த.வி.கூ ஆதரித்திருக்கிறது.

மேற்படி கட்சிகளுடன் இணக்கப்பாட்டை பேணிக்கொண்டு, தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் எதற்காக தமிழர் விடுதலை கூட்டணி பேசியது?

இதற்கு இரண்டு காரணம் இருக்கலாம்.

முதலாவது, த.தே.கூ வை வவுனியாவில் எச்சரிக்கையடையாமல் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக. இரண்டாவது, கூட்டமைப்பின் விடாப்பிடியான போக்கால்தான் இந்த நிலவரம் ஏற்பட்டது என்பதை வெளியில் காண்பிப்பதற்காக.

அது எப்படியென்றால், வவுனியா நகரசபை தலைவர் தெரிவிற்கு இரண்டுநாள் முன்னதாக தமிழரசுக் கட்சியை சங்கடப்படுத்தும் நிபந்தனையை சிவசக்தி ஆனந்தன் தரப்பு விதித்தது. கூட்டமைப்பபை பதிவு செய்தல், எல்லா தலைவர்களும் உட்கார்ந்து பேசுதல். அத்தியாவசியமான நிபந்தனைததான் ஆனால் நிறைவேற்ற தயாரில்லாத சமயத்தில் விதித்தால், அவர்களால்தான் இந்த இணக்கப்பாடு எட்டியதென காண்பிக்கலாமென்பதும் நோக்கமாக

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

இருந்திருக்கலாம்.

எதுஎப்படியோ, கூட்டமைப்பின் பேச்சு விபரங்கள் வெளியில் கசிந்து கொண்டிருக்க த.வி.கூ பக்காவாக பேச்சை முடித்து, அனைத்தையும் இழுத்து மூடி இரகசியமாக வைத்திருந்தது.

கடந்த 16ம் திகதி.வவுனியா நகரசபை தவிசாளர் தெரிவு காலை பத்து மணிக்கு இடம்பெற்றது. பத்து மணிக்கு சில நிமிடங்களின் முன்னர்தான், தமிழர் விடுதலைக்கூட்டணியும் தவிசாளரை களமிறக்கும் விசயம் கூட்டமைப்பின் தலைவர்களிற்கு தெரிந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கிட்டத்தட்ட பதுங்கித்தாக்கும் முறையில் கூட்டமைப்பிற்கு இந்த அடியை கொடுத்தது. இந்த திடீர் நடவடிக்கையால் கூட்டமைப்பினர் திண்டாடிவிட்டனர். திடீரென மாற்று ஏற்பாடுகள் செய்யவும் வழியில்லாத நிலையில், நகரசபையை இழந்தனர்.

வவுனியா நகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கும்படி ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை தமது உறுப்பினர்களிற்கு உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. ஆனால் ஐ.தே.கவிற்கு அங்கு நேரடி வேட்பாளர் ஒருவர்தான். அவர் கூட்டமைப்பை ஆதரித்தார். மிகுதி மூவரும் ரிசாட் பதியுதீன் தரப்பு. அவர்கள் த.வி.கூ ஐ ஆதரித்தனர்.

பிரதி தலைவராக சுதந்திரக் கட்சி உறுப்பினரை, இந்த கூட்டணி நிறுத்தியது. இதே புரிந்துணர்வுடன் செட்டிக்குளம் பிரதேசசபை தவிசாளர் தெரிவிலும் இந்த கூட்டணி செயற்பட்டது. த.வி.கூ அங்கு வாக்களிக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. நடுநிலை வகித்தது.

மறுநாள் நெடுங்கேணி பிரதேசசபை, வவுனியா தெற்கு பிரதேசசபை தவிசாளர் தேர்வில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உசாரடைந்து




விட்டது. இந்த சபைகளை கைப்பற்றும் உள்சுற்று பேச்சுக்களை நடத்தியது. இந்த இரண்டு சபைகளை கைப்பற்றும் பேரத்தில் இரண்டு தரப்பிலும் சிறு இழுபறியும் ஏற்பட்டது.

வவுனியா தெற்கு பிரதேசசபை தவிசாளர் பதவியை சுதந்திரக்கட்சி விரும்பியது. முதல் இரண்டு வருடம் தாமும், அடுத்த இரண்டு வருடம் த.வி.கூவையும் தவிசாளர் பதவி வகிக்கலாமென்றார்கள். ஆனால் த.வி.கூ இற்கு சங்கடம். சிங்கள கட்சியொன்றை முதலாவது பதவிக் காலத்தில் ஆதரித்து மக்களிடம் கெட்ட பெயரை வாங்க அவர்கள் விரும்பவில்லை. இதற்குள் நெடுங்கேணி பிரதேசசபையும் திருவுலசீட்டின் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வசம் சென்றுவிட்டது. அதனால் வவுனியா தெற்கு தமக்குத்தான் தேவை, பிரதி தவிசாளர் பதவியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என கூறிவிட்டார்கள்.

இதற்குள் ரெலோவும் புகுந்து விளையாடியது. வவுனியா தெற்கு பிரதேசசபையின் தவிசாளர் ரெலோவிற்கு, பிரதி தவிசாளர் புளொட்டிற்கு. அண்மைக்காலம் வரை இராணுவ துணைக்குழுவாக இருந்ததாக சொல்லப்படும் சிறிரெலோ, ரெலோவின் முன்னாள் உறுப்பினர்களால்தான் நடத்தப்படுகிறது. ரெலோவுடன் இணைவதற்கு சில மாதங்களின் முன்னர்வரை சிறிரெலோ முயன்றது. இருதரப்பும் பேச்சுவார்த்தையெல்லாம் நடத்தினர். பின்னர் அது ஏனோ நடக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் த.வி.கூ பேச்சு நடத்திக் கொண்டிருக்க, அதற்குள் இருந்த சிறிரெலோவுடன், ரெலோ பேச்சு நடத்தி, அதன் உறுப்பினர்கள் இருவரை வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருக்க வைத்தது. இதனால், ஒரு வாக்கால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ரெலோ வேட்பாளர் வெற்றிபெற்றார். ஆனால் உபதவிசாளர் தெரிவில் இப்படியான இணக்கப்பாடு எதற்கும் ரெலோ போகவில்லை. உப தவிசாளர் பதவியை சு.க பெற்றது. இது புளொட்டிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஒரே கூட்டமைப்பில் இருந்து கொண்டு, தமது தவிசாளர் பதவிக்காக மட்டும் இரகசிய பேச்சு நடத்திவிட்டு, எமக்குரிய உபதவிசாளர் பதவியை தாரை வார்த்துள்ளார்கள் என புளொட் முக்கியஸ்தர்கள் விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை, நெடுங்கேணி பிரதேசசபை உபதவிசாளர் பதவியும் புளொட்டிற்கு உரியது. எனினும், 16ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எவ் கொடுத்த அதிர்ச்சி வைத்தியத்தையடுத்து, அன்று நடந்த பேரங்களின் பின்னர் ரெலோ வேட்பாளரை நிறுத்தினால்தான் வெற்றியடைவோம் என கூறி, ரெலோ சார்பில் உபதவிசாளர் களமிறக்கப்பட்டார். புளொட் தலைமைக்கு இது தெரியாது!

இப்பொழுது மொத்தமாக வவுனியாவில் புளொட்டிற்கு எந்த சபையிலும் தவிசாளரோ, உபதவிசாளரோ கிடையாது. கூட்டமைப்பின் இரண்டு கட்சிகளும் சேர்ந்து தம்மை வெட்டிவீழ்த்தி விட்டன என புளொட் தலைவர்கள் கருதுகிறார்கள்.

யாழில் ஈ.பி.டிபியோடு கூட்டு வைக்க தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வெட்கமாக இல்லையா என கேட்ட ஈ.பி.ஆர.எல்.எவ், வவுனியாவில் ஈ.பி.டி.பி மற்றும் தென்னிலங்கை கட்சிகளுடன் எந்த வெட்கமும் இல்லாமல் கூட்டு வைத்தது. அதே போல, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஐ.தே.கவின் ஆதரவு தொடர்ந்தது. மொத்தத்தில் வவுனியா உள்ளூராட்சிசபை தவிசாளர் தெரிவு. தமிழ் தேசியத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது. ●

---

7-ம் பக்க தொடர்ச்சி...

என்ற அடிப்படையில் மாவைக்குரிய இடம் அதுவென அவர் நினைக்கலாம். ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசாதான் என்று இப்போதைக்கு அடித்து சொல்லலாம்.

இப்போதைக்கு என்றால்? சம்பந்தர் தலையிடாத வரையும்!

ஆனால், இம்முறை சம்பந்தரின் தலையீடு இம்முறை அதிகளவில் இருக்க வாய்ப்பில்லையென்றுதான் தோன்றுகிறது. முன்னரைப்போல இல்லாமல் வயோதிகம் காரணமாக கட்சிக்குள் அவரது பிடி குறைந்து கொண்டே செல்கிறது. ஆகவே முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் அவரால் அளவிற்கு அதிகமாக செல்வாக்கு செலுத்த முடியுமா என்பதும் சந்தேகம்தான். சரி, இதெல்லாம் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ளே உள்ள நிலைமைகள். தேர்தல்களம் எப்படியிருக்கும்?

இம்முறை உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளே இதற்கு சிறந்த பாடமாக இருக்கும். உள்ளூராட்சி தேர்தல்முறைமை சிறிய கட்சிகளின் ஆசனங்களை அதிகரித்தது என்பதும், வடமாகாணசபை தேர்தல் பழைய முறையிலேயே நடக்கும் வாய்ப்புக்கள் உள்ளன என்றபோதும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்குவங்கி சரிவை அவர்கள் கணக்கிலெடுக்க வேண்டும்.

இம்முறை மாகாணசபையில் எதிர்க்கட்சி வரிசையில் எட்டு உறுப்பினர்கள் உள்ளனர். நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் ஈ.பி.டி.பி மற்றும் தேசிய கட்சிகளின் வாக்கு வங்கி சடுதியாக அதிகரித்துள்ளது. இழந்த வாக்கு வங்கியை சரிசெய்யும் எந்தவித முயற்சியும் கூட்டமைப்பு தரப்பிலிருந்து எடுக்கப்படவில்லை. விளைவு மாகாணசபை எதிர்க்கட்சி வரிசையில் உட்காரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

குறைந்தது மூன்று அல்லது நான்கு உறுப்பினருக்கு குறையாமல் எதிர்கட்சியில் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு. மொத்த உறுப்பினர்கள் 38 பேரில், 12 பேர் எதிர்க்கட்சி தரப்பிற்கு சென்றால் 26 ஆசனங்களே எஞ்சும். இதைத்தான் மாவையும், விக்னேஸ்வரனும் பங்கு போட வேண்டி வரும்.

மாவை, விக்னேஸ்வரன் இரண்டு தரப்புமே தமது வெற்றியில் உறுதியாக இருப்பதாக தெரிகிறது. இதில் யார் வென்றாலும், மற்ற தரப்பு சுமார் 10 ஆசனங்களை எடுத்தால், வெல்பவர் 16 ஆசனங்களையே எடுப்பார். அதாவது, இந்த உள்ளூராட்சிசபையில் எப்படியான இழுபறி ஏற்பட்டதோ, அதே நிலைமை மாகாணசபையிலும் ஏற்படும்.

"ஈ.பி.டி.பியுடன் பேசிய விக்னேஸ்வரன்" "ஐ.தே.கவின் ஆதரவை கோரிய தமிழரசுக்கட்சி" என்பதை போன்ற செய்திகள் வெளியாகி, தமிழ் தேசிய உணர்வுடைய வாக்காளர்களை மேலும் சிதறடிக்கும் சூழல்தான் உருவாகும்.

மொத்தத்தில் வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் விசயத்தில் தமிழ் தேசிய உணர்வுடன் சிந்திக்கும் பக்குவம், தமிழர் பிரதிநிதிகள் என சொல்பவர்களிற்கு ஏற்படாவிட்டால், தந்தை செல்வா சொன்னதை போல ஈழத் தமிழர்களை ஆண்டவராலும் காப்பாற்ற முடியாத நிலைமைதான் உருவாகும்! ●

# அறைகளை எளிதில் பிரிக்கலாம்

வீடு கட்டும்போதே சுவர்களை எழுப்பி அறைகளைப் பிரிக்கிறோம். ஆனால், கட்டிய பிறகும் சிலவேளைகளில் நம்முடைய பயன்பாட்டுக்குத் தகுந்தாற்போல் அறைகளைப் பிரிப்பதற்கான தேவை ஏற்படும். அப்படியான நேரத்தில் அறைகளைப் பிரிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அறைபிரிப்பான்களில் தற்காலிக அறை பிரிப்பான், நிரந்தர அறைபிரிப்பான் ஆகியவை உள்ளன.


தற்காலிக அறைபிரிப்பானைத் தேவைப் பட்டால் எளிதில் மாற்றி அமைத்துக்கொள்ளலாம். வீட்டில் ஒரு விழா நடத்துகிறோம். அதிகமான இடம் தேவைப்படுகிறது என்றால், அந்த நேரத்தில் தற்காலிக அறைபிரிப்பானை நீக்கிவிடலாம். இம்மாதிரியான தற்காலிக அறைபிரிப்பான்களில் பல வகை இருக் கின்றன.

### மூங்கில் தூண் அறைபிரிப்பான்

மூங்கில் இன்றைக்கு வீட்டு அலங்காரத்தில் புதிய இடம் வகித்துவருகிறது. மூங்கில் அறைக்கலன்களும் இப்போது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல மூங்கில் தூண்களைப் பிரிக்க வேண்டிய இடத்தில் செங்குத்தாக அடுக்கலாம். தூண்கள் நடும் இடத்தில் கூழாங்கற்களை இட்டு நிரப்பலாம். இது அறையைப் பிரிப்பதோடு மட்டுமல்லாமல் வீட்டுக்கும் அழகு சேர்க்கும்.

### பிளாஸ்டிக் சட்டக அறைபிரிப்பான்

ஒரு சதுர அடி அளவுக்கு வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் அட்டைகளைப் பின்னி திரை போல் தொங்கச் செய்வதன் மூலம் அறைகளைப் பிரிக்கலாம். இது அறைபிரிப் பானாக மட்டுமல்லாமல் வீட்டுக்கு அழகான



தோற்றத்தையும் தரும். இது இணையதளங் களில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

### பளபளக்கும் திரை அறைபிரிப்பான்

பளபளக்கும் பிளாஸ்டிக் பாசி மணிகளைக் கோத்து நெருக்கமாகத் திரைபோல் வடிவமைத்து அறைபிரிப்பானாகப் பயன்படுத்தலாம். இது வீட்டுக்கு அழகைத் தரும். பயனும் அளிக்கும். சீனாவில் உருவாக்கப்பட்ட நவீன அறைபிரிப்பான் வடிவம் சீனப் பந்து வடிவத்தை ஒத்தது. இதுவும் வீட்டுக்கு அழகான தோற்றத்தைத் தரும். ஆனால், எளிதில் கிழிபடக்கூடியதாக இருக்கும்.

# மூலிகை இட்லி

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு எப்போதும் சத்து நிறைந்த உணவைக் கொடுக்க வேண்டும். பரீட்சை நாட்களின்போது அவர்களின் உணவில் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். துரித உணவையும் டப்பாக்களில் அடைத்து விற்கப்படும் உணவையும் தவிர்த்துவிட்டு, வயிற்றுக்குத் தொந்தரவு தராத இயற்கை உணவைத் தருவதே சிறந்தது. "இயற்கை உணவு என்றாலே பெரும்பாலான குழந்தைகள் சாப்பிட மறுத்து அடம்பிடிப்பார்கள்.

ஆனால், அவற்றைக் குழந்தைகளுக்குப் பிடித்தவகையில் சுவையாகச் சமைத்துக் கொடுத்தால் விரும்பிச் சாப்பிடுவார்கள். அப்படியான உணவொன்றை






பற்றிய குறிப்பை தருகிறோம்.

என்னென்ன தேவை: இட்லி மாவு 1 கப், தூதுவளை, துளசி, ஓமவள்ளி தலா 1 கைப்பிடி, மிளகுத் தூள் 1 டீஸ்பூன், சீரகத் தூள் 1 டீஸ்பூன், சின்ன வெங்காயம் 15 (பொடியாக நறுக்கியது), மஞ்சள் தூள், உப்பு சிறிதளவு, தேங்காய்த் துருவல் 2 டீஸ்பூன் (சிவக்க வறுத்து), நெய் 2 டீஸ்பூன்

தாளிக்க: நல்லெண்ணெய் 1 டீஸ்பூன், கடுகு, உளுத்தம் பருப்பு 1 டீஸ்பூன், கறிவேப்பிலை, மல்லித்தழை சிறிதளவு

எப்படிச் செய்வது: மூலிகைகளை அலசி, பொடியாக நறுக்கிக்கொள்ளுங்கள். பாத்திரத்தில் நெய் விட்டு கடுகு, உளுந்து போட்டுத் தாளித்து, வெங்காயம் சேர்த்துச் சிவக்க வதக்குங்கள். நறுக்கி வைத்துள்ள மூலிகைகளைச் சேர்த்து சுருள வதக்கவும். பின் மிளகுத் தூள், சீரகத் தூள், மஞ்சள் தூள், சிறிது உப்பு சேர்த்து வதக்கி இறக்குங்கள்.

இட்லித் தட்டில் கொஞ்சமாக இட்லி மாவை ஊற்றி அதன் மேலே ஒரு டீஸ்பூன் வதக்கிய மூலிகைக் கலவையை வைத்து அதன் மேல் மீண்டும் இட்லி மாவை ஊற்றி ஆவியில் வேகவிட்டு எடுங்கள். இட்லியை விரும்பிய வடிவங்களில் நறுக்கி அதன் மீது கடுகு, உளுந்து தாளித்துக் கொட்டி, தேங்காய்த் துருவலைத் தூவிப் பரிமாறுங்கள். தொட்டுக்கொள்ள எதுவும் இல்லாமலே மூலிகை இட்லியைச் சாப்பிடலாம்.

# சாவியில்லா ஸ்மார்ட் பூட்டு

ஸ்மார்ட் வீடு இப்போது பரவலாக நடைமுறைக்கு வந்துவிட்டது. அலுவலகத்திலிருந்தே வீட்டின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் ஸ்மார்ட் வெப்பநிலைச் சீராக்கி, வீட்டைக் கண்காணிக்கும் ஸ்மார்ட் பாதுகாப்புச் சாதனம், பாடல்களை ஒலிபரப்பும் மீடியா பிளேயர் எனப் பல ஸ்மார்ட் உபகரணங்கள் இப்போது வீடுகளில் இடம்பிடித்துவிட்டன. இதன் தொடர்ச்சியாகச் சாவி இல்லாத ஸ்மார்ட் பூட்டுகள் வீட்டுக் கதவுகளில் பொருத்தப்படுகின்றன. இந்த ஸ்மார்ட் பூட்டுகள் எப்படி வேலை செய்கின்றன?

### மின்னணுப் பூட்டு

ஸ்மார்ட் பூட்டு என்பது ஒரு மின்னணுப் பூட்டு. இது கம்பியில்லா இணைப்பையோ புளூடூத் இணைப்பையோ பயன்படுத்தி மற்ற சாதனங்களுடன் தொடர்புகொள்கிறது. இது தனக்கென்று செயலியைக் கொண்டிருக்கும். இதை நிறுவும்போது ஸ்மார்ட் ஹப் அல்லது ஸ்மார்ட் கைப்பேசியில் அதற்குரிய செயலியைத் தரவிறக்கம் செய்து இணைக்க வேண்டும். அதன் பின் இது தானாகவே திறந்து மூடும் வண்ணம் இயங்கும்.

சொல்லப்போனால் இந்த ஸ்மார்ட் பூட்டுதான் ஸ்மார்ட் வீடுகளில் முக்கியமானது. இது நீங்கள் விரும்பும் நேரத்தில் உங்களை வெறுமனே வீட்டுக்குள் செல்லவும் வெளியேறவும் மட்டும் அனுமதிப்பதில்லை, நீங்கள் இல்லாத நேரத்தில் வீட்டுக்குள் வருவோர் போவாரைக் கண்காணிக்கும். உங்கள் கைப்பேசி மூலம் இதைத் திறக்கலாம்; மூடலாம். இது தவிர உங்கள் நண்பர்கள், உறவினர்கள் வந்தால் தானாகவே திறக்கும் வசதியையும் இதில் ஏற்படுத்திக்கொள்ளலாம். மேலும், சில குறிப்பிட்ட நேரத்தில் நீங்கள் விரும்பும் சில குறிப்பிட்ட மனிதர்களைத் தானாகவே அனுமதிக்கும் வசதியும் இதில் உண்டு. கைப்பேசி மூலம் மட்டும் அல்லாமல் இதைக் குரல் வழியாகவும் இயக்கலாம், சில ஸ்மார்ட் பூட்டுகள் உங்கள் தோற்றத்தை உணர்ந்து இயங்கும் தன்மை கொண்டவை.

இதை ஸ்மார்ட் ஹப் உடன் இணைத்துக்கொண்டால், நீங்கள் கதவைத் திறக்கும் போது, வீட்டினுள் விளக்குகளும் மின்விசிறியும் வெப்பநிலை சீராக்கியும் தானாகவே இயங்க ஆரம்பிக்கும். இதில் உங்கள் தேர்வு எது என்பது




உங்களின் தேவைகளையும் பல காரணிகளையும் பொருத்து உள்ளது. முக்கியமாக அதன் விலையும் ஒரு தவிர்க்க முடியாத காரணி. இந்த இரண்டிலும் உள்ள சாதக, பாதகங்களைத்தெரிந்துவைத்திருந்தால் நம் தேர்வு குறித்து பின்னால் வருந்தும் நிலை ஏற்படாது. சில ஸ்மார்ட் பூட்டுகள் வைஃபை, புளூடூத் வசதியைக்கொண்டிருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பொதுவாக வைஃபை ஸ்மார்ட் பூட்டு தன்னகத்தே நிறைய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். இதை உங்கள் வீட்டு வைஃபை நெட்வொர்க் உடன் இணைக்க முடியும். இதனால் இதைத் தொலைதூரத்திலிருந்தும் இயக்க முடியும். ஆனால், இதை இணையத்துடன் இணைத்திருப்பதால் சில விஷமத்தனமான ஊடுருவல்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே, இந்த இணையம் சார்ந்த பாதுகாப்புக் குறைபாடுகளை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

புளூடூத் ஸ்மார்ட் பூட்டு மிகவும் பாதுகாப் பானது. ஏனென்றால், இதை நாம் இணை யத்துடன் இணைப்பதில்லை. இது குறிப்பிட்ட கைப்பேசிக்கும் ஸ்மார்ட் பூட்டுக்கும் இடையே உள்ள நம்பகமான இணைப்பைக் கொண்டுதான் இயங்கும். புளூடூத் ஸ்மார்ட் பூட்டை வெகு தொலைவிலிருந்து இயக்க முடியாது என்பது ஒரு குறை.

### நிறுவுதல்

எல்லா ஸ்மார்ட் பூட்டுகளையும் நிறுவுவது எளிது என்றாலும் சில நிறுவனங்களின் தயாரிப்புகள் மிகவும் எளிதாக இருக்கின்றன. இவை பொதுவாக இரண்டு பாகங்களைக்கொண்டிருக்கும். ஒரு பாகத்தைக் கதவின் முன் புறமும் இன்னொரு பாகத்தைக் கதவின் பின்புறமும் பொருத்த வேண்டும். வெளிப் பகுதி பொதுவாகத் தொடு உணர்ச்சி கொண்ட திரையைக் கொண்டிருக்கும். பின் புறப் பகுதி தாழ்ப்பாளைக் கொண்டதாக இருக்கும். வீட்டின் கதவில் உள்ள பழைய பூட்டை அகற்றிவிட்டு இதைப் பொருத்த வேண்டும்.

### சந்தையில் கிடைக்கும் தயாரிப்புகள்

வழக்கமான பூட்டுகளுடன் ஒப்பிடும்போது ஸ்மார்ட் பூட்டுகளுக்கு நிறைய தயாரிப்புகள் இல்லைதான். ஆனாலும் ஓகஸ்ட், யாலே,டனாலொக் போன்ற சில நல்ல தயாரிப்புகள் அமேசான் போன்ற இணையத்தில் கிடைக்கின்றன.

### விலை

வழக்கமான பூட்டைத் தவிர்த்து ஸ்மார்ட் பூட்டைத்தேர்வு செய்யும்போது நம் மனத்தில் தோன்றும் முதல் எண்ணம் அதன் விலை பற்றியதாகத்தான் இருக்கும். கண்டிப்பாக இந்த ஸ்மார்ட் பூட்டின் விலை சாதாரணப் பூட்டின் விலையைவிடப் பன்மடங்கு அதிகம்தான். சில ஸ்மார்ட் பூட்டுகள் சந்தையில் இருபதாயிரம் ரூபாய் விலையில் விற்கப்படுகிறது. வைஃபை வசதி, குரல் வழி சேவை, மின்னஞ்சல் வசதி, அலாரம் வசதி போன்ற சிறப்பியல்புகளைப் பொருத்து அதன் விலையும் அதிகரிக்கும். இதன் அதிகபட்ச விலை ரூபாய் ஐம்பதாயிரம வரையுள்ளன.

### திறந்திடு சீசே


அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதையில் வருவது மாதிரி திறந்து விடு சீசே என்று சொன்னவுடன் திறக்கும் இந்த ஸ்மார்ட் பூட்டுகள் நம் வீட்டின் பாதுகாப்பைப் பன்மடங்கு அதிகரிக்கிறது. காகிதம் இல்லாத பணம் போன்று இப்போது சாவி இல்லாத பூட்டின் உபயோகமும் மிகவும் பரவலாகிவருகிறது. பயன்பாடு அதிகரிக்க அதிகரிக்க இதன் விலையும் வரும் நாட்களில் குறைந்து அனைவரும் உபயோகிக்கும் வண்ணம் மாறலாம்.

- கம்பியில்லா இணைப்பையோ புளூடூத் இணைப்பையோ பயன்படுத்தித் திறக்கக் கூடியது ஸ்மார்ட் பூட்டு.
- ஸ்மார்ட் ஹப் அல்லது ஸ்மார்ட் கைப்பேசியில் ஸ்மார்ட் பூட்டுக்குரிய செயலியைத் தரவிறக்கம் செய்து இணைக்க வேண்டும்.
- உங்கள் நண்பர்கள், உறவினர்கள் வந்தால் தானாகவே திறக்கும் வசதியையும் இதில் ஏற்படுத்திக்கொள்ளலாம்.
- இந்தப் பூட்டை ஸ்மார்ட் ஹப் உடன் இணைத்துவிட்டால், கதவைத் திறந்ததும் விளக்குகளும் மின்விசிறியும் வெப்பநிலைச் சீராக்கி போன்ற சாதனங்களைத் தானாக இயக்கும்.

# திலீபன் நினைவுத்தூபி அமைக்கலாமா?

## சட்டம் என்ன சொல்கிறது?

ஜொனி



யாழ் மாநகரசபையின் முதலாவது அமர்வில் அதிகமாக பேசப்பட்ட விடயம் சிலைகள் அமைப்பது பற்றித்தான். திலீபனில் தொடங்கி பிரபாகரன் வரை சிலை வைக்க வேண்டுமென உணர்ச்சிவசப்பட்டு பேசினார்கள். அரசியலுக்காக அல்லாமல், மனப்பூர்வமாக இதை செய்தார்கள் என்றால், யார்தான் மகிழச்சியடைய மாட்டார்கள்?

இப்பொழுது அது விசயமல்ல. திலீபனின் நினைவிட புனரமைப்பிற்கு பின்னால் நிறைய விசயங்கள் உள்ளன. அதில் முதலாவது, திலீபனின் நினைவிடத்தை யாழ்.மாநகரசபையின் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு புனரமைக்கலாமா?

இதற்கு பதில் இல்லையென்பதே!

மாநகரசபை தீர்மானத்தை வைத்துக் கொண்டு, மாநகரசபை முதல்வர் நினைத்தாலும் இலகுவில் அதை செய்ய முடியாதென்பதே உண்மை. ஏனெனில், சட்டரீதியான நிறைய தடைகள் உள்ளன. இதை புரியவைக்க, முதலில் சில விசயங்களை சொல்ல வேண்டியிருக்கிறது.

1987 இல் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார். இப்பொழுது சிலை அமைந்துள்ள இடத்தில் அவர் உண்ணாவிரதம் இருக்கவில்லை. கோயில் வளாகத்திற்குள்ளேயே உண்ணாவிரதம் இருந்தார். அந்த சமயத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளராக இருந்தவர் சீ.வீ.கே.சிவஞானம். திலீபனிற்கு நினைவுத்தூபி ஒன்று கட்ட அவர் விரும்பினார். ஆனால் திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர் வளாகத்திற்குள் நினைவுத்தூபி கட்டப்படுவதை நல்லூர் ஆலய நிர்வாகம் விரும்பவில்லை. காரணம், அப்பொழுது இந்திய இராணுவ கெடுபிடிகள் ஆரம்பித்திருந்தன.

இப்பொழுது தூபி அமைந்துள்ள இடம் தனியாரிடம் இருந்து நீண்ட கால குத்தகைக்கு பெறப்பட்ட இடம். அந்த இடத்தில் தூபி கட்ட ஆட்சேபணையில்லையென ஆலய நிர்வாகம் கூற, அங்கு தூபி கட்டப்பட்டது. அப்போதைய ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தனது சொந்தப்பணத்தில் இருந்துதான் அந்த தூபியை கட்டினார். இதனால் தூபி கட்டப்பட்ட நான்காம் நாள், அவர் மீது இந்திய இராணுவம் துப்பாக்கி பிரயோகம் செய்ததில், காலில் காயமடைந்தார். அந்த காணி தனியாரிற்கு சொந்தமானதென்பதால், சிலை அமைப்பதெனில் முதலில் அந்த காணி உரிமையாளர்களின் சம்மதம் பெறப்பட வேண்டும்!

காணி உரிமையாளர் சம்மதித்தாலும் இரண்டாவது சிக்கல் ஒன்றுள்ளது. அது முதலமைச்சர் பல மாதங்களின் முன்னர் எழுதிய கடிதமொன்று!

யாழ் மாநகரசபை ஆணையாளருக்கு முதலமைச்சரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று உள்ளது. பல மாதங்களின் முன் எழுதப்பட்ட அந்த கடிதத்தில் திலீபன் நினைவுத்தூபியில் எந்தவிதமாக நடவடிக்கையும் செய்ய வேண்டாம் என கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஏன் அப்படி எழுதினார்?

வடமாகாணசபையினால் திலீபன் தூபி புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது முதலில் நல்லூர் ஆலய நிர்வாகத்துடன் பேச்சு நடத்தப்பட்டது. திலீபன் தூபிக்கு ஆதரவும் இல்லை, எதிர்ப்பும் இல்லை என்பதுதான் நல்லூர் ஆலய நிர்வாகத்தின் பதில். காரணம், திலீப்னின் தூபிக்கு இப்பொழுது ஆலய நிர்வாகம் அனுமதியளித்தால், இன்னொரு சமயத்தில் பௌத்த அடையாளமொன்றை வைக்க யாராவது வந்தால் தடுக்க முடியாமல் போய்விடுமென நினைத்தார்கள்.

இதையடுத்து, தூபியை புனரமைக்க ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக முதலமைச்சர், யாழ் மாநகரசபை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்திலேயே தூபியை அப்படியே பேணுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

யாழ் மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற்றினாலோ, முதல்வர் விடாப்பிடியாக நின்றாலோ கூட அந்த சிலையை அவர்கள் அமைக்க முடியாது. முதலமைச்சரின் அனுமதி கட்டாயம் தேவை. உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி இல்லாமல் எந்த சிலைகளையும் அமைக்க முடியாது என்பதே சட்ட ஏற்பாடு.

ஆகவே, தகர்க்கப்பட்டுள்ள திலீபனின் தூபியை அமைப்பதெனில் முதலில் நில உரிமையாளர்களிடம் அனுமதி பெற வேண்டும். இரண்டாவது, முதலமைச்சரும், இப்பொழுது திடீரென சிலை அமைக்க புறப்பட்டவர்களும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து, யார் தூபியை அமைப்பதென்ற முடிவெடுக்க வேண்டும்.

ஒருவேளை, தூபியை மாகாண சபையே அமைக்குமென முதலமைச்சர் முடிவெடுத்தால், அதில் யாரும் தலையிட முடியாத நிலையேற்படும். திலீபனின் சிலை அமைப்பது தொடர்பாக உள்ள சிக்கல்கள் இவை. அதைவிட, இன்னொரு விவகாரமும் உள்ளது. அதையும் குறிப்பிட்டு விடுகிறோம்.

திலீபனின் நினைவிடம் புனரமைப்பு, நினைவிட சுற்றுவேலிக்கான ஏற்பாடுகள் பல மாதங்களிற்கு முன்னரே செய்யப்பட்டாலும், அதிகாரிகளிற்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக அது நிறைவேறாமல் இருக்கிறது.

கிளிநொச்சி எம்.பி சிறிதரன் கடந்த வருடம் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல சுற்றுமதிலுக்காக ஒரு தொகை பணம் ஒதுக்கியிருந்தார். இதன்போது, திலீபன் நினைவுத்தூபி புனரமைப்பிற்காக இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கினார். என்றாலும், கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல சுற்றுமதில் விவகாரம் பூதகாரமாகி, கிளிநொச்சி அரசஅதிபர் விளக்கமளிக்கும் நிலைக்கு செல்ல வேண்டியிருந்தது. இதையடுத்து, திலீபன் நினைவிட புனரமைப்பு விவகாரத்தில் அதிகாரிகள் தயக்கம் காட்ட தொடங்கிவிட்டனர்.

நல்லூர் பிரதேசசபை மற்றும் யாழ் மாநகரசபை என்பன இந்த நிதியுடன் தொடர்புபட்டிருந்தன. எப்படியோ மற்ற தரப்பிடம் புனரமைப்பு வேலையை கொடுத்துவிட்டு ஒதுங்கி விடவே இரண்டு தரப்பும் விரும்பியது. இரண்டு நிர்வாக மையங்களில் இருந்த அதிகாரிகளும் சில அழுத்தங்களிற்கு உள்ளானதாலேயே பின்வாங்க வேண்டியிருந்ததாக சொல்லப்பட்டது.

எப்படியோ, இறுதியில் அது யாழ் மாநகரசபையின் பொறுப்பில் சென்றது. இரண்டு இலட்சம் ரூபாவிற்கான சுற்றுவேலி தயாரிக்கப்பட்டது. யாழ் மாநகரசபை அமைந்த பின்னர் சுற்றுவேலியை அவர்கள் மூலம் நிறுவிக் கொள்ளலாம் என வைக்கப்பட்டுள்ளது. ஆக, ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள சுற்றுவேலியொன்றை கொண்டு வந்து, நினைவுத்தூபியில் வைப்பதிலும் என்ன தாமதம்?





# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

71

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டில் ஒரு பாடல் உண்டு. 'வேரல் வேலி வேர்கோட் படவின்...' எனத் தொடங்கும் அந்தப் பாடலில் தலைவியின் தோழி, தலைவனிடம் சொல்கிறாள்... 'தலைவியின் காதல் நோய் மிகப் பெரியது. அவளால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை...' காதலை, 'நோய்' எனச் சொல்கிறார் கபிலர். என்னிடம் ஆலோசனைக்கு வந்திருந்தார் ஒருவர். 50 வயது. "எனக்கு சர்க்கரைநோய் இருக்கு. புகைபிடிப்பேன். கடந்த சில வாரங்களாக விரைப்புத் தன்மை சரியாக இல்லை. என் நண்பர் ஒருத்தர்கிட்ட 'டாக்டரைப் பார்க்கலாமா?'னு கேட்டேன். 'இதுக்குப் போய் ஏன் வீணா செலவு செய்யறே? 50 வயசாகிடுச்சு. ரெண்டு குழந்தைங்க இருக்காங்க. இனிமே உனக்கு எதுக்கு செக்ஸ்?' என்று சொன்னார். மனசு கேட்காம உங்ககிட்ட வந்திருக்கேன்..." என்றார்.

நான் அவருக்கு விரைப்புத்தன்மை பிரச்னைக்கான சோதனைகளுடன், இதயத்துக்கான சோதனைகளையும் செய்யச் சொல்லி எழுதிக் கொடுத்தேன். அதில், அவருக்கு இதயத்திலிருக்கும் ரத்தக் குழாயில் பிரச்னை இருப்பது தெரியவந்தது. விரைப்புத்தன்மைக் கோளாறு இருந்தால், இதயத்தில் பிரச்னை இருக்கலாம்.

உடலின் ஒவ்வோர் உறுப்பும் சரியாகச் செயல்பட, ஆக்சிஜனும், ஊட்டச்சத்துகளும் தேவை. இவை ரத்தத்தின் மூலமாகத்தான் ஆணுறுப்பு உள்பட அனைத்து உறுப்புகளுக்கும் சென்றடைகின்றன. ரத்தம் சரியாகச் சென்றடைய, ரத்தக்குழாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ரத்தக்குழாயில் மொத்தம் மூன்று அடுக்குகள் இருக்கின்றன. அவற்றின், உள்ளேயிருக்கும் அடுக்கின் பெயர் 'எண்டோதீலியம்' (Inner layer - Endothelium). அதிக ரத்தம் தேவைப்படும்போது, இது விரிந்து கொடுக்கும்; மற்ற நேரங்களில் இயல்பாக இருக்கும். அதேபோல, உடலின் கழிவுகளும், கார்பன் டை ஆக்ஸைடும் வெளியேறுவதற்கு இந்த அடுக்கு ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த அடுக்கில் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால், ரத்தக்குழாய்க்கு சுருங்கி, விரியும் தன்மை இல்லாமல் போய்விடும்; சில நேரங்களில் ரத்தக் குழாய் அடைப்பும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

ஆணுறுப்புக்கு ரத்தம் சரியாகச் சென்றால்தான் விரைப்புத்தன்மை ஏற்படும். மூளையின் தூண்டுதலால் செக்ஸ் உணர்வு வரும்போது, ஆணுறுப்பில் ரத்த ஓட்டம் அதிகமாகி, விரைப்புத்தன்மை ஏற்படும். எண்டோதீலிய அடுக்கில் பிரச்னை ஏற்பட்டு, ரத்த ஓட்டம் தடைபட்டால் விரைப்புத்தன்மை ஏற்படாது. இதேபோல, இதயத்திலிருக்கும் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டால், நெஞ்சுவலி ஏற்படும். எண்டோதீலியத்தில் பாதிப்பு உண்டாக ஆரம்பித்துவிட்டால், அது உடலிலிருக்கும் அனைத்து ரத்தக்குழாய்களிலும் ஏற்படும்.

ஆணுறுப்பிலிருக்கும் ரத்தக் குழாயின் விட்டம் 12 மில்லிமீட்டர் இருக்கும். இதயத்திலிருக்கும் ரத்தக் குழாயின் விட்டம் 34 மில்லிமீட்டர் இருக்கும். ஆணுறுப்பில் இருக்கும் ரத்தக்குழாய் சிறியது என்பதால், அடைப்பு சீக்கிரத்தில் வெளியே தெரிந்துவிடும். ஆனால், இதயத்திலிருக்கும் ரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டால், மெதுவாகத்தான் தெரியும். 'ஓர் ஆணுக்கு உடல்ரீதியான பிரச்னைகளால் விரைப்புத்தன்மைக் கோளாறு ஏற்பட்டால், ஏழு ஆண்டுகள் கழித்து இதயத்தில் கோளாறு ஏற்படும்' என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கட்டுப்பாடில்லாத சர்க்கரைநோய், கொழுப்புச்சத்து, உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம், புகைபிடித்தல், புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துவது, உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கைமுறை போன்றவையே இதற்குக் காரணங்கள். உடலின் மற்ற உறுப்புகளில் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது என்பதன் அறிகுறிதான் விரைப்புத்தன்மை கோளாறு. இந்தப் பிரச்னை ஏற்பட்டால், அலட்சியம் செய்யாமல் மருத்துவரைப் பார்க்க வேண்டியது அவசியம்.

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)



## யாழ் நகரில் இடம்பெற்ற அக்ஷ்ய திருதியை காட்சிகள்





16 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

# லாபகரமான ஏற்றுமதிக்கு அவசியமான 5 விஷயங்கள்!

ஏற்றுமதித் தொழிலைத் தொடங்கும்முன் தெரிந்து கொள்ள வேண்டியவிஷயங்களையும்,ஏற்றுமதித் தொழில் செய்வதற்குத் தேவையான ரிஜிஸ்ட்ரேஷன் நடைமுறைகளையும், ஏற்றுமதி செய்யப்போகிற பொருளைத் தேர்ந்தெடுப்பது குறித்தும் கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம். இப்போது உங்களிடம் ஐஇ கோட் இருக்கிறது, ஏற்றுமதி செய்யப்போகும் பொருளையும் தேர்வு செய்து விட்டீர்கள். அடுத்து என்ன?

பொருள்களுக்கான ஓர்டரைப் பெறுவது, அவற்றை பக்கிங் செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவது (Shipment), அனுப்பிய பொருள்களுக்கான பணத்தைப் பெறுவது ஆகியவைதான்.

என்ன இவ்வளவு சாதாரணமாக சொல்லிவீட்டீர்கள் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் நினைப்பது சரிதான். ஓர்டர் எடுப்பதும், பொருள்களுக்கான பணத்தைப் பெறுவதும் சாதாரண காரியம் இல்லைதான். ஆனால், முயன்றால் முடியாதது எதுவுமில்லை.

பொருள்களுக்கான ஓர்டரைப் பெறுவது குறித்தும், பொருள்களை அனுப்பி அதற்கானப் பணத்தைப் பெறுவது குறித்தும் இனிவரும் அத்தியாயங்களில் தனித்தனியாக, விரிவாகப் பார்ப்போம். அதற்குமுன், ஏற்றுமதிச் சந்தையில் இருக்கும் நடைமுறைகள் மற்றும் பயன்படுத்த வேண்டிய வார்த்தைகள் பற்றி முதலில் பார்ப்போம். இந்த வார்த்தைகளைத் தெரிந்துகொண்டால் மட்டுமே, நாம் நமது பொருளை இறக்குமதியாளரிடம் விற்கும்போது, அவர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளித்து அவரை 'இம்ப்ரஸ்' செய்து ஓர்டர் பெற முடியும். அவை என்னென்ன என்று பார்ப்போம்.

### பிசினஸ் வகை (Mode of Business)

நீங்கள் பொருளை ஏற்றுமதி செய்யப் போகிறீர்களா, இறக்குமதி செய்யப் போகிறீர்களா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதனைப் பொறுத்து நம்முடைய பிஸ்னஸ் நடைமுறைகள் மாறும்.

நாம் ஏற்றுமதி செய்வதாக இருந்தால், முதலில் இறக்குமதியாளரைக் கண்டு பிடித்து அவரிடம் பேசி ஓர்டர் எடுத்து, பொருளை ஏற்றுமதி செய்ய வேண்டும். இறக்குமதி செய்வதாக இருந்தால், நமக்குத் தேவையான பொருள், நமக்குத் தேவையான அளவில், தரத்தில் மற்றும் விலையில் யாரிடம் இருக்கிறதோ, அவரைத் தேடிப் பிடித்து பொருளை வாங்கவேண்டும்.

இதில் இறக்குமதி பிஸ்னஸ் செய்வதைக் காட்டிலும், ஏற்றுமதி பிஸ்னஸ் செய்வது நமக்கும், நாட்டுக்கும் நல்லது. ஏனெனில் ஏற்றுமதி பிஸ்னஸ் மூலம் அந்நிய செலாவணி நாட்டுக்குள் வருவதால் நம்முடைய அந்நிய செலாவணி இருப்பு அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலுக்கு மானியங்களும், ஊக்கத் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

### பொருளின் வகை (Selection of Product)

பொருளைத் தேர்ந்தெடுக்கும்போது முன்பே சொன்னதுபோல எந்த நாட்டுக்கு எந்தப் பொருளை அனுப்பப் போகிறோம் என்பதை முடிவு செய்ய வேண்டும். பொருளைத் தேர்ந்தெடுப்பதற்கு பின்வரும் காரணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பொருளுக்கான தேவை அந்த நாட்டில் இருக்க வேண்டும். அது பற்றாக்குறையின் காரணமாகவோ, உற்பத்திச் செலவின் காரணமாகவோ இருக்கலாம். மேலும், பொருள்கள் அந்த நாட்டின் கலாசாரம், விழாக்கள் போன்றவற்றோடு தொடர்புடையதாக இருக்கலாம். மற்றொரு காரணம், சீசன். அதாவது, பருவநிலையின் காரணமாக பொருள்களின் தேவை இருக்கும். இவற்றை அடிப்படையாக வைத்து நாம் ஏற்றுமதி செய்யப் போகிற பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### இறக்குமதியாளரைத் தேர்ந்தெடுத்தல் (Selection of Buyer)

ஏற்றுமதி செய்யும் நீங்கள் எக்ஸ்போர்ட்டர் (Exporter), உங்களிடம் இருந்து பொருளை இறக்குமதி செய்யும் வெளிநாட்டினர் இறக்குமதியாளர் (Importer) அல்லது பையர் (Buyer) என அழைக்கப்படுவார். பொருளை உங்களுக்குக் கொடுப்பவர் சப்ளையர். உங்களுடைய பையரை இரண்டு வழிகளில் தேர்வு செய்யலாம். ஒன்று, நண்பர்கள், உறவினர்கள் மற்றும் ஏற்கெனவே ஏற்றுமதிச் சந்தையில் இருப்பவர்கள் மூலமாக இறக்குமதியாளரைத் தேர்ந்தெடுப்பது. இரண்டாவது, இணைய தளங்களில் தேடிக் கண்டுபிடிப்பது. இந்த இரண்டு வழிகளிலும் தேர்வு செய்யப்படும் இறக்குமதியாளர்களின் நம்பகத்தன்மையைத் தெரிந்து கொண்ட பிறகே அவர்களிடம் பிஸ்னஸ் பற்றி பேச வேண்டும். எப்படி இறக்குமதியாளரின் நம்பகத் தன்மையைத் தெரிந்துகொள்வது என்பதைப்பற்றி பின்னர் பார்க்க இருக்கிறோம்.

### ஷிப்மெண்ட் முறைகள் (Mode of shipment)

இறக்குமதியாளரிடமிருந்து ஓர்டர் கிடைத்த பிறகு நமது பொருளை அனுப்ப வேண்டும். பொருளை அனுப்பும் ஷிப்மெண்ட் முறைகள் இரண்டு வழிகளில் உள்ளன. ஒன்று, விமான வழி, இரண்டு, கடல் வழி. நம்முடைய பொருளின் தன்மை, சென்று சேர வேண்டிய கால அளவு, ஆகும் செலவு ஆகியவற்றைப் பொறுத்து இதனை முடிவு செய்ய வேண்டும்.

பெரும்பாலும், விரைவாக அழுகக் கூடிய பொருள்களான, காய்கறிகள், பழங்கள், மீன் மற்றும் மாமிசம், பூக்கள் போன்றவை இறக்குமதியாளருக்கு உடனடியாகத் தேவைப்படக்கூடிய இயந்திரங்கள், கருவிகள் போன்றவை தங்கம், வைரம் போன்ற விலை மதிப்புமிக்க பொருள்கள் போன்றவை விமான வழி ஷிப்மெண்ட் முறையில் அனுப்பப்படும்.

பெரும்பாலும் துணி வகைகள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்ற அழுகாத பொருள்கள், அதிக விலைமதிப்பில்லாத பொருள்கள், உடனடியாக அனுப்பும் அவசியம் இல்லாத பொருள்கள், கப்பல் வழி மூலம் அனுப்பப்படும்.

### பேமெண்ட் முறைகள் (Mode of Payment)

ஏற்றுமதி பிசினஸில் பேமெண்ட் முறைகள் மிக முக்கியமானது. இவற்றை முறையாக அறிந்துகொண்டு செயல்படுத்துவதன் மூலம் பெரும்பாலும் நஷ்டத்தைத் தவிர்த்து, ஏற்றுமதியில் ஜெயிக்க முடியும். ஐந்து வகையான பேமெண்ட் முறைகள் ஏற்றுமதி/இறக்குமதி பிசினஸில் உள்ளன.




*1. அட்வான்ஸ் பேமெண்ட்* (Advance payment) *2. லெட்டர் ஒஃப் கிரெடிட்* (Letter of Credit) *3.டொக்குமெண்ட் எகெய்ன்ஸ்ட் பேமெண்ட்* (Document Against Payment) *4.டொக்குமெண்ட் எகெய்ன்ஸ்ட் அக்சப்டென்ஸ்* (Document Against Acceptance) *5. ஓப்பன் எக்கவுண்ட்* (Open Account)

பேமெண்ட் முறையைப் பொருளை விற்பவர் தான் முடிவு செய்ய வேண்டும். பெரும்பாலும் அட்வான்ஸ் பேமெண்ட், லெட்டர் ஒஃப் கிரெடிட் மூலம் பணத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். ஏனெனில் எங்கோ இருக்கும் இறக்குமதியாளர் எப்படிப்பட்டவர் என்பது நமக்கு தெரியாதல்லவா? ஆனால், சில நேரங்களில் ஏற்றுமதி செய்யும் உங்களுக்கும், இறக்குமதியாளருக்கும் சரியாக இருக்கும் பேமெண்ட் முறையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள தயாராகவும் இருக்க வேண்டும்.

பேமெண்ட் முறைகளில் முக்கியமாக கவனத்தில்கொள்ள வேண்டியவிஷயம் ஏற்றுமதி/இறக்குமதி பிசினஸில் பணப் பரிவர்த்தனை, ஐஇ கோட் விண்ணப்பிக்கும் போது கொடுத்த வங்கிக் கணக்கு வழியாகத்தான் நடை பெற வேண்டும். ரொக்கமாக ஒரு போதும் வாங்கக்கூடாது. தொடரும்...




இர்பான் கான், அவரது மனைவி கீர்த்தி குல்ஹரி. மனைவியை அதிகம் நேசிப்பவர், திடீரென ஒருநாள் அந்தக் காட்சியைப் பார்த்து விடுகிறார். கீர்த்தி, அவரது கள்ளக்காதலன் அருணோதய் சிங் ஒன்றாக இருப்பதைப் பார்த்ததும் கோபத்தின் உச்சிக்குச் செல்லும் இர்பான் கான், மனைவியைக் கொல்ல வேண்டும் அல்லது கள்ளக்காதலனையாவது கொல்ல வேண்டும் என்று முடிவு செய்கிறார். ஆனால், இவ்விரண்டும் செய்யாமல் இன்னொன்று செய்தால் என்னவென்று யோசிக்கிறார். தனக்கு துரோகம் செய்தவர்களைத் தவிக்க வைப்பதற்கு பிளான் போடுகிறார்.

அந்த கள்ளக்காதல் விவகாரத்தை வைத்துக்கொண்டு, அருணோதய் சிங்கை பிளாக்மெயில் செய்வதற்கு ஆரம்பிக்கிறார். இந்த பிளாக்மெயில் ஒட்டுமொத்தமாக அந்த மூவரின் வாழ்க்கையையும் திசை திருப்பி விடுகிறது. எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படுகிறது. அது எப்படி என்பதை படபடக்கச் சொல்லியிருக்கிறது படம். மூளை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இர்பான் கான், லண்டனில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரது படம் ரிலீசாகி இருக்கிறது. இப்படியொரு நடிகர், இந்திய சினிமாவுக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷம்.

கடவுளே, சீக்கிரம் நலமாகி மனுஷன் திரும்பி வர வேண்டும் என காட்சிக்கு காட்சி ஏங்க வைத்திருக்கிறார். படம் முழுவதும் இர்பான் ராஜ்ஜியம்தான். மனைவியின் துரோகத்தை நம்பமுடியாமல் தவிக்கும்போதும், பிறகுசுதாரித்து அதிலிருந்து மீண்டு வந்து பிளாக்மெயிலராக மாறும்போதும், 'நான் வேற லெவல் நடிகன்டா' என்று அதகளம் செய்கிறார். கள்ளக்காதலை மறைத்தபடி, கணவனிடம் பொய்யாக அன்பு காட்டும் இடங்களில் எல்லாம் கீர்த்தி நடிப்பு, பலே. அருணோதய் சிங், திவ்யா தத்தா என படத்தில் வரும் எல்லோருமே கவனம் ஈர்த்திருக்கிறார்கள். முதல் பாதியில் கதைக்கான காட்சிகளுடன் படம் நகர்ந்தாலும், இழுவையாக நகர்வது மட்டும்மதான் மைனஸ். எடிட்டிங்கில் இன்னும் மெனக்கெட்டிருந்தால் அந்தக் குறையும் களைந்திருக்கலாம். இடைவேளைக்குப் பிறகு படம் ஜெட் வேகத்தில் பறக்கிறது. பிளாக்மெயில் யார், யாரைச் செய்கிறார்கள் என்ற கான்செப்ட்டில் திரில்லிங்காக படத்தை நகர்த்திச் சென்றிருக்கிறார் டைரக்டர் அபினய் டியோ. சினிமாவுக்கான எந்த கமர்ஷியல் விஷயங்களையும் நுழைக்காமல், அதேநேரத்தில் கமர்ஷியலாக நல்ல படத்தைக் கொடுத்திருக்கிறார்.



## இருமொழி படத்தில் கார்த்தி?

'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்த கார்த்தி அப்படத்தின் வெற்றிக்குபிறகு அடுத்த படம் தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வந்தார். தனது அண்ணன் சூர்யா தயாரிக்கும் 'கடைக்குட்டி சிங்கம்' படத்தில் தற்போது நடித்து வருகிறார். பாண்டிராஜ் இப்படத்தை இயக்குகிறார். விவசாய பின்னணியில் இதன் கதை அமைந்திருக்கிறது. தமிழ் திரையுலகில் தற்போது வேலை நிறுத்தம் நடந்து வருவதால் படப்பிடிப்பு, திரைப்பட பணிகள் முடங்கியிருக்கின்றன. இந்நிலையில் டோலிவுட் இயக்குனர் ரவி உடுகலா இயக்கத்தில் தமிழ், தெலுங்கில் உருவாகும் படத்தில் கார்த்தி நடிப்பதாக தகவல் பரவியது. இதுபற்றி அறிந்த கார்த்தி அந்த தகவல் அடிப்படையற்றது யாரிடமும் நான் தற்போது கதை கேட்கவில்லை' என தெரிவித்திருக்கிறார். இதுபற்றி அவரது தரப்பில் கூறும்போது,'பாண்டிராஜ் இயக்கும் கடைக்குட்டி சிங்கம் படத்தின் படப்பிடிப்பை முடித்திருக்கும் கார்த்தி அடுத்து நடிக்க உள்ள 'கார்த்தி 17' படத்தில் கவனம் செலுத்த உள்ளார். தற்போது திரையுலகில் நடக்கும் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தபிறகு அப்படத்தின் பணிகள் துவங்கும். இதில் கார்த்திக், ரம்யா கிருஷ்ணன், ரகுல் ப்ரீத் சிங் நடிக்க உள்ளனர்' என்றனர்.

## தமிழில் ஹீரோவாக நடிக்கவே ஆசை

பாலிவுட்டில் இளம் நடிகர்களில் தற்போது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளவர் நடிகர் வருண் தவான். மற்ற பாலிவுட் நடிகர்களை போலவே தமிழிலும் தெலுங்கிலும், குறிப்பாக ஷங்கர் அல்லது ராஜமவுலி டைரக்சனில் நடிக்கவே இவரும் விரும்புகிறாராம். கடந்த சில வருடங்களாகவே பாலிவுட் நடிகர்கள் பலரும் தமிழில் வில்லன் கேரக்டர்களில் தானே நடிக்கிறார்கள், நீங்களும் அதுபோல வில்லனாக என்ட்ரி கொடுக்கலாமே என கேட்டால் முதலில் ஹீரோவாக ஒரு படம் நடித்துவிட்டு, அதன்பின் வில்லனாக நடிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்கிறாராம் வருண்.

## ஸ்ரீரெட்டி மீதான தடை நீக்கம்

தெலுங்கு நடிகை ஸ்ரீரெட்டி தனக்கு வாய்ப்பு தருவதாக கூறி பாலியல் தொல்லை கொடுத்த தெலுங்கு பிரபலங்கள் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் தெரிவித்து வருகிறார். ஸ்ரீலீக்ஸ் என்ற பெயரில் அதனை இணையதளங்களில் பதிவேற்றி வருகிறார். இதனால் தெலுங்கு நடிகர் சங்கம் அவரை சங்கத்திலிருந்து நீக்கி படங்களில் நடிக்கவும் தடைவிதித்தது. இதனை எதிர்த்து ஸ்ரீரெட்டி தெலுங்கு பிலிம் சேம்பர் முன் அரை நிர்வாண போராட்டம் நடத்தினார். இதனால் போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இதற்கிடையில் ஸ்ரீரெட்டிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று பலரும் அவருக்கு ஆதராவக கிளம்பி உள்ளனர். ஸ்ரீரெட்டிக்கு மனித உரிமை மீறல் நடந்திருக்கிறது. அது குறித்து விளக்கம் அளியுங்கள் என்று தேசிய மனித உரிமை ஆணையம் தெலுங்கானா அரசுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இந்த நிலையில் ஸ்ரீரெட்டி பிரச்சினை குறித்து விவாதித்து முடிவெடுக்க தெலுங்கு பிலிம் சேம்பர் 20 பேர் கொண்ட விசாரணை குழுவை அமைத்துள்ளது. இதில் 10 பேர் திரைப்படத்துறையை சேர்ந்தவர்கள். 10 பேர் பொது அமைப்புகளை சேர்ந்தவர்களும் உள்ளனர். இந்த அமைப்பு தனது விசாரணையை துவங்கி உள்ளது. இந்த நிலையில் ஸ்ரீரெட்டிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தெலுங்கு நடிகர் சங்கம் நீக்கி உள்ளது. இதுகுறித்து சங்கத்தின் தலைவர் சிவாஜி ராஜா கூறும்போது "ஸ்ரீரெட்டியின் பாலியல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை குழு அமைக்கப்பட்டிருப்பதால் அவர் மீதான' தடை நீக்கப்படுகிறது. அவர் தொடர்ந்து படங்களில் நடிக்கலாம்" என்றார்.

## சல்மான் ஜெயில்- வெரி ஹப்பி!

அரிய இன மானை வேட்டையாடியதற்காக பாலிவுட் நடிகர் சல்மான்கானுக்கு 5 வருடம் ஜெயில் தண்டனை வழங்கி தீர்ப்பு கூறியது. இதையடுத்து அவர் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பலர் சல்மானுக்கு ஆதரவு குரல் கொடுத்தனர். நடிகை சோனம் கபூர் அவரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் எப்போதும் எனது ஆதரவு உங்களுக்கு உண்டு என்றார். இந்நிலையில் சல்மான் சிறைக்கு சென்றது மகிழ்ச்சி அளிப்பதாக ஒரு நடிகை தடாலடி பேட்டி அளித்திருக்கிறார். கவர்ச்சி நடிகை சோபியா ஹயாத் இந்தி படங்களில் கவர்ச்சி வேடங்களில் நடித்திருக்கிறார். அவர் கூறியதாவது: 'சல்மான்கான் சிறைக்கு அனுப்பப்பட்டதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். அவர் செய்த குற்றத்துக்கு தண்டனை கிடைத்திருக்கிறது. இந்த உலகில் மிருகங்கள் மிகவும் முக்கியமானது. சுயநலத்துக்காக அதை கொல்லக்கூடாது. பலர் சல்மானுக்கு தண்டனை கிடைத்ததுபற்றி பேச பயப்படுகிறார்கள். பாலிவுட் திரையுலகை தனது கன்ட்ரோலில் அவர் வைத்திருப்பதுதான் இதற்கு காரணம். இன்றைக்கு இந்தியா உறுதியாக நின்று நீதி வழங்கி உலக அளவில் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஏழைகளுக்கு சட்டப்படியான நியாயம் கிடைத்திருக்கிறது. இந்தியா வாழ்க என்று இப்போது என்னால் முழக்கமிட முடியும். இவ்வாறு சோபியா ஹயாத் கூறினார்.

# வண்ணத் திரை



## ரஜினி படத்தில் நவாஸுதீன் சித்திக்?

பிரபுதேவா நடிப்பில் மொர்க்குரி படத்தை இயக்கியுள்ள கார்த்திக் சுப்பாராஜ் இந்தப் படத்தைத் தொடர்ந்து ரஜினியை வைத்து ஒரு படத்தை இயக்குகிறார். அனிருத் இசையமைக்கிறார். ரஜினி நடிக்கும் படத்துக்கும் கார்த்திக் சுப்பாராஜ் இயக்கும் படத்துக்கும் முதன்முறையாக அனிருத் இசையமைக்கிறார். தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் அறிவித்திருக்கும் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்த பிறகு இப்படத்தை தொடங்க இருக்கின்றனர். இந்தப் படத்தில், வில்லனாக நடிக்க பல நடிகர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு கடைசியில் பிரபல பாலிவுட் நடிகர் நவாஸுதீன் சித்திக் இறுதி செய்யப்பட்டு உள்ளதாக தெரிகிறது. சில நாட்களுக்கு முன்பு மும்பை சென்று நவாஸுதீனிடம் கதை சொல்லிவிட்டு திரும்பியிருக்கிறார் கார்த்திக் சுப்பாராஜ். அதேசமயம் நவாசுதீன் சித்திக் தரப்பு, ரஜினி படத்தில் நடிப்பதை இன்னும் உறுதி செய்யவில்லை, அப்படி ஒரு நிகழ்வு நடந்தால் மகிழ்ச்சி என தெரிவித்திருக்கிறது.

## விஜய்யின் படத்தை இயக்குபவர் யார்?

துப்பாக்கி, கத்தி படங்களைத் தொடர்ந்து ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார் விஜய். இந்தபடத்திலும் ஒரு சமூக விஷயத்தை கையிலெடுத்திருக்கிறார் முருகதாஸ். இந்நிலையில், விஜய்யின் அடுத்த படத்தை இயக்குவது யார் என்பது குறித்த கேள்விகள் எழுந்துள்ளன. அதில் வெற்றிமாறன் இயக்கலாம் என தகவல் வெளியானது. ஆனால் தற்போது விஜய் தரப்பில் இருந்து இன்னொரு செய்தி கசிந்துள்ளது. ஏற்கனவே விஜய்யை வைத்து வேலாயுதம் படத்தை இயக்கிய மோகன்ராஜா விஜய்யின் 63வது படத்தை இயக்குவதாகவும், இது தனி ஒருவன் பாணியிலான அட்டகாசமான கதை என்றும் கூறப்படுகிறது.

## காஜலுக்கு காதல் வலை!


காஜல் அகர்வாலுக்கு முன்னதாக நடிக்க வந்த சில நடிகைகள் திருமணம் செய்துகொண்டு செட்டிலாகிவிட்டனர். ஆனாலும் காஜல் அகர்வால் இன்னமும் சினிமாவில் தனது இடத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கிறார். அதன் காரணமாக தனக்கு முன்பே தனது தங்கையின் திருமணத்தை நடத்தி வைத்தார். பட வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கும் நிலையில் சக முன்னணி நடிகைகளுக்கும் சரிபோட்டி தந்துகொண்டிருக்கிறார். ஏற்கனவே காஜல் அகர்வால் ரகசியமாக ஒருவரை காதலித்து வருவதாக கூறப்படுகிறது. ஜோடியாக நடிக்கும் ஒரு சில நட்சத்திரங்கள் நிஜ வாழ்விலும் காதல் ஜோடிகளாக மாறியிருக்கின்றனர். அதுபோல் உங்களுடன் நடித்த நடிகர்களில் யாராவது உங்களிடம் காதலை சொல்லயிருக்கிறார்களா என்றபோது 'என்னுடன் நடித்த ஹீரோக்கள் தங்களுக்கென்று ஒரு ஸ்டைல் வைத்திருப்பார்கள். மகேஷ்பாபு மிகவும் அமைதியானவர். அவர் ஜோக் அடித்தால் சிரித்து சிரித்து வயிறு புண்ணாகி விடும். அல்லு அர்ஜுன் ஸ்டைலான உடை அணிவதில் புதுமுறையை கடைபிடிப்பார். ஹீரோக்களில் சிரஞ்சீவி மிகவும் ரொமான்டிக் ஆனவர். பல்வேறு ஹீரோக்களுடன் நடித்திருக்கிறேன். நடிகர் நவ்தீப் மட்டும் இரண்டு முறை என்னிடம் காதலை சொல்ல முயற்சி செய்தார்' என்றார்.

## எதற்கும் தயார்!

கிராமத்து பெண்ணாக நடித்தால் மறுபடியும் அதேவேடம் வருவதும், கவர்ச்சியாக நடித்தால் மீண்டும் அதுபோன்ற வேடங்களே வருவதும் என பெரும்பாலான நடிகைகளுக்கு கதாபாத்திரங்கள் அமைவது வழக்கம். ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக 'புருஸ்லி' படத்தில் நடித்த கிரித்தி கர்பண்டாவுக்கு மாறி மாறி வேடங்கள் அமைவதால் எதற்கும் தயார் என கூறியிருக்கிறார். தமிழில் ஒரு படத்தோடு மூட்டைக்கட்டிக்கொண்டு சென்றவர் தற்போது தெலுங்கு, இந்தி படங்களில் நடித்து வருகிறார். பட வாய்ப்புகள் பற்றி கிரித்தி கூறும்போது, 'சில படங்களில் தாவணி அணிந்தும், வேறு சில படங்களில் சேலை அணிந்தும் நடுத்தர குடும்ப கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்ப என்னை தயார்படுத்திக் கொண்டு அந்த வேடங்களில் ஒன்றிவிடுகிறேன். அதேசமயம் மாடர்ன் உடையும் எனக்கு மிகப் பொருத்தமாக அமையும். அதுபோன்ற கதாபாத்திரங்களையும் நடிக்க மறுப்பதில்லை' என்றார். சில தினங்களுக்கு முன் கிரித்தி தனது புதியதோற்றம் கொண்ட புகைப்படத்தை வெளியிட்டார். இலைமறை காயாக மேல்கோட்டு அணிந்தும், பேகிஸ் பாணியில் கருப்பு பேண்ட் அணிந்தும் காட்சி தந்தவர், இதுஎப்படி இருக்கு என ரசிகர்களை கிக்கான கேள்வி கேட்டு கிறங்கடித்திருக்கிறார்.

## ஜெயலலிதாவாக காஜல்!

மறைந்த முன்னாள் ஆந்திர முதல்வர் என்டிஆரின் வாழ்க்கையை தழுவி என்டிஆர் படம் உருவாகி வருகிறது. இதில் என்டிஆராக அவரது மகன் பாலகிருஷ்ணா நடிக்கிறார். சமீபத்தில் இப்படத்தின் துவக்க விழா நடந்தது. அதில் துணை ஜனாதிபதி வெங்கய்ய நாயுடு கலந்துகொண்டார். படத்தில் நடிக்க காஜல் அகர்வால் ஒப்பந்தமாகியுள்ளார். இவர் ஜெயலலிதா வேடத்துக்காக படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். ஜெயலலிதா சினிமாவில் நடித்தபோது, தெலுங்கில் என்டிஆர் படங்களிலும் நடித்துள்ளார். இளமை கால ஜெயலலிதா வேடத்துக்காக காஜல் அகர்வால் ஒப்பந்தமாகியுள்ளதாகவும் பாலகிருஷ்ணாவுடன் ஷூட்டிங்கில் நடிப்பதுபோல் அவரது காட்சிகள் இடம்பெற உள்ளதாகவும் பட வட்டாரம் தெரிவித்துள்ளது. இந்த படத்தை தேஜா இயக்குகிறார். தனது இளமை காலத்தில் சென்னையில் அரசு வேலையில் என்டிஆர் சேர்ந்தார். ஒரு மாதமே பணியில் இருந்தார். சினிமாவில் நடிக்க வாய்ப்பு வந்ததும் வேலையை விட்டு விட்டார். இந்த காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டுள்ளது.



# தென்னைப் பயிர்ச்செய்கையில் மண்ணீர்ப்பாதுகாப்பு முறைகளும் அதன் முக்கியத்துவங்களும்;


ஈஸ்வரன் சற்குணன்
BSc (Agri)MSc(Aqua)
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
யாழ்ப்பாணம்

தென்னை பல்வேறுபட்ட தட்ப வெப்பநிலைகளிலும் நன்கு வளர்ந்து பலன் கொடுக்கக் கூடியது. சாதகமற்ற சூழ்நிலைகளில் வளர்ந்தாலும் கூட வெப்பமான வானிலை, அதிக அளவு மழை மற்றும் நல்ல வடிகால் வசதியுள்ள மண் ஆகியவை தென்னை வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவைகளாகும். வெப்பநிலை 270C இற்கு குறையாமலும் ஆண்டொன்றிற்கு 1000 mm - 2000 mm வரையான சராசரி மழைவீழ்ச்சியும் தென்னை வளர்ச்சிக்கு சிறப்பான சூழ்நிலைகளாகும்.

### தென்னையின் வேர்த்தொகுதி

தென்னையின் வேர்த்தொகுதியைப் பொறுத்தவரை நார்வேர்த் தொகுதி உடையது. இங்கு ஆணி வேர் காணப்படாது. இதன் வேரானது "போல்"(bole) போன்ற அமைப்பை உடையது. இதிலிருந்து நார் வேர்கள் உருவாகும். தென்னையின் மிகச்சிறப்பான வேர்களானது கிட்டத்தட்ட 2 m ஆரைப்பரப்பில் பரந்து காணப்படும். பொதுவாக கிறவல் தன்மையான மண்ணில் தென்னையின் வேரானது 100 cm ஆழத்தில் பரந்து காணப்படும். தென்னையானது சிக்கலான வேர் அமைப்பைக் கொண்டது.

தென்னையின் ஒவ்வொரு வேரும் அதன் நுனியில் வளரும் முனையைக் கொண்டிருக்கின்றன. இந்நுனியிலிருந்து சற்று மேலே அண்ணளவாக 2mm இலிருந்து 5mm நீளத்தில் நீரை உறிஞ்சும் வெள்ளை நிறப்பகுதி காணப்படும். வேரின் பழைய பகுதிகள் ஒரு தடிப்பான நீர் உட்புக முடியாத பாதுகாப்புப் படையினால் போர்க்கப்பட்டு இருக்கும். நீண்ட காலமாக மண் காய்ந்த நிலையில் இருந்தால் இந்த உறிஞ்சும் பகுதி நீரை உட்புகவிடாத தடித்த சுவரை உருவாக்கும். சாதகமாக காலநிலை காணப்படும் போது நடுத்தர வயதுடைய தென்னை ஒன்றில் 4000 - 7000 வேர்கள் காணப்படும். ஆனால் இவை 2m தூரத்திற்கு அப்பால் செல்வதில்லை. தென்னையின் தொழிற்பாட்டு வேர் வலயமானது பயன்படுபரப்பில் 25% இல் பரந்து காணப்படும். (உரு: 01)



உரு: 01 தென்னையின் தொழிற்பாட்டு வேர்த்தொகுதி

### தென்னையின் நீர்த்தேவை

30 - 40 தென்னை இலைகளை உடைய ஒரு வளர்ந்த தென்னை மரம் சராசரியாக நாளொன்றுக்கு ஏறக்குறைய 50 லீற்றர் நீரை (நாளொன்றுக்கு 20 - 160 லீற்றர்) உறிஞ்சிக் கொள்கின்றது எனவும், அதே வேளை 10 - 15 தென்னை இலைகளைக் கொண்ட ஒரு இளம் தென்னை ஏறக்குறைய 10 லீற்றர் நீரை (5 - 15 லீற்றர்) நீராவி நிலையில் வெளிவிடுகின்றது எனவும் இலங்கைத் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. உறிஞ்சப்படும் நீரின் அளவானது மண்ணின் அமைப்பு, காற்று,கதிர்ப்பு முதலியவற்றில் தங்கியுள்ளது. ஆகையால் மணல் தன்மை வாய்ந்த மண்ணில் வளர்ந்த ஒரு தென்னங் கன்றின் கிடைத்தகு மண்ணீர் ஏறக்குறைய 1000 - 4000 லீற்றர்கள் என்ற அளவிலிருக்கலாம். இந்த அளவான நீர் ஏறக்குறைய 20 - 80 வரையான நாட்களுக்குப் போதுமானதாகும். சதுப்பு நில மண்ணிலுள்ள தென்னை வேர்த் தொகுதியில் ஏறக்குறைய 2000 - 4000 லீற்றர் வரையான மண்ணீர தேங்கி நிற்கும். இந்த தேங்கி நிற்கும் நீரானது 40-160 வரையான நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும். எனவே ஒரு தென்னங் கன்று 20 - 160 நாட்களின் பின்னர் நீர்ப் பற்றாக்குறையால் வாடலாம்.

### தென்னை செய்கையில் வறட்சியின் தாக்கம்

தென்னையின் வளர்ச்சியிலும், உற்பத்தியிலும் நீர் முக்கிய பங்கு வகிக்கிறது. மண்ணில் நீர் பற்றாக்குறை ஏற்படும் போது கன்றுகளின் வளர்ச்சி குன்றுதல், பூந்துணர்கள் உருவாகும் வீதம் குறைவடைதல், பெண்பூக்களின் உற்பத்தி குறைவடைதல், வளர்ச்சியடையாத காய்கள் விழுதல், அத்தோடு மட்டைகள் பசுமை நிறம் மாறி மஞ்சள் நிறமடைதல், மட்டைகள் வளைந்து தொங்குதல், அடிமட்டைகள் ஒடிந்து விழுதல் என்பன காணப்படுகின்றன.

வறட்சி அறிகுறிகள் முதலில் கன்றுகளிலும், பின்னர் இளம் தென்னைகளிலும் பின் படிப்படியாக வளர்ந்த தென்னைகளிலும் தோன்றுகின்றன. வறட்சியானது தண்டின் வளரும் முனையின் வளர்ச்சியைத் தாமதப்படுத்தும் அல்லது அதன் செயற்பாட்டை முழுமையாக நிறுத்தும் இயல்புடையது. நீண்ட கால வறட்சியினால் தேங்காய்களின் எண்ணிக்கையில் மட்டுமல்லாது தேங்காயின் பருமனிலும் குறைவை ஏற்படுத்தும். தொடர்ந்து 13 மாதங்களுக்கு வறட்சி காலம் நிலவுமாயின் தென்னைப் பயிர்ச் செய்கையானது பாரிய பாதிப்பிற்கு உட்படும். அவ்வறட்சிப் பாதிப்பிலிருந்து விடுபட குறைந்தது அடுத்து இரண்டு ஆண்டுகளாகும்.

கடுமையான வறட்சிக்குப் பின்னரான குணப்படுத்தும் செயற்பாடு என்பது ஓர் மந்தமான செயற்பாடாகும். முதலாவதாக கிடைக்கும் மழையுடன் சாதாரண வேர்கள் நீரை உறிஞ்சத் தொடங்குவதில்லை. மாறாக முதலில் வளரும் முனைகள் அவற்றின் வலுக்கட்டாயமான ஓய்விலிருந்து மீண்டும் தொழிற்பாட்டைப் பெற வேண்டும். வேரின் நீட்சி மற்றும் வேர்களின் புதிய உறுஞ்சும் பகுதிகளின் உருவாக்கம் என்பன இதனையே பின்பற்றுகின்றது.

நீண்ட காலமாக மண் காய்ந்த நிலையில் இந்த உறுஞ்சும் பகுதி நீரை உட்புக விடாத தடித்த சுவரை உருவாக்கும் ஓய்வு நிலையில் அதிகளவிலோ அல்லது குறைந்தளவிலோ பாதிக்கப்படும் வேர்கள் நீரை உறுஞ்சுவதை நிறுத்துகின்றன.

கடந்த தசாப்த காலத்தின் போது தேசிய தெங்குற்பத்தி முக்கியமாக மிக மோசமான காலனிலையின் விளைவாக பெருமளவு ஏற்ற இறக்கத்திற்குள்ளாகியுள்ளது. சில வருடங்களில் இழப்பு வீதம் 30% ஆக இருந்தது.மழையில்லாத காலங்களின் போது தென்னை நிலங்களில் மண்ணீர் காப்புக்கு பெருமளவில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

தென்னை மரங்களுக்கு மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் நீர்ப்பற்றாக்குறையினால் ஏற்படும் பாதிப்பினை தவிர்த்துக் கொள்ளலாம். தென்னை மரமொன்று நாளொன்றிற்கு 24 லீற்றர் நீரை உறிஞ்சுகின்றது. எனவே இந்தளவு நீரை எல்லா பிரதேசங்களுக்கும் வழங்குவது கடினமாகும். நீர்ப்பாசனத்திற்காக பொருளாதார ரீதியில் பெருந்தொகைப்பணத்தை செலவிடுவது சுலபமான காரியமல்ல. இதற்கு சிறந்த தீர்வாக அமைவது மழையால் மண்ணுக்கு கிடைக்கும் நீர் இயன்றளவு ஆழமாக மண்ணிற்குள் தக்க வைத்தலாகும். இதற்காக தென்னைப்பயிர்செய்கையில் மூடுபயிர்களை வளர்த்தல், சேதனப்பசளை இடுதல், தென்னைமரத்தைச்சுற்றி பசளைவட்டத்தை பாத்தி வடிவில் அமைத்து பத்திரக்கலவையிடல், ஓடிச்செல்லும் நீரினைத் தடுத்து நீர்த்தடாகங்கள் அமைத்து தடுத்து வைத்தல், தென்னை மரங்களுக்கிடையே வெவ்வேறு முறைகளில் குழிகளை அமைத்து உரிமட்டை புதைத்தல் என்பன மேற்கொள்ளலாம்.

### தென்னையின் மண்ணீர்க் காப்பின் முக்கியத்துவம்

தென்னைப்பயிர்ச்செய்கையில் உச்ச பயனைப் பெற தொடர்ச்சியான நீர் வழங்கல் அவசியமாகும். தோட்டத்தின் மண்ணிலுள்ள ஈரலிப்பின் சதவீதம் ஆனது தெங்கு விளைச்சலில் செல்வாக்கு செலுத்துகின்றது.

மண்ணில் நீர்ப் பற்றாக்குறை காணப்படும் போது வேர் மூலம் மண்ணிலுள்ள போசணையை உறுஞ்ச முடியாத நிலை ஏற்படும் இதனால் மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத போது பசளை இட்டாலும் அது பயன்பாடு அற்று வீணாகிப் போகும் நிலை ஏற்படும் எனவே நீர் கிடைக்கும் காலங்களில் அந் நீரை வீண் விரயம் செய்யாமல் இயன்ற அளவு மண்ணில் ஆழமான பிரதேசத்தில் தக்கவைத்தல் சிறந்த நடைமுறையாகும். இதற்காக பல்வேறு மண்ணீர்க் கர்ப்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. எனவே தென்னந் தோட்டங்களில் மண்ணீர்க்காப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் மண் ஈரலிப்பைப் பேணி தென்னையிலிருந்து உச்ச விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### தென்னை தோட்டங்களில் மண்ணீர் காப்பு செய்தல்

தென்னை மரங்களிலிருந்து வருடம் பூராகவும் ஒரே சீரான தெங்குற்பத்தியைப் பெறுவதற்கு முறையான நீர் விநியோகம் அவசியமாகும். இம் மரங்கள் ஆணி வேர் அற்ற பரந்த வேர்த் தொகுதியைக்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கொண்டிருக்கின்றன. மேலும் பெருமளவு எண்ணிக்கையில் இவ் வேர்த்தொகுதிகள் காணப்படுகின்றன. இவற்றினுள் பெரும்பாலானவை மரத்தின் அடியிலிருந்து அண்ணளவாக 2m ஆரையுடைய பரப்பினுள்ளும் மண் மேற்பரப்பிலிருந்து 1m ஆழத்தினுள்ளும் பரம்பிக் காணப்படுகின்றன.

**மண்ணீர்க் காப்பின் முக்கிய நோக்கங்களாவன**

- இயலுமான வரை நிலத்திற்;குள் மழை நீரை சேமித்தல்
- ஆவியாதலைக் குறைப்பதன் மூலம் மண்ணீரைக் காத்தல்

**மண்ணீர்க் காப்பு முறைகள்**

- பசளை வட்டத்தை பத்திரக் கலவையால் மூடுதல்
- குழிகளில் உரிமட்டைகளைப் புதைத்தல்
- மூடு பயிர்களை வளர்த்தல்
- மண்ணீரை பற்றிப் பிடிக்கும் இயல்பை விருத்தி செய்ய சேதனப் பசளையை பிரயோகித்தல்
- சிறந்த களை முகாமைத்துவத்தை பேணல்

**மண்ணீர்க் காப்பு முறைகள்**

**பசளை வட்டத்தைப் பத்திரக் கலவையிடல்**

தென்னைப் பயிர்ச் செய்கையில் மண்ணீர்க் காப்பு செய்வதில் மிக எளிய, மிக இலகுவான முறை இதுவாகும். தென்னையிலிருந்து கிடைக்கும் பொருட்கள் மூலமாக இதனை மேற்கொள்ள முடியும். தென்னையின் வேர்த் தொகுதி பரந்துள்ள பிரதேசத்தில் உள்ள ஈரலிப்பை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

**தென்னோலைகளால் பத்திரக் கலவையிடல்.**

மரத்திலிருந்து காய்ந்து விழுந்த ஓலைகளை துண்டுகளாக வெட்டி பசளை வட்டத்தை மூடுதல். (உரு:2) இரண்டு அல்லது மூன்று படைகளில் ஓலைகளை இடுதல் போதுமானது. தென்னோலையானது தோட்டத்திலேயே கிடைப்பதால் இது செலவற்ற இலகுவான மண்ணீர்க் காப்பு முறையாகும்.




உரு:2 தென்னோலைகளால் பத்திரக் கலவையிடல்

**உரிமட்டைகளை கொண்டு பத்திரக் கலவையிடல்**

தென்னையின் அடியில் மண்ணீரைப் பாதுகாக்க இன்னொரு சிறந்த முறை உரிமட்டைகள் ஆகும். உரிமட்டையானது அதன் நிறையின் ஆறு மடங்கான அளவு நீரை உறுஞ்சும் தன்மையுடையது. எனவே உரிமட்டைகளை மரத்தைச் சுற்றி அடுக்கிவிடுவதால் மழைகாலத்தின் போதும், நீர்ப்பாசனத்தின் போதும் கிடைக்கும் நீர் ஆவியாகாது தென்னைக்கு முழுமையாகப் பயன்படும் (உரு:3) புதிய உரிமட்டைகள் ஆனது அதிகளவு பொட்டாசியத்தை ("K") ஐக் கொண்டது. 100,000 உரிமட்டைகளில் உள்ள "K" ஆனது 1000 Kg "MOP" இல் உள்ள பொட்டாசியத்துக்கு சமனாக இருக்கும். தென்னை ஓலையைப் போலவே உரிமட்டைகளும் தென்னந் தோட்டத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகையால் இதுவும் ஓர் எளிய இலகுவான மண்ணீரக் காப்பு முறையாகும்.






உரு:3 உரிமட்டைகளை கொண்டு பத்திரக் கலவையிடல்

உரிமட்டைகளை பத்திரக் கலவையாக பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- புதிய உரிமட்டைகளை பயன்படுத்த வேண்டும்.
- ஆரம்பத்தில் மரத்தைச் சுற்றி 2m ஆரைப்பரப்பில் 200-250மட்டைகளை அடுக்க வேண்டும். (உரு:4) தண்டிலிருந்து 15cm ஆரைப்பரப்பில் அடுக்காது விட வேண்டும். (ஓலைகளை/ஏனைய பதார்த்தங்களை பத்திர கலவையிடப் பயன்படுத்தும்போது இதனைக் கவனிக்குக)
- வருடம் தோறும் 125 புதிய மட்டைகளைச் சேர்த்து அடுக்குதல்
- 2 அல்லது 3 படைகளில் அடுக்குதல் வேண்டும்
- நீர் தடைப்படும் இடங்களுக்கு தென்னை மட்டைகளை பத்திரக் கலவையாக இடக்கூடாது.இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு பத்திரக்கலவையிடல் அவசியமாகும். எளிதாகவும், இலகுவாகவும் செலவில்லாமலும் செய்யக்கூடிய இம்முறையில் மண்ணீரைச் சிறப்பாக பாதுகாக்க முடியும்



உரு: 4 2 m ஆரைப்பரப்பில் பத்திரக்கலவையிடல்


**தேங்காய் உரிமட்டைகளைக் குழிகளில் புதைத்தல்.**

தென்னந் தோட்டங்களில் அதிகமாகக் கிடைக்கும் பொருள் தேங்காய் உரிமட்டைகளாகும். இவற்றினை அகற்றுதலும் பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே இவற்றை தென்னைக்கு அருகே குழிகளில் புதைத்தல் மூலம் மண்ணீரைப் பாதுகாக்கலாம். இவ்வாறு குழிகளில் மட்டைகளை புதைக்கும் முறைகள் பல்வேறு காணப்படுகின்றன.

**இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழிகள் அமைத்தல்**

இரண்டு தென்னைகளுக்கு இடையே குழிகள் அமைத்து அதில் உரிமட்டைகள் இடப்படுகிறது. இக்குழிகள் 8அடி நீளமாகவும், 4 அடி அகலமாகவும், 3 அடி ஆழமாகவும் காணப்படும். (உரு: 5)





உரு: 5 இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழிகள் அமைத்தல்



உரு: 6 குழிகளில் உரிமட்டைகள் இடும் விதம்

உரி மட்டைகளும் மண் படையும் மாறி மாறி அடுக்கப்படுகின்றது. (உரு: 6) இவ்வாறு அடுக்கப்படும் போது மழை நீர் கிடைக்கும் காலங்களில் சிறப்பான முறையில் நீரானது பிடித்து வைக்கப்படுகின்றது.

**மூடு பயிர் வளர்த்தல்**

மண்ணீரைப் பாதுகாக்க இன்னுமொரு பலன் தரக்கூடிய முறை இதுவாகும். இவ்வாறு வளர்க்கப்படும் பயிர்கள் விரைவாக மண்ணை மூடி வளரக்கூடியதாக இருக்க வேண்டும். லெகுமினேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஏறிகள் மரங்கள் போன்றன மூடு பயிராக வளர்ப்பதன் மூலம் மண்ணை பேணுவதுடன் மண்ணரிப்பையும் தடுக்கலாம். (உரு: 7) இதன் மூலம் மேல் மண் பாதுகாக்கப்படுகிறது.




உரு: 7 மூடு பயிர் வளர்த்தல்

இவை மண்ணை மூடி வளர்வதால் மண் சூரிய ஒளியின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கப்படும். இதனால் நீரானது நிலத்திலிருந்து ஆவியாதல் தடுக்கப்படும். மூடு பயிர்களானது ஓர் விசேட இயல்பைக் கொண்டுள்ளன. அதாவது உடனடியாக வரட்சிக் காலத்தில் இம்மூடு பயிர்களும் இறந்து விடுகின்றன. இதனால் மூடு பயிரின் இலையில் ஏற்படும் உந்து சக்தி மூலம் நீர் ஆவியாகி நீர் பற்றாக்குறை தடுக்கப்படுகிறது. இதனால் மண் நீர் பாதுகாக்கப்படுகிறது.

**சேதனப் பசளை இடல்**

இரசாயனப் பசளை பாவனையினால் மண்ணின் பௌதிக இயல்புகள் மாற்றமடைகின்றது. எனவே மண்ணிற்கு சேதனப் பசளை இடும் போது மண்ணின் கட்டமைப்பு இழையமைப்பு என்பன விருத்தியாகின்றன. இதனால் மண்ணில் நீர் பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகரிக்கின்றது. அத்துடன் மண்ணிலிருந்து நீர் ஆவியாதல் குறைக்கப்பட்டு ஈரபதம் பேணப்படுகின்றது.

**பாத்தியை பாத்திர வடிவில் அமைத்தல்**

சாதாரணமாக மழை நீரானது தென்னங்குற்றி வழியே வழிந்தோடி வீணாகிப் போகின்றது. எனவே பசளை வட்டத்தைச் சூழ மண் அணை போட்டு நீரை தேக்கி வைத்து கொள்வதற்கு பாத்தியை பேசின் வடிவில் அமைப்பது சிறந்ததாகும். இதனால் நீர்ப்பாசனம் செய்யப்படும் நீர் அல்லது மழை நீர் வீணாகாது மரத்தின் அடியை வந்தடையும்.

**நீர்த்தடாகம் அமைத்து நீரை தடுத்து வைத்தல்**

அதிகமாக மழை கிடைக்கும் காலங்களில் ஓடும் நீரை சிறு குளம் அல்லது தடாகம் அமைத்து சேமித்தல் மூலம் வறட்சியான காலத்தில் பயன்படுத்தக் கூடியதாகவும் நிலத்தின் ஈரலிப்பை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

இச்செயற்பாடுகள் அனைத்தும் பயன்தரு தென்னை மரங்களின் மண்ணீர் பாதுகாப்பு நடவடிக்கைகளாகும்.எந்தஒருபயிரின்சிறப்பான வளர்ச்சிக்கும் விருத்திக்கும் முறையான நீர்ப்பாசனமும் மண்ணீர்க்காப்பும் அவசியமாகும். இந்த வகையில் தென்னைச் செய்கைக்கும் அதிலிருந்து சிறப்பான உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியான நீர் வழங்கலும் வறட்சியான காலத்தில் மண்ணீர் பாதுகாப்பும் அவசியமாகும்.

அனேகமான தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் இத்தகைய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறைவாகும். எனவே நீர்பாசனத்தின் முக்கியத்துவத்தையும் மண்ணீர்க்காப்பின் முக்கியத்துவத்தினையும் பயிர்ச்செய்கையாளர்களுக்குபுரியவைக்கவேண்டியது அவசியமாகும். மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றிய பயிற்சிகள் செய்து காட்டல்களை செய்யலாம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நீர்ப்பாசனம் மண்ணீர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணரச் செய்து ஊக்குவிக்கலாம்.

தென்னையிலிருந்து சிறந்த உற்பத்தியைப் பெற்று அதன் மூலம் சிறந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தென்னைக்கு முறையான பராமரிப்பு அவசியமாகும்.எனவே உரிய காலத்தில் நீர்வழங்கி மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகளை செய்து தென்னையிலிருந்து உச்ச உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும்.



# மருந்துகள் அறியாதவை ஆயிரம்

'**கா**ய்ச்சலோ, தலைவலியோ, வைத்தியசாலைக்குப் போனால் நீண்ட வரிசை நிற்கும். தனியார் மருத்துவமனையில், 'அந்த டெஸ்ட் எடு', 'இந்த டெஸ்ட் எடு' என்று பெரிதாக இழுத்து விடுவார்கள்... இருக்கவே இருக்கிறது மருந்துக்கடைகள்... இரண்டு குளிசையை வாங்கிப் போட்டால் முடிந்தது...' இப்படித் தான் இருக்கிறது, நம்மில் பெரும் பாலானோரின் எண்ணம்.

சிலர் பல வருடங்களுக்கு முன்னால் காய்ச்சல் என்று மருத்துவரிடம் சென்றிருப்பார்கள். அப்போது அவர் எழுதித்தந்த மருந்துச் சீட்டைப் பத்திரமாக வைத்துக்கொண்டு, எப்போது காய்ச்சல் வந்தாலும் அதையே கொண்டுபோய் நீட்டி குளிசை வாங்குவார்கள். பிறருக்குக் காய்ச்சல் வந்தால்கூட அந்த மருந்தைச் சீட்டைக் கொடுத்துக் கருணை காட்டுவார்கள்.

- இப்படி, மருத்துவரின் குறிப்பில்லாமல், ஆலோசனை இல்லாமல் நேரடியாக மருந்துக் கடைகளில் குளிசைகள் வாங்கிச் சாப்பிடலாமா?
- பழைய மருந்துச் சீட்டைப் பயன்படுத்தி குளிசைகளை வாங்கிச் சாப்பிடலாமா?
- சாப்பாட்டுக்கு முன், சாப்பாட்டுக்குப் பின் என்று மருத்துவர்கள் தெளிவாக எழுதிக் கொடுத்தாலும்கூட, 'அதெல்லாம் ஒன்றும் பிரச்சனையில்லை', 'மறந்துட்டேன் தப்பில்லை' என்று குளிசைகளை மாற்றி மாற்றிச் சாப்பிடலாமா?
- 'எனக்கு டீயோடு மாத்திரை போட்டாதான் உடனே கேக்கும்', 'என் மகனெல்லாம் வெறும் வாயிலயே குளிசையை கடிச்சுத் தின்பான்...' இது போன்று நம் இஷ்டத்துக்குக் குளிர்ந்த நீர், டீ, கோப்பி போன்றவற்றுடன் குளிசைகளைச் சாப்பிடலாமா?
- குளிசைகளைப் போட்டுக்கொண்டால் போதும், வழிமுறைகள் எல்லாம் அவசியம் இல்லையென்று அலட்சியமாக இருக்கலாமா?

இப்படி குளிசைகள் எடுத்துக் கொள்வதில் நமக்குள்ள அத்தனை சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் தருகிறார் பொது மருத்துவர் தேவராஜன்.

மருத்துவரின் பரிந்துரையில்லாமல் நேரடியாக மருந்துக்கடைகளில் குளிசைகள் வாங்கிச் சாப்பிடுவது மிகவும் ஆபத்து. சாதாரணப் பிரச்னைதானே என்று நினைத்துத் தம் விருப்பத்துக்கு குளிசைகள் வாங்கிச் சாப்பிடுவதால் தேவையில்லாத பல பக்கவிளைவுகள் உண்டாகும்.

### சாப்பாட்டுக்கு முன்... சாப்பாட்டுக்குப் பின்...?

குறிப்பட்ட ஒரு குளிசையை எந்த வேளை, எந்த அளவு சாப்பிட வேண்டும் என்பது முக்கியம். இதை நோயின் தன்மை கருதி மருத்துவர் தீர்மானிப்பார். சாப்பாட்டுக்கு முன்னதாகச் சாப்பிடவேண்டிய குளிசைகள், சாப்பாட்டுக்குப் பின்னர் சாப்பிட வேண்டிய குளிசைகள் இருக்கின்றன. உடலியல் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு எந்த வேளையில் சாப்பிட வேண்டும் என்று தீர்மானிக்கப்படும்.

உதாரணமாக, ஸ்டீரோய்ட் குளிசைகள், வலி நிவாரணி குளிசைகள் எல்லாம் மிகவும் வீரியம் மிக்கவை. இவற்றை ஏதேனும் உணவு சாப்பிட்ட பின்னர்தான் விழுங்கவேண்டும். வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. அதுபோல, வாந்தி, வயிற்றெரிச்சல் போன்ற பிரச்னைகளுக்காகக் கொடுக்கப்படும் மாத்திரை, மருந்துகளை வெறும் வயிற்றில்தான் சாப்பிட வேண்டும். வீக்கங்களைக் குறைப்பதற்கான மாத்திரைகளைச் சாப்பாட்டுக்கு முன்பாக எடுத்துக் கொண்டால்தான் வேலை செய்யும்.

சாப்பாட்டுக்குப் பின்னர் எடுத்துக் கொண்டால் அவை என்சைமாக மாறிவிடும். சில நேரங்களில் மாத்திரைகளைச் சாப்பிட்ட பின் நெஞ்செரிச்சல், வயிற்றெரிச்சல் போன்ற பிரச்னைகள் ஏற்படும். அதைத் தடுப்பதற்காக மருத்துவர்களே சில துணை குளிசைகளை வழங்குவார்கள். உதாரணமாக, அன்டிபயோக்டிக் மருந்துகளைப் பரிந்துரைக்கும்போது 'அன்டாசிட்' (Antacid) போன்ற குளிசைகளைச் சேர்த்து வழங்குவார்கள். மருத்துவர் வழங்காத பட்சத்தில் நாமே மருத்துவரிடம் பிரச்னையைச் சொல்லிப் பரிந்துரைக்கச் சொல்லலாம். மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் இதுபோன்ற குளிசைகள்ள வாங்கிச் சாப்பிடுவது, பிரச்னைக்காக எடுத்துக் கொள்ளும் குளிசைகளின் வீரியத்தைக் கெடுத்துவிடும்.

பல உடல்நலக் கோளாறுகள் இருக்கும்பட்சத்தில் குளிசைகளை மொத்தமாக எடுத்துக்கொள்ளும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இதை 'பொலிபார்மசி' (Polypharmacy) என்பார்கள். இப்படிப் பல நோய்களுக்கான குளிசைகளை ஒரே நேரத்தில் சேர்த்துச் சாப்பிடுவது சில சமயம் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

### காலாவதியில் கவனம்!

குளிசைகளைச் சாப்பிடுவதற்கு முன், அதன் எக்ஸ்பைரி திகதியைக் கவனிக்க வேண்டும். எப்போதோ வாங்கிய குளிசைகளையெல்லாம் வீணாகிவிடுமே என்று சிலர் பயன்படுத்துவார்கள். இது மிகப்பெரும் விபரீதம். சில நேரங்களில் குளிசைகள் அட்டையில் திகதி தெரியாது. அப்படி, தயாரித்த திகதி தெரியாத குளிசைகளைக் கண்டிப்பாகச் சாப்பிடக்கூடாது. காலாவதி ஆன குளிசைகளைச் சாப்பிட்டால் சிறுநீரகம் பாதிப்படையும். குளிசைகள் அட்டைகளைப் பிரிக்கும்போதே திகதி அச்சிடப்பட்டுள்ள பாகத்தை விட்டு மற்ற பகுதிகளை முதலில் பயன்படுத்த வேண்டும். அல்லது காலாவதித் திகதியை டயரிகளில் குறித்து வைத்துக்கொள்ளலாம்.

### அன்டிபயோடிக் அலர்ட்!

அன்டிபயோக்டிக் குளிசைகள் மூன்று நாள்களுக்குக் கொடுக்கப்பட்டால் மூன்று நாள்களுக்கான குளிசைகளையும் சாப்பிடவேண்டும். உடல்நிலை சரியாகிவிட்டது என்று குளிசைகள் சாப்பிடுவதை நிறுத்திவிடக்கூடாது. அப்படிப் பாதியிலேயே நிறுத்தினால், அடுத்தமுறை அதே அன்டிபயோக்டிக் குளிசைகள் பயன்தராது. வீரியமுள்ள வேறு அன்டிபயோடிக் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இப்படி அடிக்கடி




தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சமூக வலைத்தளங்களில் You Tube /deepamlive


அன்டிபயோக்டிக் மருந்துகளை மாற்றி எடுத்துக்கொள்வது நல்லதல்ல. அப்படி மாற்றினால், இரண்டு, மூன்று அன்டிபயோக்டிக் சேர்த்து எடுத்துக் கொள்ளவேண்டிய சூழல் வரும். உதாரணத்துக்கு, காசநோய் பாதிப்புள்ளவர் ஒன்பது மாதங்களுக்கு மூன்று குளிசைகளைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். பாதியில் நிறுத்தினால் பாதிப்பு அதிகமாகி விடும்.

**நினைவில் கொள்ள வேண்டியவை**

ஒரு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துவிட்டு, வேறொரு மருத்து வரிடம் சிகிச்சைக்குச் செல்வதாக இருந்தால், பழைய ரிப்போர்ட்டுகள், குளிசைச் சீட்டுக்களை அவசியம் எடுத்துச் செல்லவேண்டும். ஒருவருக்குப் பரிந்துரைக்கப்பட்ட குளிசை களை மற்றவர்கள் கண்டிப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதுமட்டு மல்ல, எப்போதோ மருத்துவரிடம் பெறப்பட்ட குறிப்புகளை வைத்தும் குளிசைகள் வாங்கிச் சாப்பிடக் கூடாது. குழந்தைகள் விளையாடும் இடங்களில் மருந்து குளிசைகளை வைக்கக்கூடாது. பாதுகாப்பான இடங்களில் பூட்டி வைக்கவேண்டும்.

**குளிசைகள் வாங்கும்போது என்னென்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டும்?**

மருந்துகளைப் பொறுத்தவரை, 'பாதுகாப்பானது' என்று எதுவும் கிடையாது. ஒவ்வொரு மருந்துக்குமே ரிஸ்க், பெனிஃபிட் என்ற இரண்டு நிலைகள் உள்ளன. பயன்படுத்தும் விதத்தையும், அளவையும் பொறுத்து தான் ரிஸ்க்கா, பெனிஃபிட்டா என்பது தெரியும். குளிசைகள், மருந்துகளில் 'பிரிஸ்கிரிப்ஷன் டிரக்ஸ்' (Prescription drugs) 'நொன் பிரிஸ்கிரிப்ஷன் டிரக்ஸ்' (Non Prescription drugs) என்று இருவகைகள் உள்ளன. 'நொன் பிரிஸ்கிரிப்ஷன் டிரக்ஸ்' மருந்துகளை மருத்துவர் பரிந்துரை இல்லாமலே மருந்துக்கடைகளில் பெறமுடியும். ஆனால், அவற்றையும்கூட மருத்து வரின் பரிந்துரை இல்லாமல் வழங்ககூடாது.

மக்கள், குளிசைகள், மருந்துகள் வாங்கும்போது கண்டிப்பாக அதற்கான சிட்டை பெறவேண்டும். தவறான ஒரு குளிசை விற்கப்பட்டால் சிட்டை இருந்தால்தான் அதை ஆதாரப்பூர்வமாகக் கண்டறிய முடியும். எக்ஸ்பைரி டேட்டை பார்த்துதான் குளிசைகள் வாங்கவேண்டும். அது போல மருந்துக்கடைகளில் சில குளிசைகளை ஒட்டுமொத்த ஸ்டிரிப் பாகத்தான் வழங்குவார்கள். அது முழுக்க மக்களின் மீதுள்ள அக்கறையினால் மட்டுமே.

**குழந்தைகளுக்கு குளிசைகள் கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை**

குழந்தைகளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டால் பெற்றோர் பதறிப் போவார்கள். காய்ச்சல் உடனே சரியாக வேண்டும் என்பதற்காக குளிசைகள், மருந்துகளைக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். அது தவறு. நான்கு மணி நேரத்துக்கு ஒருமுறைதான் மருந்துகளைக் கொடுக்க வேண்டும். அதிகபட்சம் ஒரு நாளைக்கு ஐந்துமுறை கொடுக்கலாம். அடிக்கடி மருந்துகள் கொடுத்தால் குழந்தையின் சிறுநீரகம் பாதிப்படைய வாய்ப்புள்ளது. பெரியவர்களுக்காக வாங்கிய குளிசைகளைக் குழந்தைகளுக்கு, பாதியாக்கிச் சிலர் கொடுப்பார்கள். அதுவும் ஆபத்து. மருத்துவர் பரிந்துரைத்த வீரிய அளவில் குளிசை இருக்கிறதா என்பதைக் கவனித்துக் கொடுக்கவேண்டும்.

**குளிசைகள் சாப்பிடும்போது பெண்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்**

மருந்துக் கடைகளையே மருத்துவ மனையாகப பயன்படுத்தும் வழக்கம் அதிகளவில் இருக்கிறது. உதாரண மாக, நெஞ்செரிச்சல் ஏற்பட்டால் வாயுக்கோளாறு என்று மருந்துக் கடையில் குளிசைகள் வாங்கிச் சாப்பிடுவார்கள். சிலர் குளிர்பானங்கள் வாங்கிக் குடிப்பார்கள். அது வேறு பிரச்னைகளுக்கான அறிகுறியாகக் கூட இருக்கலாம். வலி வித்தியாசமாக இருந்தால், காலம் தாழ்த்தாமல் மருத்துவரை அணுக வேண்டும். விருப்பத்துக்கு குளிசைகள் வாங்கிச் சாப்பிடக்கூடாது.

தலைவலியோ, வயிற்றுவலியோ... எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அடிக்கடி தலைவலி வந்தால் மருத்துவரிடம் செல்ல வேண்டும். அதேபோல வயிற்று வலி தொடர்ந்தால் அது குடல்வால் பிரச்னையாக இருக்கலாம். காய்ச்சல் என்பது கூட ஏதோ ஒரு பிரச்னைக்கான அறிகுறிதான். எனவே அதற்கு மருந்தகத்தில் குளிசைகள் எடுத்துக்கொண்டு சாதாரணமாகக் கடந்துவிடக்கூடாது.

பெண்களைப் பொறுத்தவரைக் காய்ச்சல், தலைவலி, முதுகுவலி, உடல்வலி ஆகிய பிரச்னைகளுக்கு நேரடியாக மருந்துக் கடைகளில் குளிசைகள் வாங்கிச் சாப்பிடும் பழக்கம் இருக்கிறது. சிலர் அதைச் தினசரி வாடிக்கையாகவே வைத்திருக் கிறார்கள். அடிக்கடி குளிசைகள் சாப்பிடுவதால் சிறுநீரகம் பாதிக்கப் படலாம். பெண்கள் மாதவிடாய்க் காலங்களில் வலியைக் கட்டுப்படுத்த குளிசைகள் சாப்பிடுவார்கள். அதையும் மருத்துவரின் பரிந்துரை யின்றி அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. குழந்தை பெற்ற தாய்மார்கள் இந்த விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும். மாத விடாய் தள்ளிப்போனால் குளிசைகள் எடுத்துக் கொள்வது ஆபத்து என்பதை உணர வேண்டும். ●



# ஜென்ஸி நடந்தது என்ன?

**ஷிஜோ மானுவல்**
**தமிழில்: ஷாஜி சென்**

யாரோ ஒருவரின் கற்பனையில் பிறந்த கட்டுக் கதை ஒன்றினால் விறுவிறுப்பாகச் சென்றுகொண்டிருந்த ஒரு இசைப்பயணம் முற்றிலுமாக வழிமுடக்கப்பட்டது. ஒரு திரைப் பாடகியாக மலையாளத்திலிருந்து தமிழுக்கு வந்து மிகக் குறைந்த காலத்தில் மின்னும் தாரகையாக பிரகாசித்த ஜென்ஸியின் கதை அது.

கொச்சி நகரத்திலுள்ள புகழ்பெற்ற இசைக்குழு கலாபவன். அதன் குழைந்தகள் பிரிவில் நேயர்களை வியக்கவைக்குமளவில் பாடிக்கொண்டிருந்த 'பேபி ஜென்ஸி'யை 1977ல் வேழாம்பல் எனும் மலையாளப் படம் வழியாக அறிமுகம் செய்தவர் ஏ ஆர் ரஹ்மானுக்கு ஓர் இசைக் கலைஞனாக திரைத்துறையில் முதல் வாய்ப்பை அளித்த இசையமைப்பாளர் எம் கே அர்ஜுனன். ஜென்ஸியை தமிழுக்கு அறிமுகப்படுத்தி அவரை இங்கு மிகுந்த பிரபலமடையச் செய்தவர் இளையராஜா. இளையராஜாவுக்கு ஜென்ஸியின் குரல்மேலும் பாடும்முறைமேலும் இருந்த காதலுக்கு சாட்சியங்கள் அவர்கள் இருவரும் இணைந்த பலப்பல பாடல்கள்.



1978ல் வெளியான திரிபுரசுந்தரி எனும் படத்தில் எஸ் ஜானகியுடன் இணைந்து வானத்துப் பூங்கிளி எனும் இளையராஜாவின் பாடலை பாடிக்கொண்டு தமிழுக்கு அறிமுகமான ஜென்ஸிக்காக தமிழ் சினிமா காத்துவைத்திருந்தது பெரும் வெற்றிபெற்ற எத்தனையோ அதிசயப் பாடல்கள். கிழக்கே போகும் ரயில் எனும் படத்தின் பின்னணிஇசையில் ஜென்ஸியின் ஆலாபனையை அலாதியான அழகுடன் இளையராஜா பயன்படுத்தியபோது அதில் மயங்கிப்போன இயக்குநர் பாரதிராஜா தொடர்ந்துவந்த தனது எல்லாப் படங்களிலும் ஜென்ஸியின் குரல் வேண்டும் என வலியுறுத்தினார். இதயம் போகுதே, நம்தன நம்தன தாளம் வரும் (புதிய வார்ப்புகள்), ஆயிரம் மலர்களே, இரு பறவைகள் (நிறம் மாறாத பூக்கள்), காதல் ஓவியம், வாடீ என் கப்பக் கெழங்கே (அலைகள் ஓய்வதில்லை), பூ மலர்ந்திட (டிக் டிக் டிக்) போன்ற பாடல்களை யாரால் மறக்க முடியும்?


இளயராஜா மட்டுமல்லாது தேவா, கங்கை அமரன், சங்கர் கணேஷ், சந்திரபோஸ், மலேஷியா வாசுதேவன் போன்றவர்களின் இசையமைப்பிலும் ஜென்ஸி பாடினார். முள்ளும் மலரும், ஜானி, பிரியா, உல்லாசப் பறவைகள், பகலில் ஓர் இரவு, கரும்புவில் என தமிழில் ஜென்சியின் பாடல்கள் கொடிகட்டிப் பறக்கும்போது தனது தாய்மொழியான மலையாளத்தில் சொல்லும்படியான பாடல்கள் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவ்வப்போது வெற்றிபெற்ற ஓரிரு பாடல்களைப் பாடியபோதிலும் மலையளத்தில் ஒரு முன்னணிப் பாடகியின் இடம் ஒருபோதும் ஜென்ஸிக்கு வாய்க்கவில்லை.

'திருமணத்திற்கு பிறகு திரைப்படங்களில் நான் பாடமாட்டேன்' என்று ஜென்ஸி தெரிவித்ததாக செய்தி வெளிவந்து எங்கும் பரவியது. ஆனால் அதை ஜென்ஸி மட்டும் அறியவேயில்லை. எதனால் தனக்கு திரைப் படங்களில் வாய்ப்பு வருவதில்லை என்று யோசித்து சங்கடமடைந்தாலும் அதை பொருட்படுத்தாமல் ஒரு பள்ளியில் இசை ஆசிரியையாக வேலைக்குச் சேர்ந்தார் ஜென்ஸி. அவ்வப்போது ஒருசில நாடகப் பாடல்கலையும் பக்திப்பாடல்களையும் பாடினார். காலங்கள் கடந்தோடின.

கால் நூற்றாண்டு கடந்த பின்னர் 2014ல் ராஜீவ் ரவி இயக்கிய ஞான் ஸ்டீவ் லோபஸ் எனும் மலையாளப் படத்தில் ஒரு பாடலைப் பாடினார். ஆனால் அதன் பின்னரும் சொல்லும்படியான வாய்ப்புகள் எதுவும் ஜென்ஸிக்கு வரவில்லை. ஒரு தமிழ் திரைப்பாடகியாக வாழக்கிடைத்த வாய்ப்பில் தனக்கு மனநிறைவு இருக்கிறது என்று அவர் சொல்லும்போதிலும் ஜென்சி எனும் அதிசயப் பாடகிக்கு இழைக்கப்பட்டது மிகப் பெரிய அநீதி என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. ●

## வாரம் 16 (09.04 – 15.04 வரை)

# உலக நடப்புக்கள் ஒரு பார்வை




தேசமித்ரன்

சர்வதேச அரசியல் வானத்தில் இவ்வாரம் முக்கிய இடத்தைப்பெற்ற விடயம் “டிரம்ப் உறுதியளித்த சிரியா மீதான தாக்குதல் இப்போ வருமா, உடனடியாக வருமா?” என்பதில் ஆரம்பித்தது.

அவ் விடயத்தை தொடுவதற்கு முன்பு சுவீடனில் ஊடகங்கள், அரசியல், சமூகம் என்று சகலத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த ஸ்வென்ஸ்கா அகாடமியிலிருந்து ஆரம்பிக்கிறேன். நோபல் பரிசுகளை பற்றித் தெரிந்திருக்கும் பலருக்கும், அவைகள் யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை வெவ்வேறு துறைகளை சேர்ந்த வெவ்வேறு அமைப்பினர்கள் தெரிந்தெடுக்கிறார்கள் என்பது தெரியாது. அல்பிரட் நோபலின் விருப்பப்படி இலக்கியத்துக்காக யார் நோபல் பரிசு பெறுகிறார்கள் என்பதை முடிவு செய்வது ஸ்வென்ஸ்கா அகாடமி. வெவ்வேறு கலைப் பிராந்தியத்தில் முக்கியத்துவர்களான 18 அங்கத்துவர்களை கொண்ட அவ்வமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் அவர்களது இறப்புவரை அப்பதவியில் இருப்பார்கள்.

ஸ்வென்ஸ்கா அகாடமியின் உள்ளே நடப்பவை எவையும் பகிரங்கத்துக்கு வருவதில்லை என்பது பாரம்பரியம். அதனால் நீண்டகாலமாக அமைப்புக்குள் இருந்தவர்களாலும், அவர்களின் சில உறவினர்களாலும் செய்யப்பட்ட சில பாரிய தவறுகள் அவ்வுறுப்பினரிடையே உண்டான பிளவுகளால் வெளியே ஊடகங்களில் கசிய விடப்பட்டபோது சுவீடன் நாட்டவர்கள் வெட்கமடைந்தார்கள். தவறான முறையில் பணத்தை கையாளுதல் முதல் அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரின் கணவர் பல பெண்களுடன் தவறாக நடந்து கொண்டமை போன்ற குற்றச் சாட்டுக்கள் வெளியாகி சில மாதங்களில் உறுப்பினர்கள் பெரும்பாலானோரும் ஸ்வென்ஸ்கா அகாடமியில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வமைப்பின் சட்ட திட்டங்களை நிர்வகிக்கும் உரிமை 1700 ஆண்டுகளிலிருந்தே சுவீடன் அரசனின் கையில் மட்டும் இருப்பதால் சுவீடனின் அரசன் அமைப்பின் சட்டங்களை 21ம். நூற்றாண்டுக்கு ஏற்ப மாற்றியமைக்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இவ்வமைப்பு சுவீடன் நாட்டின் விடயமாக இருப்பினும் சர்வதேசத்தில் பிரபலமான நோபலின் இலக்கியத்துக்கான பரிசுக்குரியவரை தெரிவு செய்வதால் இவ்வமைப்புக்குள் இருப்பவர்கள் சுவீடனைச் சேர்ந்தவர்களாக இருப்பது இக்காலத்துக்கு உகந்ததல்ல என்ற கருத்து சுவீடன் உட்பட்ட பல நாட்டின் கலாச்சா ரமுக்கியஸ்தர்களிடையேயும் எழுப்பப் பட்டிருக்கிறது. சுவீடன் அரசர் இவ்வமைப்புக்கான சட்ட திட்டங்களை மாற்றும்போது அமைப்பினுள் சர்வதேச அங்கத்தவர்களையும் நுழைய விடுவதன் மூலம் நோபல் பரிசுகளுக் கான ஆராய்வின் பார்வையை அகலப் படுத்தலாம் என்று பலரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

08.04

அன்று ஹங்கேரியில் நடந்த தேர்தலில் ஆட்சியிலிருந்த Fidesz கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தலையிடி கொடுத்துக் கொண்டிருக்கும் விக்டர் ஓர்பான் மூன்றாவது தடவையும் பிரதமரானார். “அகதிகள், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, ஜோர்ஜ் ஸோரோஸ் ஆகியவை எங்கள் நாட்டுக்குள் ஊடுருவி விடாமலிருக்க என்னுடன் சேர்ந்து போராடுங்கள்,” என்ற ஓர்பானின் தேர்தல் கோஷத்துக்கு மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான [49 %] ஆதரவளித்து மக்கள் எதிர்க்கட்சிகளை மண் கவ்வ வைத்திருக்கிறார்கள். நாட்டின் 106 ஒற்றைப் பாராளுமன்ற இடங்களில் 91 ஐ ஆளும் கட்சி அள்ளிக்கொண்டது.

இது ஓர்பானின் மூன்றாவது தேர்தல் வெற்றி. ஹங்கேரியின் பழமைவாதிகள், வலதுசாரிகளைக் கொண்ட ஓர்பானின் அமைப்பின் காலத்தில் நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து சமூகத்தில் பரவலான சுபீட்சம் உண்டாகியிருக்கிறது. ஒரு காலத்தில் சோசலிஸ்டுகளின் பிடியிலிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடான ஹங்கேரியிலிருந்து 1990 கள் வரை பலர் வெளிநாடுகளுக்கு அகதிகளாக ஓடினார்கள். அப்படிப்பட்ட நாட்டு மக்கள் தங்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைத்தவுடன் ஐரோப்பாவுக்குள் வரும் அகதிகளைத் தங்கள் நாட்டுக்குள் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகிறாரகள். அரசியல்ரீதியாக அவர்களது குரலுக்கு அடையாளம் கொடுப்பவராக இருக்கிறார் ஓர்பான்.

“முதலீட்டாளர் ஜோர்ஜ் ஸோரோஸ் ஐரோப்பாவையே முஸ்லீம்களால் நிறைப்பதற்கு இரகசியமாகத் திட்டம் போட்டிருக்கிறார்” என்று சொல்லும் ஓர்பான் ஹங்கேரியில் பிறந்து வளர்ந்து அமெரிக்காவில் குடியேறி வாழும் சர்வதேசரீதியில் பொருளாதாரம், அரசியல், மனிதாபிமான உதவிகள் ஆகிய விடயங்களில் அறியப்படும் ஸோரோஸ்தான் ஹங்கேரியின் முக்கிய எதிரி என்று குறிப்பிட்டு ஸோரோஸ் ஹங்கேரியில் நடாத்திவரும் கல்வி நிலையங்கள், மனித உரிமை அமைப்புக்கள் சகலத்தின் மீதும் கடும் போர் நடாத்தி வருகிறார். அகதிகள் விடயத்தில் ஓர்பான் காட்டும் கடுமையான போக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மிகப்பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

அதே விடயத்தில் ஐ.நா காட்டும் கரிசனையும் ஓர்பானுக்கு எரிச்சலையே உண்டாக்கியிருக்கிறது.

ஹங்கேரி உண்மையிலேயே வெளிநாட்டவர்களை, அகதிகளை வெறுக்கும் நாடா என்று இன்னொரு விதமாகப் பார்த்தால் 2016 வரை கிடைக்கும் விபரங்களைக் கொண்டு அங்கே அந்த ஆண்டுவரை பல்லாயிரக்கணக்கான அகதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 2016 இல் 23,803 வெளிநாட்டவர்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள்.

அதே வருடத்தில் ஹங்கேரியைப் போன்ற இன்னொரு ஐரோப்பிய ஒன்றிய நாடான போர்த்துக்கலில் 15,100 வெளிநாட்டவர்கள் குடியேறியிருக்கிறார்கள். ஹங்கேரியில் ஓர்பான் ஆட்சியமைத்த பின் அகதிகளை ஏற்றுக்கொள்வது குறைவாகினாலும் இன்னொரு பக்கத்தில் ஓர்பான் நாட்டுக்குத் தேவையான தொழில் நுட்பத் திறமைகளுள்ள 20 000 ஆசியர்களை ஹங்கேரியின் நடுத்தர நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்யும் அனுமதியை 2013 2017 காலத்தில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.

கணிப்புக்களின்படி 72 விகித ஹங்கேரியர்கள் எதிர்ப்பது இஸ்லாமியர்கள் ஹங்கேரியில் அகதிகளாக வந்து குடியேறுவதே. அவர்களும் ஹங்கேரியில்வாழும்லட்சக்கணக்கான ரோமா இனத்தினரும் [ஜிப்சிகள்] ஓரேவிதமான மனப்பாங்குள்ளவர்கள் என்று ஹங்கேரியர்கள் கருதுகிறார்கள். ரோமா இனத்தவர்கள் எப்படியாக ஹங்கேரி மற்றும் அருகிலிருக்கும் நாடுகளான ருமேனியா, பல்கேரியாவில் பெரும்பான்மைச் சமூகத்தினரிடமிருந்து விலகி வித்தியாசமான வாழ்க்கை முறை வாழ்கிறார்களோ அதேபோலவே முஸ்லீம்களும் ஐரோப்பாவில் குடியேறிய பின்னும் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் கலக்காமல் தமக்கென்ற உப சமூகங்களையும் அதற்கான வாழ்க்கை முறைகளையும் வகுத்துக்கொண்டு வாழ்வதால் நாட்டின் பல பகுதிகளில் ஒழுங்கின்மை, சட்டமீறல், தீவிரவாதம் போன்றவை பெருகுவதாகக் குறிப்பிடுகிறது ஓர்பானின் கட்சி.

வென்ற ஆளும் கட்சி ஹங்கேரியில் இவ்விடயத்தில் நடத்தப் போவது எவரும் இதுவரை செய்யாத ஒரு செயல். அகதிகளுக்கு உதவும் அமைப்புக்களின் மீது கடுமையான நடவடிக்கைகளைக் கொண்டுவரும் மசோதா பாராளுமன்றத்தில் ஓரிரு வாரங்களில் கொண்டு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வரப்படவிருக்கிறது. ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி ஆளும்கட்சி மூன்றிலிரண்டு விகிதத்துக்கும் மேலான ஆசனங்களைக் கைப்பற்றியிருப்பதால் அம்மசோதா நிறைவேற்றப்படும் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை.

அகதிகளுக்கு உதவும் நிறுவனங்கள் அதற்காக அரசிடம் அனுமதி வாங்கினால் மட்டுமே செயற்படலாம். அந்த அமைப்புக்கள் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டால் அவர்கள் தங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் நிதிகளில் 25 விகிதத்தை அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டும் என்கிறது அந்த மசோதா.

சிரிய அரசு தனது குடிமக்கள் மீது இரசாயனக் குண்டுகளால் தாக்கியது உண்மைதான், அதற்கு எங்களிடம் நம்பக்கூடிய சாட்சிகள் இருக்கின்றன என்று உறுதியாகச் சொல்லும் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் மற்றைய மேற்கு நாடுகளுடனும், சவூதி அரேபிய உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுடனும் சேர்ந்து ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் சிரியாவின் மீது விசாரணை நடாத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவரப் போவதாக அறிவித்தன. அதற்காகக் கூட்டப்பட்ட சந்திப்புக்களில் ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தால் அவ் விசாரணைகளை எதிர்த்தது.

திரை மாறியபோது ரஷ்யா நடுநிலையான ஒரு அமைப்பு ஒன்றால் சிரியாவின் மீது விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்று கோரி புதிய தீர்மானமொன்றை முன்வைக்க ஏற்கனவே அதைக்கோரிய நாடுகள் எதிர்த்திசையில் திரும்பி ரஷ்யாவின் தீர்மானம் தங்களுக்கு ஒப்பானதல்ல என்று கூறி அதை நிராகரித்தன.

அதேசமயத்தில் வழக்கம்போல முன்னுக்குப்பின் முரணாக டுவீட்டும் டொனால்ட் டிரம்ப் சிரியாவின் மீது தாக்குவதா இல்லையா என்ற விடயத்திலும் எல்லோரையும் குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தார். பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் டிரம்ப்பைக் கட்டாயப்படுத்தி ஒருவழியாக வெள்ளியன்று சிரியாவின் மீதான தாக்குதல்கள் நடாத்தப்பட்டபோது சிரியா தனது படைகளை சிரியாவிலிருந்த ரஷ்யத் தளங்களுக்கு மாற்றிவிட்டது.

சிரியாவில் விழுந்த குண்டுகள் எல்லாமே அவர்களின் இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் இடங்களில் தாக்கியதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், அவையெல்லாம் சிரியாவின் வெவ்வேறு ஆராய்ச்சி நிலையங்கள் என்கின்றன ஊடகச் செய்திகள். எப்படியோ "நீ அடிக்கிற மாதிரி அடி, நான் திருப்பியடிப்பதாக சத்தியம் செய்கிறேன்" என்று திரைக்குப் பின்னால் பேசி முடிக்கப்பட்டபடி காரியங்கள் நடந்தேற இவ்விடயத்தில் ஈடுபட்ட நாடுகள் எல்லாவற்றுக்கும் இலாபமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் 70 டொலர்களுக்குப் போய்விட்டது. ரஷ்யா திருப்பிக் கொடுப்போம் என்று எச்சரிக்கிறது. அதையே சிரியா, ஈரான் ஆகிய நாடுகளும் எதிரொலிக்கின்றன.

அமைதிக்கான நோபலின் பரிசை 2016 இல் பெற்றவர் கொலம்பியாவின் ஜனாதிபதி ஹுவான் மனுவல் சாந்தோஸ். சர்வதேசத்தில் போதைப் பொருட்களுக்காகவும், அதனால் நடாத்தப்படும் கொலைகளுக்காகவும் பெயர்பெற்ற நாடான கொலம்பியாவில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் முடிவைக் கொண்டுவரும் ஒப்பந்தத்தைச் செய்திருப்பதற்காக அப்பரிசு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

நாட்டில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பல இயக்கங்களில் முக்கியமான FARC கெரில்லா இயக்கத்தை · பேச்சுவார்த்தைக்கு கொண்டுவந்து அவர்கள் ஜனநாயக வழிப்படி கொலம்பியாவில் மாற ஒத்துக்கொள்ள வைத்தார் ஹுவான் மனுவல் சாந்தோஸ். ஓரளவே வெற்றிகரமாக நடந்த அப்பேச்சுவார்த்தையின் ஒப்பந்தத்தை உடனேயே கொலம்பிய மக்கள் தேர்தலில் ஒத்துக்கொள்ளாவிடினும் படிப்படியாகப் பேச்சுவார்த்தை நடாத்தி அவ்வியக்கத்தினரின் நடவடிக்கைகளை மாற்றலாம் என்ற கருத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டாவது வருடம் ஆகிவிட்டாலும் பல ஏமாற்றங்களையே கொலம்பிய மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியவர்களில் முக்கியமானவர் யேசுஸ்சந்திரிஷ் என்ற FARC இயக்கத் தளபதி. இவரைக் கொலம்பியா அரச வழக்கறிஞரும், அமெரிக்க நீதித்துறையும் சேர்ந்து கைது செய்திருக்கின்றன. இவர் சுமார் 32 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 10 000 கிலோ போதைப் பொருட்களை அமெரிக்காவுக்கு கடத்த முயன்றதற்கான ஆதாரங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. பேச்சுவார்த்தைகளின் படி கொலம்பியாவின் பாராளுமன்றத்தில் இவ்வியக்கத்தினருக்கு கொடுக்கப்படும் இடங்களில் இவருக்கு ஒரு இடம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

யேசுஸ்சந்திரிஷ் கைது செய்யப்பட்டிருப்பது அந்த இயக்கதினரை கோபப்படுத்தியிருக்கிறது. தங்கள் இயக்கத்தை பலவீனப்படுத்துவதற்காக அமெரிக்க அரசு இக்குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருப்பதாக FARC இயக்கத்தினர் குறிப்பிடுகின்றனர். அதே சமயம் இன்னொரு பக்கத்தில் சுமார் 1 200 மாஜி இயக்கத்தினர் அமைதி ஒப்பந்தத்தை ஏற்காமல் நாட்டிலுள்ள மற்றைய ஆயுதந் தாங்கும் இயக்கங்களுடன் சேர்ந்து அரசுக்கெதிராகப் போரில் இறங்கியிருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஏற்கனவே தேர்தலில் மக்களால் தூக்கியெறியப்பட்டு, இன்னும் நாட்டின் சுமார் முக்கால்பகுதி மக்களின் நம்பிக்கையைப் பெறாத, இரண்டு வருடங்களாக இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும் கொலம்பியாவின் அமைதி ஒப்பந்தத்தில் உயிர் இருக்கிறதா என்ற கேள்வி பல தரப்பிலிருந்தும் எழுப்பப்படுகிறது.

ஆபிரிக்காவின் பிரச்சினையான கொம்பில் ஒரு நாடான சோமாலியாவில் சமீக வாரங்களில் சவூதிஅரேபியா கத்தார் நாடுகளின் பிரச்சினை காத்திரமாக எதிரொலிக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு சவூதி அரேபியாவின் நெருங்கிய நண்பரான எமிரேட்ஸிலிருந்து சோமாலியாவுக்கு வந்த விமானமொன்றில் சுமார் 10 மில்லியன் டொலர்கள் பெறுமதியான நோட்டுக்கள் பைகளில் இருந்ததாகவும், அவை யாரிடமிருந்து, எங்கே, எதற்காக வந்திருக்கிறது என்று தெரியாத நிலையில் தாம் அதைக் கைப்பற்றிய தாகச் சோமாலிய அரசு அறிவித்தது.

அது நடந்த அடுத்தவாரத்தில் மீண்டும் எமிரேட்ஸிலிருந்து வந்திருந்த விமானமொன்றில் சந்தேகமான பொருட்கள் இருப்பதாகவும், அவைகளை பரிசோதிக்க அவ்விமானத்தின் அதிகாரிகள் மறுப்பதாகவும் கூறி அவ்விமானத்தை திரும்பிப் போக விடாமல் நிறுத்தி வைத்திருக்கிறது சோமாலியா.

பல வருடங்களக சோமாலியா உள்நாட்டுப் பிரச்சினைகளால் சீர்கெட்டுப் போயிருக்கும் சோமாலியாவை முழுதாக ஆளும் ஒரு அரசாங்கம் இப்போதும் இல்லை. ஆனால், பெரும் பகுதியை ஒரு கூட்டு அமைப்பு ஆட்சி செலுத்தி வருகிறது. புந்த்லாந்து, சோமாலிலாந்த் என்ற பெயரில் இரண்டு பிராந்தியங்கள் தங்களைச் சுயமான மாநிலங்கள் என்று குறிப்பிட்டு ஆண்டும் வருகின்றன.

சவூதி அரேபியாவின் கத்தார் எதிர்ப்பில் கத்தாரின் பக்கம் சார்பாக இருக்கும் துருக்கி ஓரிரு வருடங்களாக சோமாலியாவில் இராணுவத் தளங்கள், கல்விக்கூடங்களை அமைத்து பல வழிகளிலும் சோமாலியாவில் தங்கள் காலை ஊன்றி வருவதன் காரணமே சோமாலியா தனது நீண்டகால நண்பர்களாக இருந்த எமிரேட்ஸை இப்போது உதறி வருவதாகும்.

சுற்றுப்புற சூழலைப் பற்றியும், நீண்டகால காலநிலை மாற்றங்கள் பற்றியும் மனித குலத்தை எச்சரிக்கும் பல விஞ்ஞான அறிக்கைகள் சமீபகாலமாக வந்து கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் இவ்வாரத்தில் வளைகுடா நீரோட்ட அமைப்புப் பற்றிய இரண்டு ஆராய்ச்சிகள் வெளிவந்திருக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மனிதர் வாழக்கூடியதாக இருப்பதற்கு காரணம் வளைகுடா நீரோட்ட அமைப்பு. இது the Atlantic meridional overturning circulation (AMOC) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. உலகின் வெம்மையான பகுதியிலிருந்து நீரை வடக்கு நோக்கிக் காவிச் செல்வதன் மூலம் இந்த நீரோட்ட அமைப்பு பூமியின் இன்றைய காலநிலைக்கு உதவுகிறது.

மனித நடவடிக்கைகளால் உலகம் வெப்பமாவதால் தற்போதைய துருவத்தில் இருக்கும் பனிமலைகள் உருகி வருகின்றன என்று பல ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. அப்படி உருகுவதால் வரும் குளிர்நீர் உலகின் மத்திய பாகத்தை நோக்கி நகரும்போது அது வளைகுடா நீரோட்ட அமைப்பு வடக்கை நோக்கிக் காவி வரும் வெம்மையான நீர்ப்பரப்பை குளிராக்கி அதன்மூலம் அதன் வேகத்தை கட்டுப்படுத்தினால் உலகின் வடபகுதி மேலும் குளிர்மையாகி விடும். அது பரவி உலகம் மீண்டும் ஒரு நீண்டகால நிரந்தரப் பனிக்காலத்தை எதிர்நோக்கும் என்கிறது புவியியல் கோட்பாடு.


தற்போது வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு ஆராய்ச்சிகளும் வளைகுடா நீரோட்ட அமைப்பானது கடந்த 1 600 வருடங்களில் காணாத அளவுக்கு பலவீனமாகியிருக்கிறது என்பதாகும். மேற்கண்ட விபரங்கள் பல ஊடகங்களிலும் வெளியாகியதில் நாம் புதியதொரு பனிக்காலத்தை நோக்கிக் கொண்டிருக்கிறோமா என்று ஒரு சாரார் கேட்கிறார்கள். ஆனால், மேற்கண்ட ஆராய்ச்சிகள் மட்டும் அப்படியொரு நிலைமை வருமா என்பதைப் புரிந்துகொள்வதற்கு போதுமானவை அல்ல என்கிறார்கள் விஞ்ஞானிகள். இதுபற்றிய ஆராய்ச்சிகள் மேலும் தொடரப்பட்டு புதிய விபரங்களைத் தெரிந்துகொண்டதன் பின்புதான் தற்போதைய நிலைமைக்கான காரணம் என்ன என்பதைச் சொல்ல முடியும் என்கிறார்கள் அவர்கள்.

இவையெல்லாம் நடந்து கொண்டிருந்த வாரத்தில் பேஸ்புக் அதிபர் மார்ஸுக்கர் பெர்கை அமெரிக்கப் பாராளுமன்றக்குழுவொன்று இரண்டு நாட்களாக வறுத்துக்கொண்டிருந்தது.

பேஸ்புக் பற்றியும் அதன் கூட்டு நிறுவனங்கள் பற்றியும் எம்மால் கற்பனைகூடச் செய்துகொள்ள முடியாத பல விடயங்கள் வெளிவந்து பேஸ்புக் தனது அங்கத்துவர்கள் விபரங்கள் சரியானவையா என்று ஒப்பிடுவதற்காக பேஸ்புக்கில் அங்கத்துவர்கள் அல்லாதவர்களின் விபரங்களையும் சேர்த்தமை தெரியவந்தபோது எங்கள் தனிப்பட்ட விபரங்களை பாதுகாப்பது பற்றிய பொறுப்பை நாங்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டாலே தவிர வேறெவராலும் அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்பது புரிகிறது.

நெல்சன் மண்டேலாவுடன் சேர்ந்து போராளியாக மாறி, போரளியாக வாழ்ந்து, எத்தனையோ இன்னல்களை அனுபவித்து, தனது கையில் இருந்த பொறுப்புக்களை தவறாக கையாண்டதால் நட்சத்திர ஸ்தானத்திலிருந்து வீழ்ந்த வின்னி மண்டேலாவும் இறந்து அவரது ஈமக்கிரிகைகள் நடந்தேறி விட்டன.

**சிரியாவில் விழுந்த குண்டுகள் எல்லாமே அவர்களின் இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் இடங்களில் தாக்கியதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், அவையெல்லாம் சிரியாவின் வெவ்வேறு ஆராய்ச்சி நிலையங்கள் என்கின்றன ஊடகச் செய்திகள்.**



சூதாட்டம் ஆடுவது வெறும் பொழுதுபோக்கு சம்பந்தப்பட்டதல்ல. சட்டவிரோதமானது என்று தடை செய்யப்பட்டிருக்கும் இந்த விளையாட்டை ஆடி, சொத்தை அழித்துக்கொண்டவர்களும் உயிரை இழந்தவர்களும் அதிகம். அந்த ஆபத்தெல்லாம் தெரிந்தும் ஏன் ஒருவர் சூதாடுகிறார்?

1986ல் பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகு, மனநலக் கோளாறு காரணமாகத்தான் ஒருவர் மிக அதிகமாக சூதாட்டம் ஆடுகிறார் என சர்வதேச மனநலக் கழகம் அறிவித்தது.

பலமுறை தோற்றிருப்பார்கள்.

சூதாட்டம் சம்பந்தமாகவே பேசுவார்கள், யோசிப்பார்கள்.

சோகமானாலோ மனச்சோர்விலிருந்தாலோ சூதாட்டம் விளையாடுவார்கள்.

சூதாட்டத்தில் எவ்வளவு பணம் தோற்றாலும், 'மீண்டும் பணத்தை வென்று காட்டுகிறேன் பார்' என்று மீண்டும் மீண்டும் விளையாடுவார்கள்.

சூதாட்டம் பற்றிக் கேட்டால் பொய் சொல்வார்கள்.

குடும்ப உறவுகள், நண்பர்கள், வேலை

இலங்கையில் சூதாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது. எல்லா வகையான சூதாட்டங்களும் தடை செய்யப்பட்டுவிட்டன. ஆனால், ஒன்லைன் சூதாட்டத்துக்கு எப்படிக் கடிவாளம் போடுவது என்று தெரியாமல் திணறுகிறது அரசு.

அமெரிக்காவில் இருப்பது போன்ற இணைய சூதாட்டத் தடைச் சட்டம் இங்கு இல்லை. அந்தச் சட்டத்தின் மூலம் இணைய சேவை புரியும் நிறுவனங்களுக்கும்ஒன்லைன் சூதாட்ட வலைத்தளங்களைத் தடைசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விளம்பரங்கள் வரும்போது, சட்டத்தால் என்ன செய்ய முடியும்?

**வீடியோ கேம்... நன்மைகளும் உண்டு!**

வீடியோ கேம்களை நவயுக சாத்தானாகப் புரிந்துகொள்ள வேண்டாம். வீடியோ கேம் விளையாடுவதால் பல நன்மைகளும் இருக்கின்றன என்கிறது இன்னொரு தரப்பு. அதைப் பற்றியும் விரிவாகத் தெரிந்துக்கொள்வோம்.

அமெரிக்காவில் உள்ள உடா பல்கலைக்கழகத்தில் வீடியோ கேம் விளையாடுபவர்களைப் பற்றி

# சூது ஒரு மனக்கோளாறு!




அந்த சூதாட்டங்களில் ஒன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடுவதையும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அப்படிச் சேர்ப்பது சரியா என்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**மனநலக் கோளாறுக்கான அறிகுறிகள்**

ஒருவர் சூதாட ஆரம்பித்து, ஓர் ஆண்டுக்குள் கீழ்க்காணும் அறிகுறிகள் அவரிடம் தென்பட்டால், அதிக அளவில்சூதாடும்மனநலக்கோளாறால் அவர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தலாம்.

சூதாட்டம் ஆடுவதை நிறுத்தச் சொன்னால் எரிச்சலடைவார்கள், கோபப்படுவார்கள்.

சூதாட்டத்தை நிறுத்த முயன்று

என எல்லாவற்றையும் இழந்தாலும் சூதாட்டத்தைத் தொடர்வார்கள்.

மிகவும் மோசமான பொருளாதாரச் சூழ்நிலையில் இருப்பார்கள். எப்போதும் மற்றவர்களைச் சார்ந்திருக்கத் தொடங்குவார்கள்.

இவற்றில் ஏதேனும் நான்கு அறிகுறிகள் தெரிந்தாலும் ஒருவர் சூதாட்டத்துக்கு அடிமையாகி விட்டார் என உறுதியாகச் சொல்லலாம்.

ஆன்லைன் சூதாட்டத்தைப் பொறுத்தவரை இதே அளவுகோல்களைப் பின்பற்றலாம் என இதைப் பற்றி ஆராய்ந்துவரும் நிபுணர் கிம்பர்லி யூங் குறிப்பிடுகிறார்.

**சட்டம் என்ன சொல்கிறது?**

ஆனால், ஒன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை அவ்வளவு சீக்கிரம் தடைசெய்ய முடியாது.

ஒன்லைன் சூதாட்டத்தை கிரெடிட் கார்ட், ஒன்லைன் பாங்கிங் உள்ளிட்டவை மூலமாக விளையாடலாம். வெளிநாட்டுப் பணப் பரிவர்த்தனைச் சட்டப்படி இந்த விளையாட்டுகளில் மேற்கொள்ளப்படும் பணப் பரிவர்த்தனைகள் கண்காணிக்கப்படுகின்றன. எப்போது வேண்டுமானாலும் சட்டப்படி பணம் முடக்கப்படலாம் என்பது கொஞ்சம் ரிஸ்க்தான். எனினும், அப்படியான நிகழ்வுகள் ஏதும் இதுவரை நடைபெறவில்லை. தொலைக்காட்சிகளில் பகிரங்கமாக ஆன்லைன் சீட்டாட்டம் பற்றிய

விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர் மருத்துவர் ஜெஃப் ஆண்டர்ஸன். அவர், வீடியோ கேம் விளையாடுபவர்களை ஆய்வு செய்தபோது, அவர்கள் இயல்பாக வெளிப்படுத்தும் நன்மையான பண்புகளைக் கவனித்தார். அதைப் பற்றி ஆய்விதழ்களில் பல கட்டுரைகள் வெளியிட்டார்.

**பார்வை, செவி கூர்மைக்கு...**

அவர் சொல்லும் கருத்துகளில் மிகவும் முக்கியமானது, வீடியோ கேம் விளையாடுபவர்கள், தங்களுக்குப் புதிதாக வரும் தகவல்களை எளிதாகப் புரிந்துகொள்கிறார்கள் என்பதுதான். அதேபோல் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் மனநிலையை உடனே மாற்றிக்கொள்கிறார்கள்.

# வாழை மரத்துக்கு தாலி கட்டினால் தோஷம் போய்விடுமா?



பொதுவாக, 13 என்பது பயம் அல்லது துரதிருஷ்டம்என்பது பொதுக் கருத்தாக, எண்ணமாக இருக்கிறது.

உண்மையில், 13ம் எண்... பயமுறுத்துகிற நம்பர்தானா? இந்த நம்பருக்குப் பயப்பட வேண்டுமா?

பயப்பட வேண்டாம். இது ஆங்கில முறை. நாம் இந்திய முறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும்' என்றால், தமிழ் முறைக்கு முக்கியம் தரவேண்டும். அதுபோதும்!

ஆக, 13 எனும் நம்பருக்கு பயப்படாதீர்கள். பயப்படவே பயப்படாதீர்கள்.

இதுகுறித்து, பின்னர் பார்ப்போம்.

இப்போது பரிகாரம் குறித்து என்னெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்னெல்லாம் செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

ஒருவருக்கு இரு தாரம் எனும் தோஷம் இருக்கிறது.

இரு தார தோஷம் என்றால் என்ன?

அதாவது, மூன்று வகையாக இதைச் சொல்லலாம்.

முதலாவது... துணை (கணவன் அல்லது மனைவி) இறந்து போக, இன்னொருவரை மணம் புரிவது! அதாவது இரண்டாவதாகத் திருமணம் செய்வது!

இரண்டாவது... விவாகரத்து பெற்று, அடுத்து வேறொருவரை மணம் புரிவது!

மூன்றாவது... கணவன் அல்லது மனைவிக்குத் தெரியாமல், ரகசியமாக இன்னொரு துணையை தேடிக் கொள்வது.

ஆக, இதையெல்லாம் ஒட்டுமொத்தமாக, இரு தார தோஷம் என்று சொல்கிறார்கள். இந்த தோஷத்துக்குப் பரிகாரம் உண்டென்றும் சொல்கிறார்கள். இதுதான் பரிகாரம் என்றும் சொல்கிறார்கள்.

என்ன செய்வது? அவருக்கு இரண்டு திருமணம் செய்விக்க முடியுமா? நடைமுறைக்கு சாத்தியமா? சட்டம்தான் ஏற்றுக்கொள்ளுமா?

என்ன செய்வது?

இந்தப் பரிகாரங்கள் குறித்துதான் கேள்விகள் இருக்கின்றன.

வாழை மரத்துக்கு தாலி கட்டிவிட்டு, அதை வெட்டிச் சாய்த்துவிட்டால், தோஷம் போய்விடும் என்கிறார்கள், கேள்விப்பட்டிருப்பீர்கள். சிலர் பார்த்திருக்கவும் செய்யலாம். இன்னும் ஒரு சிலர்... அந்தப் பரிகாரத்தைக் கூட செய்திருக்கலாம்!

ஆனால் நடப்பதென்ன? பரிகாரம் செய்பவர்... ஒரு வாழை மரத்தை வெட்டி கொண்டுவந்திருப்பார். அந்த வாழை மரத்துக்கு தாலிகட்டி அந்த வாழைமரத்தை வெட்டி விடுவார், பரிகாரம் முடிந்தது. அப்படித்தானே!

இது சரியா?

ஏற்கெனவே வெட்டப்பட்ட மரம் எப்படி உயிரோடு இருக்கும்?

ஏற்கெனவே வெட்டப்பட்ட மரம் எனில், அது இறந்த மரம்தானே?

இறந்த மரத்திற்கா தாலி கட்டினார்? இறந்த மரத்தை மீண்டும் வெட்டி என்ன பயன்?

நான் இங்கே அபசகுன வார்த்தை பிரயோகிப்பதில்லை என்பதில் தெளிவாக இருக்கிறேன்.

ஆனாலும் சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

எனக்கு தெரிந்து... வாழைத்தோப்பில் வைத்து குலை தள்ளாத மரத்திற்கு தாலி கட்டி, அதை வெட்டினால் தோஷம் நீங்கும் என்பதை எடுத்துக் கொள்ளலாம்,

அது என்ன குலை தள்ளாத மரம்? என நீங்கள் கேட்பது புரிகிறது, அதாவது குலை தள்ளாத மரம் கன்னிக்கு ஒப்பானது! கன்னித் தன்மைக்கு நிகரானது!

ஆனால் இதுவும் தவறுதான், இதனால் இரு தார தோஷம் நீங்கி விடாது, இதில் என்ன ஆச்சரியம் என்றால், சமீபத்தில் ஒரு பெண்ணின் பெற்றோர் தங்கள் பெண்ணுக்கு திருமணம் தடை பெற்றுக்கொண்டே இருக்கிறது என்றும், மகளுக்கு இரு தார தோஷம் இருப்பதாக ஒரு ஜோதிடர் சொன்னதால், அவரின் வழிகாட்டுதல் படி இந்த வாழைமர பரிகாரம் செய்ததாகவும் சொன்னார்கள்.

நான் வாயடைத்துப் போனேன், ஆணுக்கு இந்த பரிகாரத்தை பரிந்துரைப்பது போய், பெண்களுக்கும் இந்தப் பரிகாரத்தை வழிமொழியும் ஜோதிடர்களை என்னவென்று சொல்வது?

இது எவ்வளவு பெரிய அபத்தம். ஜோதிடம் என்பதே ஒருவரின் கால நிலையை அறியும் கலை. அவர் யார்? எப்படிப்பட்டவர்? அவருடைய எதிர்காலம் என்ன? அவர் எதிர் கொள்ளும் சவால்கள் என்ன? செழிப்பான வாழ்வா? போராட்ட வாழ்வா?

என காட்டும் மாயக்கண்ணாடிதான் ஜோதிடம்!

எனவே ஜோதிடம்என்பது வருவதை அறிந்து கொள்ளும் அற்புதக் கலையே தவிர, நாம் எதிர்கொள்ள இருக்கும் எதையும் மாற்றித் தரக்கூடியதல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சரி... இந்த இரு தார தோஷத்திற்கு என்னதான் வழி? பரிகாரம் இருக்கிறதா?

வழி இருக்கிறது. அது மிக மிக எளிமையான பரிகாரம்தான்.

ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகத் திருவுருவப் படத்தை வைத்து வழிபடுவதும் இரு தார தோஷ நிவர்த்தியாகும்!

இங்கே நன்றாக கவனியுங்கள்.

ஏதோ ஜோதிடர் கூறினார் என்பதற்காகஒரே முறைஆலயதரிசனம் செய்துவிட்டு தன் தோஷத்திற்குப் பரிகாரம் நடந்துவிட்டதாக நிறைய பேர் நம்பிக்கொண்டிருக்கின்றனர். இது தவறு. அந்த ஆலய தரிசன பரிகாரம் வருடத்திற்கு ஒருமுறை அல்லது நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்றுவரவேண்டும்.

அருகில் உள்ள புற்றுக்கோயிலுக்கு வாராவாரம் சென்று வரவேண்டும். இது போன்ற பரிகாரங்களைவிடுத்து, சிறிதும் நடைமுறைக்கு ஒப்பாத, விஷமத்தன பரிகாரங்களை செய்து உங்கள் பணத்தையும் நிம்மதியையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

---

இது, சமகாலத்தில் தேவைப்படும் மிக முக்கியப் பண்பு.

அடுத்து, வீடியோ கேம் விளையாடுபவர்களின் கேட்கும் திறன், பார்வைத் திறன் நன்றாக மேம்படுகிறது என்கிறார் ஜெஃப். ஏனென்றால் வீடியோ கேம் விளையாடும்போது உங்கள் எதிரி கண் முன்னே வந்தால், அவரை எதிர்கொள்ள உங்களுக்குக் கிடைக்கும் நேரம் மிகக் குறைவு. நொடிக்கும் குறைவான நேரத்தில், நீங்கள் அவரை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை முடிவுசெய்ய வேண்டும். அப்போது உங்கள் பார்வைத் திறன், கேட்கும் திறன், கவனிப்பு, வேகமாகச் செயல்படுதல், இவற்றை ஒருங்கிணைக்கும் மூளையின் பகுதிகள் என அனைத்தும் ஒன்று சேர்ந்து நிகழ்த்தும் அற்புதம், வீடியோ கேமில் எடுக்கும் ஒரு பாயிண்டாக மாறுகிறது.

வீடியோ கேம் விளையாடாதவர்களுடன் ஒப்பிடும்போது, நாம் மேலே பார்த்த திறன்கள், வீடியோ கேம் விளையாடுபவர்களுக்கு நன்றாக மேம்பட்டிருக்கிறது என்கிறார் அவர்.

**பிரச்சினைகளைக் கையாளும் திறனுக்கு...**

மேலும் வீடியோ கேம் விளையாடுபவர்கள், தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை வேறு கோணங்களிலிருந்து பார்ப்பதிலும் சிறப்பாக விளங்குகிறார்கள். இதனால் தீர்வுகளை அவர்களால் எளிமையாகக் கண்டடைய முடிகிறது. அதேபோல் திட்டமிடுதலில் மிகவும் சிறப்பாகச் செயல்படுவார்கள். உதாரணத்துக்கு, கொடுக்கப்பட்ட குறைந்த கச்சா பொருட்களைக்கொண்டு, குறைந்த நேரத்தில், தேவையான வேலையைச் செய்து முடித்துவிடுவார்கள். ஒரு வேலையைச் செய்ய 'எனக்கு இதெல்லாம் வேண்டும். அப்போதுதான் என்னால் பணியாற்ற முடியும்' என்று பிடிவாதம் பிடிக்கமாட்டார்கள்.

மருத்துவக் கல்வியில் இப்போதெல்லாம் அறுவைசிகிச்சையை முதலில் வீடியோ கேம்களின் உதவியுடன்தான் பழகுகிறார்கள். அப்படிப் பழகும் மருத்துவர்களின் கை, பார்வை ஒருங்கிணைப்பு அற்புதமாக இருப்பதும், விரைவாக முடிவெடுக்கும் பண்பும், கடினமான அறுவைசிகிச்சையின்போது குறைந்த நேரத்தில் நோயாளியைக் காப்பாற்ற உதவுகின்றன.

வீடியோ கேம் விளையாடுவதால் கிடைக்கும் இன்னொரு முக்கிய நன்மை, மிக வேகமாக ஒரு விஷயத்தைக் கற்கும் திறமை. கற்றல் திறன் பற்றி ஆய்வு செய்த பலர், வீடியோ கேம்களால் ஏற்படும் இந்த பாசிட்டிவ் தாக்கத்தை ஒப்புக்கொள்கிறார்கள்.



# WWE

## கிங்ஸ் ஆ:ப் தி ரிங்ஸ்

அதிரடி அடிதடி-5



# எல்லோரும் வில்லன்... ஸ்டோன் கோல்டு வில்லாதி வில்லன்!




ஸ்டோன் கோல்ட் ஸ்டீவ் அஸ்டினின் ரசிகர்களைப் பார்த்து, 'ஸ்டோன் கோல்ட் நல்ல வரா, கெட்டவரா' எனக் கேட்டால், 'நாயகன்' படத்தில் வரும் கமல் ஹாசனைப் போல திருதிருவென முழிப்பார்கள். அதே கேள்வியை ஸ்டோன் கோல்டிடம் கேட்டால் 'மாரி' படத்தில் வரும் தனுஷைப் போல 'இதுல என்ன சந்தேகம் நான் கெட்டவன்தான்' எனப் பெருமையாக மார்தட்டுவார். தன்னை ஒருபோதும் நல்லவனாக காட்டிக்கொள்ள அவர் விரும்பவேயில்லை. அவர் அப்படித் தான்.

**"ஸ்போர்ட்ஸ்மேன்ஷிப்... என்ன கருமம் அது. நீதி, நேர்மை, நியாயம் பற்றியெல்லாம் எனக்குப் பாடம் எடுக்காதே. ஸ்டீவ் அஸ்டினுக்குக் கருணையே கிடையாது. உனக்குக் கருணை வேணுமா? கடவுள் கிட்டே போ"**

**- ஸ்டோன் கோல்ட் ஸ்டீவ் அஸ்டின்.**

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள அஸ்டின் எனும் ஊரில்ஸ்டீவ்ஜேம்ஸ் ஆண்டர்சனாகப் பிறந்தார் ஸ்டீவ் அஸ்டின். அவர் சிறுவனாக இருந்தபோதே அவரது பெற்றோர்கள் ஒரு கட்டத்தில் விவாகரத்து பெற்று, பிரிந்தார்கள். அவரது அம்மா பெவர்லி, கென் வில்லியம்ஸ் என்பவரை மறுமணம் செய்துகொள்ள, தன் பெயரை ஸ்டீவ் ஜேம்ஸ் வில்லியம்ஸ் என மாற்றிக்கொண்டார் ஸ்டோன் கோல்ட். மொத்தம் அவருக்கு மூன்று சகோதரர்கள், மூன்று சகோதரிகள். ஸ்டோன் கோல்டின் தம்பிதான் கோல்டுபெர்க் என்பதெல்லாம் ஆறடி விட்டம் கொண்ட வட்ட வடை! பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் போதே அமெரிக்கன் ஃபுட்போல் விளையாட்டில் பிரித்து மேய்வார் ஸ்டீவ். அதில் கிடைத்த ஸ்கொலர் ஷிப்பின் மூலம், கல்லூரிப் படிப்பையும் முடித்தார்.



'நீங்க ரெஸ்ட்லர் ஆகாமல் இருந்தி ருந்தால், வேறு என்னவாக ஆகியிருப் பீர்கள்' என ஸ்டோன் கோல்டைப் பார்த்துக் கேட்டால், சில்லென பீர் வாங்கி கொடுத்து சியர்ஸ் அடிப் பார். சியர்ஸ் அடித்துவிட்டு ஒரு மடக்கு குடிப்பதற்குள், வயிற்றிலேயே மிதித்து ஸ்டன்னரை போட்டிருப்பார். அவர் ரெஸ்ட்லிங்கைத் தவிரவேறு எதையும் நினைத்துக்கூட பார்க்க வில்லை. கல்லூரியை முடித்து விட்டு முதல் வேலையாக ப்ரொ ரெஸ்ட்லிங் வகுப்பில் சேர்ந்தார். வெகு சீக்கிரத்திலேயே பயிற்சியை முடித்துவிட்டு CWA (கான்டி னென்ட்டல் ரெஸ்ட்லிங் அசோஷி யேசன்)ல் சில காலங்கள் சண்டையிட்டு வந்தார். அங்கு ஏற்கெனவே ஸ்டீவ் வில்லியம்ஸ் என்ற பெயரில் ஒருவர் இருந்ததால், ஸ்டீவுக்கு அவர் ஊர் பெயரைப் பின்னால் சேர்த்து ஸ்டீவ் அஸ்டின் எனப் பெயர் சூட்டினர். அதன்பின், USWA, WCW மற்றும் ECW-யிலும் சண்டையிட்டார். ஸ்ட்ரோங் ஃபவுண்டேஷன்...

கெவின் நாஷும் ஜிம் ரோஸும் WWE-யின் முதலாளி மெக்மெஹானின் மனதைக் கழுவி, ஸ்டோன் கோல்ட் ஸ்டீவ் அஸ்டினை WWE-க்குள் இழுக்க வைத்தார்கள். 1996ஆம் ஆண்டு WWE அரங்கிற்குள் காலடி எடுத்துவைத்த அவருக்கு, 'மில்லியன் டொலர் சம்பியன்ஷிப்' பெல்ட்டைக் கொடுத்து வரவேற்றார் டெட் டிபயாஸீ. தனது முதல் மட்சில் மாட் ஹார்டியை எதிர்த்து சண்டையிட்டு தோற்கடித்தார்.

WWE-யில் என்ட்ரியாகும்போது ரிங்மாஸ்டர் என்று தன் பெயரை மாற்றி வைத்திருந்தார் ஸ்டீவ். ஆனால், நிகழ்ச்சி தொகுப் பாளர் களோ 'ரிங் மாஸ்டர்' என்ற பெயரை மறந்து விட்டார்கள். நாள்கள் உருண் டோட 'ரிங் மாஸ்டர்' என்ற பெயர்ஸ்டீவுக்குப் பெரும் அலுப்பை கொடுத்தது. 'இத எப்படிப் படிச் சாலும் ஃபோர்ஸா இல்லையே... படிக் கும் போதே ஃபோர்ஸா இருக்குற மாதிரியான பெயரை யோசிக்கணும்' என நீண்டநாள் யோசித்து ஸ்டோன் கோல்ட் என்ற அடைமொழியைப் பிடித்தார். ரிச்சர்டு கக்லின்ஸ்கி எனும் சீரியல் கொலைகாரனின் பட்டப்பெயர் 'தி ஐஸ்மேன்'. அதிலிருந்து இன்ஸ்பையர் ஆனது தான் இந்த ஸ்டோன் கோல்ட்! பெயரையும் மாற்றி, கெட்டப்பை யும், செட்டப்பையும் மாற்றி தாறுமாறாய் வந்திறங்கினார்.

மொட்டைத் தலையும் ஆட்டுத் தாடியுமாக செமத்தியான லுக்கோடு ஸ்டீவ்வின் திமிரும் சேர, ரசிகர்கள் கொண்டாடினர். *1996* ஆம் ஆண்டு 'கிங் ஓஃப் தி ரிங்' பட்டத்தை ஜெயித்த கையோடு, மூச்சிரைக்க ஸ்டோன் கோல்ட் கொடுத்த பேட்டி, மிகப்பிரபலமான ஒன்று. அதில் பிறந்த வார்த்தைதான் அஸ்டின் *3:16*. அந்த வார்த்தை பதித்த டிஷர்ட்டுகள் மலையளவு விற்றுத் தீர்ந்தன. WWE நிறுவனத்தின் வரலாற்றிலேயே மிகவும் லாபகரமான வீரர் ஸ்டோன் கோல்ட்தான்.

**"அஸ்டின் 3:16 என்ன சொல்லு துனா நான் உன்னை நார்நாறாய் கிழிச்சுருவேன்!"**

**- ஸ்டோன் கோல்ட் ஸ்டீவ் அஸ்டின்**

ஆரம்பகாலத்தில், அப்போதைய சூப்பர் ஸ்டாரான ப்ரெட் ஹார்டிடம் ஆசண்டைக்கு வாடா, தடியா' என ஒரண்டை இழுத்துக் கொண்டே யிருப்பார் ஸ்டோன் கோல்ட். நீண்ட நாட்கள் அமைதிக்காத்து வந்த ப்ரெட் ஹார்ட், ஒரு கட்டத்தில் கடுப்பாகி 'வாடா, மோதிப்பார்த்துடலாம்' என வெறியானார். ப்ரெட் ஹார்ட்டுக்கும் ஸ்டோன் கோல்டுக்கும் இடையே நடந்த போட்டிகள் ஒவ்வொன்றும் தெய்வீக லெவல். பக்காவான ஹீரோ வில்லன் காம்பினேஷன் அமைந்த தாறுமாறான ஒரு ஆக்ஷன் படத்தைப் பார்ப்பது போன்ற ஃபீலைத் தரும். 13வது ரெஸ்ட்ல்மேனியாவில், ப்ரெட் ஹார்ட்டுக்கும் ஸ்டோன் கோல்டுக்கும் இடையே 'சப்மிஷன் மட்ச்' நடந் தது. அதில் ப்ரெட் ஹார்ட் வெற்றிப்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# நாக தோஷம் 30 தகவல்கள்

ராகு தோஷத்தால் கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள நாக தோஷ பரிகாரம் பற்றிய 30 சிறப்பு தகவல்களை படித்து பலன் பெறலாம்.

1. "கால சர்ப்பயோகம் கொண்ட ஜாதகர்கள், ராகு காயத்திரியை ஆயுள் முடியுமட்டும் தினமும் தங்களால் முடிந்த அளவு ஜபித்துக் கொண்டே வருவது மிகச் சிறந்த பரிகாரம்.
2. ஜோதிட சாஸ்திரத்தில் நிழற்கிரகங்கள் என்று ராகு கேதுவை வர்ணக்கப்பட்டாலும் இவர்கள் இரண்டு பேரும் சனி பகவானின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள்.
3. கிரந்தங்களிலும் பல்வேறு ஓலை சுவடிகளிலும் ராகுகேதுவின் பெருமைகளைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொரு ராசிகளில் சஞ்சரிக்கும்போது என்ன என்ன செய்வார்கள் என்பதைப் பற்றி நிறைய செய்திகள் உள்ளன.
4. ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து 1, 5, 9 இந்த ஸ்தானங்களில் சனி, ராகு, கேது, போன்ற கிரகங்கள் இருக்கும் பொழுது அது நாகதோஷம் உடைய ஜாதகமாகிறது.
5. நாக தோஷங்கள் எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் முன் ஜென்மத்தில் ஆண் நாகமும், பெண் நாகமும் ஒன்றாக இணைந்து இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால், இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் ராகு என்ற கருநாகம் நின்று கணவனுக்கு தோஷத்தை எற்படுத்தும்.
6. பாம்பு தன்னுடைய பசிக்காக இரையை தேடி செல்லும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் தொழில் ஸ்தானமான லக்னத்துக்கு பத்தாம் இடத்தில் ராகுவோ, கேதுவோ நின்று, தொழில் ஸ்தானத்துக்கு தோஷத்தை உருவாக்கும்.
7. பாம்பு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்திலும், அல்லது தனது குட்டிகளுடன் ஒன்றாக இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஐந்தாம் இடமான புத்திர ஸ்தானத்தில், ராகு நின்று நாக தோஷத்தை ஏற்படுத்தும்.
8. புராண காலங்களில் நாகதோஷம் எதற்காக பார்க்கப்பட்டது என்றால், ஒருவர் சன்னியாசம் பெற்று காடுகளிலும், மலைகளிலும், கடுமையான தவங்கள் செய்வதற்கு கடுமையான விஷ ஜந்துகளினால் இவருக்கு ஆபத்து ஏற்படுமா என்பதை அறிந்த பின்னரே அவருக்கு சன்னியாசம் கொடுக்கப்பட்டது. நாக தோஷம் இதற்காகத்தான் பார்க்கப்பட்டது. நாளடைவில் அது ஒரு பயப்படக் கூடிய தோஷமாக பார்க்கப்பட்டது.
9. ஒவ்வொரு மாதமும் திரியோதசி திதியன்று, சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. பிரதோஷ வேளையில் மாலை 4.30 மணியில் இருந்து 6 மணிக்குள் இவ்வழிபாடு நடைபெறும். ராகுவால் ஏற்படும் நாக தோஷத்தை போக்க இது சிறந்த வழிபாடாகும்.
10. சர்ப்ப பரிகாரங்கள் செய்யும்போது மிகுந்த ஆசாரத்துடன் செய்ய வேண்டும். சைவ உணவு விரதம் மேற்கொள்ள வேண்டும். தான தர்மங்களை மனம் கோணாமல், மனமுவந்து நம்மால் முடிந்த அளவு செய்ய வேண்டும்.
11. நாகப் பிரதிஷ்டம் என்பது ஆண் பாம்பும் பெண் பாம்பும், நாகப்பாம்பும், சாரைப் பாம்பும் இணைவது போன்று கல்லில் வடித்து அரசும், வேம்பும் சேர்ந்திருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்தால் விசேஷம் என்று மனுநீதி என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.
12. நாக தோஷம் பரிகாரம் தரும் ஆலயங்களில், பாம்பு புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு 11 வாரம் தொடர்ந்து புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபட்டு வந்தால் நாக தோஷத்தால் தடைப்பட்டு வரும் திருமணம் விரைவில் நடைபெறும்.
13. தங்கம் அல்லது வெள்ளி சிறு ஐந்து தலை நாகம் செய்து வீட்டில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகம் செய்து, பூசித்து பிறகு ஒருவருக்கு புது வேட்டி துண்டு தாம்பூலம் தட்சணையுடன் நாக விக்கிரகத்தையும் தானம் செய்யலாம்.



14. கருங்கல்லில் நாகப் பிரதிஷ்டை செய்து ஆறு, குணம் அருகில் வைத்து நாற்பது நாள்கள் பால பிஷேகத்துடன் பூசித்து தினமும் 108 முறை வலம் வந்தால் நாக தோஷம் நிவர்த்தியாகும்.
15. இரண்டு நாகங்கள் பின்னிக் கொண்டு ஒன்றின் முகத்தை ஒன்று பார்க்குமாறு கல்லில் வடித்து அரசமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள்கள் விளக்கேற்றி வைத்து பூசித்தால் நாகதோஷம் விலகும்.
16. கண்ணன் நடனமாடுவது போலவும், அவனுக்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போலவும் கல்லில் வடித்து வேம்பும் அரசும் இணைந்திருக்கும் குளக்கரையில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள் விளக்கேற்றி வலம் வந்து வணங்கினால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.
17. சிவலிங்கத்திற்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போல் சிலை வடித்து நதிக்கரை அல்லது, குளக்கரையில் பிரதிஷ்டை செய்து, நாற்பது நாள் பூசித்து வலம் வந்தால் நாகதோஷம் பரிகாரமாகும்.
18. குளம் அல்லது நதிக்கரையில் அரசு, வேம்பு கன்றுகளை நட்டு, முறையாகத் திருமணம் செய்து குறைந்தது நூறு தம்பதிகளுக்கு விருந்தும் தட்சணை தாம்பூலம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகி புத்திரர்கள் பிறப்பதுடன் வாழ்க்கையும் இன்பமாக அமையும்.
19. வசதி உள்ளவர்கள் ஓர் ஏழைக்கு பயிர் நிலம் வாங்கி தானம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.
20. ராகு காலத்தில் பாம்புப் புற்றுக்கு முட்டை, பால் வைத்து வழிபாடு செய்வது நற்பலன்களை உண்டாக்கும்.
21. கோமேதகக் கல் வைத்த மோதிரம் அணியலாம். இதனால் ராகுவினால் உண்டாகும் அசுப பலன்கள் குறையும்.
22. ராகு பகவானுக்கு உளுந்து வடை விசேஷமாகும்.அதை நெய்வேத் தியம் செய்து தானம் செய்யலாம். கருப்பாக உள்ளவரிடம் நான்கு வடை கள் கொடுத்து சாப்பிடச் சொல்வது நல்லது.
23. ராகு, தோஷம் ஏற்பட்டு பருவ மடைந்தும் நீண்ட காலம் திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்கள் அரச மரமும், வேப்ப மரமும் சேர்ந்துள்ள இடத்தின் கீழுள்ள நாக சிலைக்கு பால் விட்டு, அபிஷேகம் செய்து வர வேண்டும். செவ்வாய்க் கிழமையில் செய்வதே நல்லது. இவ்வாறு 48 நாட்கள் செய்ய வேண்டும்.
24. பாம்பு புற்றுக்கு பால் வார்த்தும் முட்டை வைத்தும் ஒரு மண்டலம் வழிபாடு செய்யலாம். இதனால் திருமணம் விரைவில் நடக்கக்கூடும். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கும், நாகதோஷம் நீக்கி புத்திர பாக்கியம் விரைவில் கிடைக்கும். திருமணம் விரைவில் நடக்கவும் இதுபோல் வழிபாடு செய்து வர வேண்டும்.
25. ராகு பகவானுக்கு உளுந்து பிரீதியான தானியம் ஆகும். இதை நவக்கிரக சன்னதியில் தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் ராகுவுக்கு வைத்து வலம் வந்து பூஜித் தால் தோஷம் நீங்கும். இதனால் சகல கஷ்டங்களும் நீங்கும்.
26. ராகுவுக்கு அதிதேவதை பத்ரகாளி ஆகும். எல்லா சிவாலயங்களிலும் வடக்கு பார்த்த நிலையில் துர்க்கை அம்மன் இருக்கும். அந்த அம்மனுக்கும் வெள்ளிக்கிழமை தோறும் எலுமிச்சை பழத்தோலில் விளக்கேற்றி பூஜித்து வர சகல தோஷங்களும் தீரும்.
27. புதூர் நாகதம்பிரான்ஆலயத்தில் வழிபட்டு வந்தால் நாகதோஷத்தை நீக்கலாம்.
28. தினசரி துர்க்கை அம்மனுக் குரிய ஸ்தோத்திரங்களை படித்து வர வேண்டும். தினசரி அரசு, வேம்பு மரத்தடியில் உள்ள விநாயகர், நாகர் சிலைகளை 9 தடவை வலம் வர வேண்டும். துர்க்கைக்கு அவர்கள் இருக்கும் கிரக வீட்டின் அதிபர்கள் கிழமைகளில் அர்ச்சனை செய்ய வேண்டும்.
29. நவக்கிரக பீடத்தில் உள்ள ராகு பகவானை தினசரி வலம் வர வேண்டும். பிரச்சனையின் தீவிரத்திற்கு ஏற்ப 9, 27, 108 என சுற்றுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து இவ்வாறு 48 நாட்கள் வலம் வர தோஷங்கள் யாவும் நீங்கும்.
30. ராகு பகவானுக்குரிய தியான மற்றும் காயத்ரி அஷ்டோத்திர மந்திரங்களை தினமும் ஒரு முறையாவது சொல்லி வர வேண்டும்.

---

பெற்றுவிட்டார். ஆனால், வெற்றிப் பெற்றும் லொக்கை விடுவிக்காமலேயே இருக்க, மக்கள் ப்ரெட் ஹார்டின் மீது கோபமானார்கள்.

அந்தக் கணம், ப்ரெட் ஹார்ட் வில்லன் ஆனார். ஸ்டோன் கோல்ட் ஹீரோ ஆனார். முழுமையான ஹீரோவாக அல்ல, ஆன்டி ஹீரோவாக. அதன் பிறகு, ஷோன் மைக்கல்ஸ், அண்டர்டேக்கர், தி ரொக் என எத்தனையோ பேரிடம் சண்டைப் பிடித்திருக்கிறார். அத்தனை சண்டைகளுமே அற்புதமானவை. ஸ்டோன் கோல்டும் தி ரொக்கும்தான் WWE-ன் தலதளபதி. ஸ்டோன் கோல்டின் கடைசி சண்டையும் தி ரொக்கோடுதான் நடந்தது. அதன் பிறகு, அவ்வப்போது விருந்தினராக வந்து ரசிகர்களை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறார்.

பியர், மண்டை ஓடு, மிடில் ஃபிங்கர் என முழுக்க முழுக்க அடல்ட்களுக்கான சூப்பர்ஸ்டாராக மாறினார். WWE-ன் உரிமையாளர் மெக்மேஹானையே தூக்கிப்போட்டு வெளுப்பது, கெட்டகெட்ட வார்த்தையில் கழுவி ஊற்றுவது, ஒரே ஒரு ஸ்டன்னரைப் போட்டுவிட்டு பிரச்னையை க்ளோஸ் செய்வதென ஸ்டோன் கோல்டின் ஒவ்வோர் அசைவுக்கும் புதிதாய் ஒருவன் அவரது ரசிகனாகிக்கொண்டிருந்தான். ஸ்டோன் கோல்டும் ட்ரிபிள் ஹெச்சும் சேர்ந்து 'பவர் ட்ரிப்' என்ற புது அணியை ஆரம்பித்தார்கள். அப்படியொரு இரக்கமற்றவர்களின் கூட்டணியை WWE அதற்கு முன் பார்த்ததேயில்லை. மெக்மேஹான் ஒருமுறை ஸ்டோன் கோல்டுக்கு பயந்து பேன்ட்டிலேயே உச்சா அடித்த சம்பவமெல்லாம் இருக்கிறது.

எங்கு கண்ணாடி க்ளாஸ் உடையும் சத்தம் கேட்டாலும் சரி, WWE ரசிகர்களுக்கு ஸ்டோன் கோல்டுதான் நினைவுக்கு வருவார். அரங்கத்தில் கண்ணாடி உடையும் சத்தம் கேட்ட அடுத்தகணம், ரசிகர்களின் கைத்தட்டலும் விசிலும் கூரையை அசைத்துப் பார்க்கும். சமீபத்தில் அவர் அரங்கிற்குள் என்ட்ரியாகும்போதும் அதேதான் நடந்தது. இனியும் அதேதான் நடக்கும். ஏனெனில், ரெஸ்ட்லிங் ரசிகர்களுக்கு இன்னொரு ஸ்டோன் கோல்ட் எந்த யுகத்திலும் கிடைக்கமாட்டார். "And that's the bottom line, because Stone Cold said so."

தொடரும்...




**சார்லஸ் டார்வின்**

தன் முன்னால் வந்து அமர்ந்த அந்த 22 வயது இளைஞனின் மூக்கை உற்றுப்பார்த்தார், கப்டன் ஃபிட்ஸ்ராய். "நீ யார்... என்ன படித்திருக்கிறாய்?"

"என் பெயர் சார்லஸ் டார்வின். என் அப்பா ராபர்ட் டார்வின். அவர் ஒரு மருத்துவர். என் தாத்தா எராஸ்மஸ், ஒரு தாவரவியல் நிபுணர். நான் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் மருத்துவம் படித்தேன்."

"அதென்ன சிறிது காலம்?"

"எனக்கு அதில் ஆர்வம் இல்லை. என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. எனக்கு ரத்தம் என்றால் கொஞ்சம் பயம்."

ஃபிட்ஸ்ராய்க்கு சிரிப்பு வந்தது. "ரத்தத்தைக் கண்டு பயப்படும் டாக்டரா நீ? சரி, அடுத்து என்ன செய்யப்போகிறாய்?"

"நான் ஒரு பாதிரியாக வேண்டும் என அப்பா விரும்புகிறார். எனக்கு அதில் விருப்பம் இல்லை. எனக்கு இந்த உலகைப் பார்க்க வேண்டும். உலகில் உள்ள விலங்குகள், பூச்சிகள், பறவைகள், மீன்களை ஆராய வேண்டும். இயற்கையின் மாணவனாக இருந்துவிடவே விரும்புகிறேன். உங்களுடன் கப்பலில் வந்தால், பலவிதமான தீவுகளைப் பார்க்கலாம். வித்தியாசமான உயிரினங்களைக் காணலாம். நிறையக் கற்றுக்கொள்ளலாம்."

ஃபிட்ஸ்ராய் அப்போதுதான் கவனித்தார். அந்த இளைஞரின் மூக்கு மட்டுமல்ல, அவன் பேச்சும் சரியில்லை. வார்த்தைகள் திக்குகின்றன. சில வார்த்தைகள் சரியாக வரவில்லை. குறிப்பாக, டபிள்யூ என்னும் எழுத்தைச் சரியாக உச்சரிக்க முடியவில்லை. கண்களில் ஆர்வமும் துடிப்பும் இருந்தாலும் உடல் வலுவாக இல்லை.

சார்லஸ் டார்வின் நிறுத்தாமல் பேசிக்கொண்டே இருந்தார். "மருத்துவப் படிப்பிலும் பழசாகிப் போன பாடங்களையே நடத்தினார்கள். அதையெல்லாம் படித்தால், ஒரு பயனும் இருக்காது. அற்புதமான, விசித்திரமான பல உயிரினங்கள் உலகில் இருக்கின்றன. அதனால், நேரடியாக உலகைப் படிக்க முடிவெடுத்துவிட்டேன்."

"அதெல்லாம் சரிதான். ஆனால், உன்னை எதற்காக நான் பீகிள் பயணத்தில் அழைத்துச்செல்ல வேண்டும்? உன் உடல் வலுவாக இல்லை. உன் பேச்சு சரியில்லை. படிப்பும் அரைகுறைதான்."

டார்வின் குரலில் பதற்றம் தொற்றிக் கொண்டது. "என் வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான பயணம். தயவுசெய்து மறுத்துவிடாதீர்கள். கடல் கடந்து தீவுகளுக்குச் செல்வதே என் கனவு. அதற்காகவே கஷ்டப்பட்டு ஸ்பானிஷ் மொழியும் கற்றுவைத்திருக்கிறேன்."

உண்மையில், டார்வினைப் பார்த்த அடுத்த விநாடியே கப்டன் முடிவு செய்துவிட்டார். இவன் நமக்குச் சரிவர மாட்டான். இவனால் எதையும் ஒழுங்காகச் செய்துமுடிக்க முடியாது. இருந்தாலும், ஒரு பயணத்துக்காகக் கஷ்டப்பட்டு ஸ்பானிஷ் மொழியைக் கற்றிருக்கிறான் என்றால், இந்த அளவுக்குப் பயணத்தை நேசிக்கும் ஒருவனை நிராகரிப்பது சரியில்லை அல்லவா?

1831 டிசம்பர் 26 அன்று இங்கிலாந்தில் உள்ள பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து கிளம்ப வேண்டும் என்பது திட்டம். ஹெச்.எம்.எஸ் பீகிள் தயாராக இருந்தது. முந்தைய தினம் கிறிஸ்மஸ் என்பதால், யாருமே வரவில்லை. ஆடல், பாடல், கொண்டாட்டம் என மயங்கிவிட்டார்கள். அதனால், மறுநாளுக்குப் பயணத்தை ஒத்திவைத்தார் கப்டன். 27ம் திகதி எல்லோரும் சரியாக வந்துவிட்டார்கள். மொத்தம் 73 பேர். நல்ல காற்று, நல்ல வெளிச்சம். அற்புதமான வானிலை. பீகிள் கப்பல் உற்சாகமாக விடைபெற்றுக்கொண்டது.

இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம், அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்வது. புதிய தீவுகளை, நிலப் பகுதிகளை, உயிரினங்களை, செடிகொடிகளைச் சேகரித்து ஆய்வுசெய்வது. இயற்கை விஞ்ஞானிகள், கனிம வள நிபுணர்கள், உயிரியல் ஆய்வாளர்கள் போன்ற பலரும் அந்தப் பயணத்தில் பங்கேற்றிருந்தனர். இவர்களோடுதான் டார்வினும் இருந்தார்.

கப்பலைச் சுற்றிவந்த கப்டன் அதிர்ந்துபோனார். ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தார் டார்வின். அருகில்சென்றுபார்த்தார். டார்வினின் கண்கள் பாதி மூடியிருந்தன. உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. கப்பல் கிளம்பி சிறிது நேரத்திலேயே இப்படித் துவண்டுவிட்டால், இவன் எப்படி முழுப் பயணத்தையும் தாக்குப்பிடிக்கப்போகிறான்?

ஜனவரி 4 அன்று, 'மதேரா' என்னும் தீவுக்கு வந்து சேர்ந்தது பீகிள் கப்பல். கப்டன், இன்னொருமுறை டார்வின் தங்கியிருந்த கபினுக்குச் சென்று பார்த்தார். ம்ஹூம், பேச்சு மூச்சே இல்லை. ஆய்வாவது, மண்ணாங்கட்டியாவது? எழுந்து நிற்கக்கூட வலுவில்லை டார்வினிடம்.

இரண்டு தினங்கள் கழித்து, சாண்டர் குரூஸ் பகுதியில் உள்ள டெனேரைஃப் என்னும் தீவை நெருங்கினர். டார்வின், கபினில் இருந்து வெளியில் வந்தார். டெனேரைஃப் பற்றி அவர் கேள்விப்பட்டுள்ளார். அவர் கண்களில் உற்சாகம் நிரம்பியிருந்தது. அவரைப் பார்த்த கப்டன் ஃபிட்ஸ்ராய்க்கும் சற்று உற்சாகம் பிறந்திருந்தது.

"டார்வின், நீ முழுப் பயணத்தையும் தூங்கியே கழித்துவிடுவாயோ என்று பயந்துவிட்டேன்" என்றார்.

டார்வின் சிரித்தார். "அதெப்படி? டெனேரைஃப் போகவேண்டும் என்பதற்காகத்தானே இந்தக் கப்பலிலேயே ஏறினேன்."

"உன்னால் உண்மையிலேயே ஆய்வுகள் செய்யமுடியுமா?"

"என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள். என்னிடம் எத்தனை விதமான பறவைகளின் இறகுகள் இருக்கின்றன தெரியுமா? எவ்வளவு பூச்சிகளைச் சேமித்து வைத்திருக்கிறேன். விதவிதமான கற்கள், வண்ண மண் துகள்கள், சிப்பிகள், வித்தியாசமான மர வேர்கள், எலும்புகள் இருக்கின்றன. சில பறவைகளின் உடல்களை வைக்கோல், பஞ்சு வைத்துத் தைத்து, பாதுகாத்துவருகிறேன். பலவிதமான வேதியியல் பரிசோதனைகள் செய்திருக்கிறேன். விதவிதமான வாயுக்கள் உருவாவதைப் பார்த்திருக்கிறேன்."

கப்டன், நம்பிக்கையுடன் டெனேரைஃப் நோக்கி கப்பலைச் செலுத்தியபோது, சில நபர்கள் சிறிய படகுகளில் நெருங்கினார்கள். "நீங்கள்தான் பீகிள் கப்பலின் கப்டனா? உங்களுக்கு ஓர் அவசர செய்தி. நீங்கள் டெனேரைஃப் தீவுக்குச் செல்ல முடியாது. கொலரா நோய் பரவிக்கொண்டிருப்பதால், பாதையை மாற்றிக்கொள்ளுங்கள்."

கப்டன் மட்டுமல்ல, டார்வினின் உற்சாகமும் சட்டென்று வடிந்துபோனது. பீகிள் கப்பல், கேப் வெர்டே தீவை நோக்கி நகரத் தொடங்கியது. டார்வின் தன் கபினுக்குச் சென்று சுருண்டு படுத்துவிட்டார்.

சாண்டியாகோ என்னும் தீவை வந்தடைந்ததும், பீகிள் கப்பலில் இருந்த எல்லோரும் இறங்கினார்கள். டார்வின் வேண்டா வெறுப்பாகத் தரையில் கால் பதித்தார். கனவு கண்ட இடத்துக்குப் போகமுடியாமல், கண்ட இடங்களில் இறங்கி என்ன செய்வது?

கரையைவிட்டு நகர்ந்து நடக்க ஆரம்பித்தார் டார்வின். பச்சைப் பசேலென்று மரங்களும் செடிகொடிகளும் பரவிக்கிடந்தன. ஆங்காங்கே சின்னச்சின்ன குட்டைகள், குளங்கள். டார்வின் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தபடி நடந்தார். குளங்களில் சின்னச்சின்ன மீன்கள் தென்பட்டன. கவனமாகப் பார்த்தார். அந்த மீன்களின் அமைப்பு வித்தியாசமாக இருந்தது. அப்படியே உட்கார்ந்துவிட்டார். நோட்டுப் புத்தகத்தை விரித்து வரைய ஆரம்பித்தார். மீன்களின் கண்கள், உடல் அமைப்பு, அசையும் செவுல்கள் அனைத்தையும் குறித்துக்கொண்டார். அப்போதுதான் கவனித்தார், இதென்ன நீல நிற மீன் காணாமல் போய், சிவப்பு நிற மீன் தோன்றிவிட்டது. நீல மீன் எங்கே?

உன்னிப்பாகக் கவனித்தார். சட்டென்று மின்னல் வெட்டியது. நான் பார்ப்பது ஒரே மீன்தான். நீல நிற மீன்தான், தன்னை சிவப்பு நிற மீனாக மாற்றிக்கொண்டிருக்கிறது. ஏன் அப்படிச் செய்கிறது? இந்தத் திறன் மீனுக்கு எப்படி வந்தது?

பின்னால் வந்த கேப்டன், 'ஒரு மீனைப் பார்த்து பக்கம் பக்கமாக என்ன எழுதிக்கொண்டிருக்கிறான் இவன்?' என நினைத்தார்.

சிறிது நேரத்தில், டார்வின் எழுதுவதை நிறுத்திவிட்டு, தனக்குத் தானே பேசிக்கொள்ள ஆரம்பித்தார். சரி, இந்தப் பயணம் தோல்வி அடைந்துவிட்டது என்னும் முடிவுக்கு வந்தார் கேப்டன். வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த முக்கியப் பயணமாக அது மாறப்போவது அவருக்கு அப்போது தெரியாது.

(பயணம் தொடரும்)



# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

**வடக்கு மாகாணத்தின் பனை தென்னை வள உற்பத்திப் பொருட்களை அதிகம் பெற்று தரும் ஒரே நிறுவனம் கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு சங்கம்**

நீண்ட கால வாழ்வுக்கும் நீரிழிவு நோய்க்கும் சிறந்த அரு மருந்தான வெல்ல கட்டி தயாரிப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகளும் எமது உற்பத்திப் பொருட்களை விலை கழிவுடன் எமது தலைமைக் காரியாலமான A9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியிலும் மற்றும் கண்டாவளை பகுதியில் அமைந்துள்ள வெளிக்கண்டல் வெல்ல உற்பத்தி தொழிற்சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.





எமது பொருட்களை முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளும் வாடிகையாளர்களுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்.

A9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி
A9, Road, kardipoke juncation, kilinochchi
**T.P: 021 228 3635**
**021 492 4218**









# PSP Rent a Car

## கார் வாடகைக்கு விடப்படும்

180/8, Sir Pon Ramanathan Road, (Opposite to Science Faculty )
யாழ் பல்கலைக்கழகம் முன்பாக




**Prius, Premio, axio, aqua, yaris, alto, indica, kdh van**

வருட, மாத வார நாள் அடிப்படையில் கார் வாடகைக்கு வழங்கப்படுவதுடன் திருமண மற்றும் சுப காரியங்களுக்கும் வாடகைக்கு வழங்கப்படும்

**Contact 077 3777 502 / 0777852456**

e.mail: psprawin25@gmail.com Facebook: psprent a car



TILKO hotels

# TILKO

## JAFFNA CITY HOTEL










**Mob : 077 780 393, 0777 696 443**


Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

# அனுஷா ஜுவல்லர்ஸ்

(இல.497/3 கண்டி வீதி, கிளிநொச்சி)

உரிமையாளர்
0212284144

இந்த புதுக்கடையினை
இறைவன் திருவருள்
துணை கொண்டு திறந்து
வைக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறிய தருவதுடன்
அன்புடன் அனைத்து
வாடிக்கையாளர்களையும்
அன்புடன்
அழைக்கின்றோம்







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 22.04.2018 அன்று வெளியிடப்பட்டது.